மஞ்சரி

ஜய - ஐப்பசி
அக்டோபர், 1954

திருடர்கள் ஜாக்கிரதை
கண்ணுக்குள்ளே கண்ணாடி
விநோதமான சட்டங்கள்
சீன நிழலாட்டம்
கோழிக் கள்ளன்
(பிரெஞ்சுக் கதை)

THE • TANJORE •

-6-
அணா

பக்தன் யார்?

குறை எதுவுமின்றிச் சௌக்கியமாக இருக்கும்பொழுது எல்லோரும் கடவுள் பெயரைச் சொல்கிறார்கள். ஆனால் ஒன்றும் கைகூடி வராமல் துன்பத்தில் தத்தளிக்கும் சமயத்தில் கடவுளை மறவாதிருப்பவனே உண்மையான பக்தன்.

—மகாத்மா காந்தி.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்	கி. தாமோதரன்
கா. ஸ்ரீ ஸ்ரீ.	கி. சாவித்திரி அம்மாள்
த. நா. ஸேனாபதி	சீதா தேவி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி	'ஆர்வி'
கௌரி அம்மாள்	மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 : : அக்டோபர் 1954 [இதழ் 10

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

இந்தியத் தபால் இலாகாவின் சிறந்த சேவையை ராஷ்டிரபதி ராஜன்பாபு ஒரு சந்தர்ப்பத்தில் புகழ்ந்திருக்கிறார். 1947-இல் 20 ஆயிரத்துச் சொச்சம் தபால் ஆபீஸ்கள்தான் கிராமங்களில் இருந்தன. அதற்குப் பிறகு 25 ஆயிரம் தபால் ஆபீஸ்களுக்கு மேல் கிராமங்களில் திறந்திருக்கிறார்கள். தபால் பட்டுவாடா செய்வது மாத்திரம் அல்ல; ராணுவ பென்ஷன்களைக் கொடுப்பது, கொயினா விற்பது, ஸேவிங்ஸ் பாங்கு நடத்துவது, சர்க்கார் விளம்பரங்களை எங்கும் பரப்புவது முதலிய பல காரியங்களைத் தபால் இலாகா புரிகிறது. அதைப் புகழ்வது முற்றும் பொருத்தம். ஆனால், கார்டு, கவர் கட்டணங்கள் வர வர அதிகரித்துக்கொண்டே வந்திருப்பது ஏழை மக்களுக்குப் பெரிய அசௌகரியமாயிருக்கிறது. நகரங்களுக்குள்ளே அரையணா கார்டு வழங்குவதுபோல் ஓர் அணா கவரும் வழங்கினால் மிகவும் சௌகரியமாயிருக்கும். கட்டணங் குறைப்பதால், தபால் போக்குவரத்து அதிகமாகி, வருமான வித்தியாசத்தை ஈடு செய்துவிடும். இதனால் இலாகாவுக்கு எந்தவித நஷ்டமும் ஏற்பட்டு விடாது.

பிலிம் விசாரணைக் கமிட்டி சில சிபாரிசுகளைச் சர்க்காருக்குச் செய்திருக்கிறது. அவைகளை ஒட்டிய பரிசுத் திட்டம் ஒன்றைச் சர்க்கார் கைக்கொள்ளப் போகிறார்கள். பொழுதுபோக்குக்கான படங்கள், டாகுமெண்டரி படங்கள், குழந்தை படங்கள் இவைகளில் ஒவ்வொன்றிலும் சிறந்த படத்துக்கு ஒரு பரிசு வீதம் சர்க்கார் வழங்கப்போகிறார்கள். டாகுமெண்டரி படங்களைச் சர்க்காரே எடுக்கிறார்கள். கூடியமட்டும் அவை நேர்த்தியாயிருக்கின்றன. குழந்தைகளுக்கான படங்களை இந்தியாவில் யாரும் எடுக்கவில்லை. சர்க்காரின் பரிசுத் திட்டம் இந்த இரண்டு துறையிலும் பட முதலாளிகள் இறங்கும்படி அவர்களைத் தூண்டுமா என்பது சந்தேகம். பொதுவான பொழுதுபோக்குப் படங்களில் சிறந்ததைப் பொறுக்கி எடுக்கும் வேலையோ மிகவும் கஷ்டம். எந்தக் கலைத் துறையிலுமே, பரிசுத் திட்டங்களின் நோக்கம் நல்லதாயிருக்கலாம்; ஆனால், அவற்றின் பலன் அவ்வளவாகச் சுவாரஸ்யப்படுவதில்லை.

* * *

பாரதத்தின் மற்ற எந்த ராஜ்

யத்தையும் விட, நம் சென்னை ராஜ்யந்தான் கிராம மின்சார வசதியில் முன்னணியில் நிற்கிறதாம். இதை மந்திரி ஸ்ரீ வி. சுப்பிரமணியம் குறிப்பிட்டிருக்கிறார். இங்கே 2,000 கிராமங்களுக்கு மேல் மின்சார வசதி பெற்றிருக்கின்றன. வேறு எந்த ராஜ்யத்திலும் இவ்வளவு அதிகமான கிராமங்கள் வசதி பெறவில்லை. நம் ராஜ்யத்தில் நீர் மின்சாரத் திட்டங்களை மிகவும் பெருக்க வசதி இல்லை. ஆகவே, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி எடுப்பதை விருத்தி செய்து, அந்த நிலக்கரியை உபயோகிக்கும் யந்திரங்களைக் கொண்டு மின்சார உற்பத்தி யந்திரங்களைப் புதிதாக அமைக்கப் போகிறார்களாம். இந்த வருஷ ஆரம்பத்தில் 2,04 000 கிலோ வாட் பவர் யந்திரங்கள் நமக்கு இருந்தன. இன்னும் இதைத் தவிர, பெரியாறு மூலம் 75,000 கிலோவாட், குண்டா மூலம் 1,30,000 கிலோ வாட், பழுப்பு நிலக்கரி யந்திரங்களின் மூலம் 1,00 000 கிலோவாட் ஆகிய அதிகமான சக்தியைக் கொஞ்ச காலத்தில் நாம் பெறுவோம். சிறந்த எஞ்சினீர்களைக் கொண்டு இந்தத் திட்டங்களை நிறைவேற்றும் போது, வாலிபரின் வேலையில்லாத் திண்டாட்டம் பெரிதும் குறையும்; நாட்டுக்கும் க்ஷேமம்.

* * *

பம்பாயில் அடுத்த வருஷம் டெலிவிஷன் வந்துவிடும் என்கிறார் இந்திய சர்க்காரின் பிரசார மந்திரி. தெற்கே சென்னை ராஜ்யத்தில் இருக்கிறோமே நாம், நமக்கு எவ்வளவு காலத்துக்கு அப்புறம் அந்த வசதி கிடைக்கப் போகிறதோ தெரியவில்லை. ரேடியோ சம்பந்தப்பட்டமட்டில், இந்தியாவிலேயே முதல் முதலாகச் சென்னையில்தான் ஒலிபரப்பு ஆரம்பித்தது. 1924 மே மீ 16-ஆம் தேதி ஸ்ரீ வி. வி. கிருஷ்ணசாமி செட்டியாரின் தலைமையில் அமைந்தது சென்னை ரேடியோ கிளப். பிறகு பம்பாய், கல்கத்தா இரண்டு நகரங்களிலும் ரேடியோ கிளப்புகள் அமைந்தன. இவை மூன்றும் ஓரளவு சர்க்கார் உதவி பெற்று ஒலிபரப்பி வந்தன. 1927-இல் இந்தியன் பிராட்காஸ்டிங் கம்பெனி ஒன்று அமைந்து பம்பாயிலும் கல்கத்தாவிலும் பெரிய டிரான்ஸ்மிட்டர்களை நிறுவியது. அந்தக் கம்பெனி 1930-இல் திவாலாகிவிடவே, இந்திய சர்க்கார் அதை எடுத்துக் கொண்டார்கள். வருமானம் போதாததால், அதை அடியோடு மூடி விடலாமா என்று சர்க்கார் முதலில் நினைத்தார்கள். பிறகு ரேடியோ செட்டுகளுக்கு இறக்குமதி வரி 50 சதவிகிதம் போட்டு வசூலித்துக்கொண்டு, தொடர்ந்து ரேடியோ ஒலிபரப்பைச் சர்க்கார் நீடித்து நடத்தி வரலானார்கள். ரேடியோ ஒலிபரப்பில் முந்திக் கொண்ட சென்னை, டெலிவிஷனில் எவ்வளவு காலம் பிந்தி விடப்போகிறதோ! ரேடியோ ஒலிபரப்பு என்றால், வெகு தூரத்திலிருந்து கேட்டுவிடலாம். டெலிவிஷன் காட்சியையோ நாற்பது ஐம்பது மைலுக்கு மேற்பட்ட தூரத்தில் உள்ளவர்கள் பார்க்க முடியாது. ஆகவே, டெலிவிஷன் டிரான்ஸ்மிட்டர்கள் நமக்கென்று ஏற்படும் வரையில் நாம் காத்திருக்க வேண்டியதுதான்.

சொந்த முறையிலும் இவர்கள் வைத்தியம் செய்வதால் என்ன விபரீதம் ஏற்படுகிறது!

சர்க்கார் டாக்டர்

சசிபூஷண் ஸிம்ஹல்

“உனக்கு என்ன? எலும்பு முறிந்திருக்கிறது. சீழும் பிடித்திருக்கிறது. அது தானாகவே கூட வேண்டியதுதான்.”

“எப்போது கூடும், டாக்டர்?”

“இது என்ன, சைக்கிள் பங்க்சரா, ஒட்டிச் சரிப்படுத்துவதற்கு? இப்போது சுத்தம் செய்து பிளாஸ்டர் போடுகிறேன். அது தானாக எப்போது கூடுகிறதோ அப்போதுதான் சரியாகும். இப்போது படுக்கை எதுவும் இங்கே காலியில்லை.”

“அப்படியானால் நான் எங்கே போவது, டாக்டர்?”

“எங்கே வேண்டுமானாலும் போ.”

“கொஞ்சம் தயை செய்யுங்கள், டாக்டர்!”

“இங்கே என்னிடம் யாரும் தயை செய்வதில்லையே! இப்படிப் பல்லை இளிப்பதனால் ஒன்றும் நடக்காது. நாலைந்து நாளில் படுக்கை காலியாகலாம். அதுவரைக்கும் வந்து மருந்து போட்டுக்கொண்டு போ!”

இது சர்க்கார் ஆஸ்பத்திரி ஒன்றில் நிகழும் சம்பாஷணை. இப்படி எத்தனையோ சம்பாஷணைகளை நீங்கள் சகஜமாகக் கேட்கலாம்.

“யாருக்கு என்ன நோயாக இருந்தாலும் நேரே இங்கே வந்து விடுகிறார்கள், ஏதோ தங்கள் அப்பன் கட்டின ஆஸ்பத்திரி மாதிரி! வேறு எங்காவது போய்ப் பார்ப்பதுதானே?” என்று டாக்டர் எரிந்து விழுகிறார்.

நோயாளி ஒரு புறமாகப் போய் உட்காருகிறான். ‘வேறு எங்காவது பார்ப்பது’ என்பது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை. அப்பொழுது, கந்தைத் துணிகள் உடுத்திய ஒரு கிழவன் அவனிடம் வருகிறான். கம்பவுண்டருக்குப் பங்கா இழுக்கிற கிழவன் இவன். இவன் நோயாளியின் காதோடு, “அடடா! எலும்பு முறிந்து போய்விட்டதா? எல்லாம் சரியாகிவிடும், பயப்படாதே” என்கிறான்.

“எப்படிச் சரியாகும்? சீழ் பிடித்திருக்கிறது. ஆஸ்பத்திரியிலோ இடமில்லை என்கிறார்கள்.”

“இவ்வளவுதானே! எல்லாம் சரியாகிவிடும். அந்த நாற் சந்தியில் ஒரு டிஸ்பென்ஸரி இருக்கிறதே. அங்கே சாயந்தரம் இந்த டாக்டர் வருவார். அப்போது சந்தோஷமாக இருப்பார். இவருக்கு எவ்வளவு பீஸ் கொடுக்க வேண்டும் என்பதை அங்கே வேலையாள் சொல்லுவான்” என்கிறான் கிழவன்.

சர்க்கார் டாக்டர்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்வதில்லை என்ற புகார்கள் அடிக்கடி பத்திரிகைகளில் வருகின்றன.

காப்பிரைட்: ஸரிதா (ஹிந்தி: செப்டம்பர் '54), புது டில்லி.

அவர்களுடைய அஜாக்கிரதை யாலும், சமயத்தில் ஆஸ்பத்திரி யில் இடங் கொடுக்காததனுலும் எவ்வளவோ சாவுகள் நிகழ்வதை யும் பார்க்கிறோம். அவர்கள் சொந்தமாகவும் வைத்தியம் செய்ய அநுமதித்திருப்பதே இந்தக் கோளாறுகளுக்கு முக்கியமான காரணம். கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் அநுபவசாலிக ளான டாக்டர்கள் குறைவு. சர்க் கார் ஆஸ்பத்திரிகளில் எல்லா ஜனங்களுக்கும் வைத்திய உதவி செய்யக்கூடிய வசதிகளும் குறை வாகவே இருக்கின்றன. அதனுல் தான் சர்க்கார் டாக்டர்கள் மக்களுக்குத் தனியாக உதவி செய்யலாம் என்று அநுமதித்திருக் கிறார்கள். ஆனுல் 'உதவி, தொண்டு' என்ற சொற்களைக் காற்றில் பறக்கவிட்டு, இந்த டாக்டர்கள் தங்கள் சட்டைப் பைகளில் பணத்தை நிரப்பு வதையே லட்சியமாகக் கொண் டிருக்கிறார்கள். சர்க்காரில் எப்படி யும் சம்பளம் கிடைக்கிறது; அதற்குமேல் எவ்வளவு வரு மானம் வருகிறதோ அதில்தான் இந்த டாக்டர்களுக்கு அக்கறை. ஆஸ்பத்திரியில் இடங் கிடைத்து உடம்பு நன்றாகக் குணமாகி வீட்டுக்குத் திரும்பும் விருப்பம் இருந்தால், எந்த நோயாளியும் இந்த டாக்டர்களை இவர்களுடைய பங்களாவில் தனி யாகப் பார்த்துப் பீஸ் கொடுக்க வேண்டும்.

உத்தரப் பிரதேசத்தில் ஒரு பெரிய பட்டணத்தில், புகழ் பெற்ற ஸர்ஜன் ஒருவர் இருந் தார். ஆபரேஷன் என்றாலே மனிதனுடைய வாழ்வு அந்தரத் தில் தொங்குவது போலத் தானே? நோயாளி எந்த விதத்தி லும் ஸர்ஜனை அதிருப்திப்படுத்த விரும்புவதில்லை. இந்த ஸர்ஜனை முதலில் நோயாளிகள் தனியே வந்து பார்ப்பார்கள். சிலர் ஆஸ்பத் திரியில் சேருவார்கள்; சிலர் இவருடைய சொந்த ஆஸ்பத்திரி யில் ஆபரேஷன் செய்துகொள் வார்கள். எந்த ஆஸ்பத்திரியில் சேர்ந்தாலும் முதலில் அவருக்குப் பீஸ் உண்டு. ஆபரேஷன் நடக்கும். நோயாளி ஆபரேஷன் மேஜையில் கிடப்பான். அவனுடைய மண்டையோ வயிறோ உடலின் வேறு பகுதியோ கத்தியினுல் கீறித் திறந்து கிடக்கும். டாக்டர் குனிந்து அதைக் கவனிப்பார். வெளியே நோயாளியின் உறவினர் கள் மனக்கலக்கத்தோடு ஆப ரேஷன் அறையின் ஜன்னல் கண்ணுடி மூலமாக எட்டி எட்டிப் பார்ப்பார்கள். அப்போது உள்ளே யிருந்து ஒருவன் வந்து செய்தி சொல்வான்: "பீஸ் இரட்டிப் பாகக் கொடுக்கவேண்டி வரும். வயிற்றைக் கீறிப் பார்த்தால், வேறு பயங்கர நோயாக இருக் கிறது!" நோயாளியின் உறவினர் கள் எங்கிருந்தோ கடனை உடனே வாங்கி, பீஸைக் கட்டி நோயாளியைக் குணப்படுத்திக் கொண்டு போவதற்குள் அவர்கள் பாடு அப்பாடா என்று ஆகிவிடும். இந்த ஸர்ஜனுடைய பேராசை வளர்ந்து வளர்ந்து தாங்க முடி யாத அளவுக்குப் போய்விட்டது. கடைசியில் அவர் ஆஸ்பத்திரியை விட்டே போக நேர்ந்தது.

வெளியே நோயாளிகளோடு பழகுவதால் அநுபவம் வளரும் என்ற நோக்கத்தோடு அரசாங் கத்தார் டாக்டர்களைத் தனியே வைத்தியம் செய்ய அநுமதித்தார்

கள். ஆனால் ஆஸ்பத்திரிகளில் நடக்கும் அசட்டையைப் பார்த்தால் இப்படி அநுமதிப்பது தவறு என்றே தோன்றுகிறது. நாட்டில் பிரபல டாக்டர்களை அங்கத்தினராகக்கொண்ட 'போர்கமிட்டி'யும் உத்தரப் பிரதேசத்தில் சர்க்கார் ஏற்படுத்திய ஆராய்ச்சிக் கமிட்டியும் இந்த அபிப்பிராயத்தையே உறுதிப்படுத்தின.

இப்போது சர்க்கார் ஆஸ்பத்திரிகளில் பணம் பெற்று வைத்தியம் செய்யும் திட்டம் இருக்கிறது. ஆனால் டாக்டர்களுக்கு இதில் தனி வருமானம் இல்லாததால் அவர்கள் இதில் அக்கறை செலுத்துவதில்லை. இந்தத் திட்டம் இப்போது நடைமுறையில் நோயாளிகளுக்கு அநுகூலமாக இல்லை.

கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் போதிய டாக்டர்கள் கிடைக்கும் நிலைமை ஏற்படும் வரைக்கும், சர்க்கார் டாக்டர்கள் தனியே வைத்தியம் செய்யத்தான் வேண்டியிருக்கும். ஆனால் அவர்களுடைய நடவடிக்கைகளைச் சர்க்கார் கூர்ந்து கவனிப்பது நல்லது. மக்களும் இவ்விஷயத்தில் சர்க்காருக்கு உதவி செய்ய வேண்டும்.

வராக் கடன்

ஒரு குடியானவன் மற்றொருவனுக்குக் கடனாக ஒரு பன்றியை விற்றான். வெகு நாளாகியும் அதற்குப் பணம் வரவில்லை. குடியானவனுக்கு எரிச்சலாய்ப் போயிற்று. "அட சாமியே! அவன் இந்தப் பணத்தைக் கொடுக்கவே போறதில்லைன்னு அப்பவே எனக்குத் தெரிஞ்சிருந்தா, இரட்டிப்பு விலை சொல்லியிருப்பேனே" என்றான்.

—'தி லிஸனர்'

ஆத்மாவின் அழகு

சவ வண்டிக்காரர் சொன்னது இது:

"இந்தச் சீமாட்டியின் பிரேதம் மிக்க அழகாயிருக்கிறது. வாழ்விலும் அழகுண்டு; சாவிலும் அழகுண்டு. இப்படித்தான் அடிக்கடி நான் சொல்லி வருகிறேன். சாவிலே வரும் அழகு மிக ஆச்சரியமானது. என் தாத்தாவும் இதே தொழிலைத்தான் செய்துகொண்டிருந்தார். அவர் சொன்ன சில சொற்களின் உண்மையை இந்த ஐம்பது வருஷகாலமாக நான் கண்டுவருகிறேன். 'நன்றாக உடுத்து அலங்கரித்துக் கொள்வதால், வாழ்விலே அழகு உண்டாகலாம். ஆனால், சாவிலே அழகு வர வேண்டுமானால், குணச் சிறப்பு இருந்தால் தான் அது வரமுடியும்' என்று அவர் எப்போதும் சொல்வது வழக்கம். ஒரு மனிதரின் இயல்பை அறிந்துகொள்ள, அவரை நன்றாகப் பார்ப்பேன்; பிறகு, 'இவர் செத்தால் எப்படி இருப்பார்' என்று மனத்திலே சித்திரித்துக் கொள்வேன்."

—வி. சாக்வில் வெஸ்ட்

சாட்சியை விசாரிக்கும் முறைகள் நம் கோர்ட்டு களில் சீர்திருந்த வேண்டாமா?

கிராமத்தில் கொலை

ரிடையரான ஒரு மாஜிஸ்டிரேட்

அந்தக் கிராமத்தில் ஒரு கொலை நடந்துவிட்டது. ஆனாலும் அப்படி ஒன்றும் மர்மமோ விசேஷமோ அதில் இருந்ததாகத் தெரியவில்லை. பொதுவாக, கிராமங்களென்றால், சலிப்புத் தட்டும்படி அன்றாடம் ஒரே மாதிரி பொழுது போய்க் கொண்டிருக்கும்; நடுவில் எதிர் பாராமல் இப்படி ஏதாவது அசந்தர்ப்பம் ஏற்பட்டுவிட்டால், வெகு நாள் வரைக்கும் அங்கே அமைதியே இராது.

காலை மணி $10\frac{1}{2}$ இருக்கும். அப்போதுதான் என் வேலையைக் கவனித்துவிட்டு நான் தங்கியிருந்த முகாமுக்குத் திரும்பி வந்தேன். வந்ததும், எதிரே ஒரு வயலில் கொலை நடந்திருக்கிறது என்று யாரோ சொன்னார்கள். வயலுக்கும் நான் தங்கியிருக்கும் இடத்துக்கும் நடுவே மண்பாட்டை ஒன்று இருந்தது; அதன் இரண்டு பக்கமும் சப்பாத்திப் புதர்கள். நான் அங்கே போய்ப் பார்த்தேன். ஒன்பது வயசுப் பெண், பாவம் - அவள் பிணம் மணலில் ஒரு பள்ளத்தில் கிடந்தது. அப்படிக் காயம் ஒன்றும் பிரமாதமாக இல்லை. உள்ளூர் வைத்தியசாலை அதிகாரி அங்கே இருந்தார். கொலை நடந்து கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஆகியிருக்கலாம் என்று அவர் சொன்னார். ஆனால் இதை யாரும் நேரில் பார்த்ததாகவும் தெரியவில்லை; எந்தவிதமான கூக்குரலும் யார் காதிலும் விழவு மில்லை.

இரண்டு மூன்று மணி நேரத்துக்கெல்லாம் அந்த ஊர் வாலிபன் ஒருவனைக் கைது செய்தார்கள். ஊர்க் குளத்தில் அவன் துணியைக் கசக்கும்போது அதில் ரத்தக் கறைபோல் ஏதோ தெரிந்தது என்று இரண்டு சலவைத் தொழிலாளர் சொல்லவே, சந்தேகம் ஏற்பட்டதாம். ஊர்த் தலையாரி வேறு வந்து, "நான் அவனைப் பிடித்ததும் அவன் மார்பிலே காதை வைத்துக் கேட்டேனுங்க. குற்றமுள்ள நெஞ்சோ இல்லையோ, என்னமாகப் 'பக் பக்' என்று அடித்துக்கொண்டது, தெரியுமா?" என்றான். ஒன்றும் தெரியாத ஒரு கிராமவாசியைத் திடீரென்று ஒரு போலீஸ்காரன் வந்து மடக்கி நிறுத்தினால், அவனுக்கு எப்படி இருக்கும்? அந்தக் கிராமவாசி உண்மையாகவே கொலை செய்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பயந்துதான் போவான்.

அந்த வாலிபனை அடைத்து வைத்திருந்த 'லாக் - அப்' மிகவும் சமீபத்தில்தான் இருந்தது. முன்னால் கிராதி போட்டிருந்ததால்,

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 17-7-'54), சென்னை.

உள்ளே அவன் இருப்பது நன்ருகத் தெரிந்தது. நான் வெளியே வராந்தாவில் உட்கார்ந்து கொண்டு அவனேடு பேச்சுக் கொடுத்தேன். அவனுக்கு வயசு பத்தொன்பதுதான் இருக்கும்; மாடு மேய்ப்பவன்; சுத்தமாகவே இருந்தான். ஆரோக்கியமான உடல். சாதாரணமாக விஷயங்களைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு அறிவுள்ளவன்தான். அவனைப் பார்த்தால் கொலைகாரனைப் போலவோ வெறி பிடித்தவனைப் போலவோ தோன்றவில்லை. அந்தப் பெண் போட்டிருந்ததே ஏதோ கொஞ்சம் நகைதான் போல் இருக்கிறது; அவைகளைக் காணவில்லை. அதற்காகப் போய் அவளை ஒருவன் கொன்றிருப்பான் என்று சொல்வதும், என்னைப் பொறுத்தவரையில் அவ்வளவு சரி என்று படவில்லை.

அவனுடைய குடும்பம் எப்படி, அவன் என்ன வேலை செய்கிருன்–இப்படி எனக்குத் தோன்றினதையெல்லாம் விசாரித்தேன். முதலில் வேண்டா வெறுப்பாக ஒரே வார்த்தையில் பதில் அளித்து வந்தான். அப்புறம் சகஜமாகப் பேசலானன். "போலீஸார் ஏதாவது உபத்திரவப்படுத்தினர்களா?" என்றேன். "இல்லவே இல்லை. 'ஐயோ, பாவம்' என்று என்னைப் பார்த்து வருத்தப் பட்டார்கள்" என்ருன்.

சட்டென்று அவன் ஏதோ உணர்ச்சி வசப்பட்டவன் போல் என்னையே வெறிக்க வெறிக்கப் பார்த்துவிட்டு, "நான் உங்களிடம் ஒன்று சொல்ல வேண்டும். இனிமேல் என்னல் அதை ஒளித்து வைக்க முடியாது!" என்ருன். அவன் என்ன சொல்லப் போகிருன் என்று யோசிக்காமலே நான், "சரி, சொல்லேன்" என்றேன். இதுவரை அவன் பேசி வந்ததையும் நடந்து கொண்ட விதத்தையும் பார்த்து, அவன் கண்டிப்பாக நிரபராதி என்று தீர்மானித்துவிட்டேன். அப்போது அவன் என்ன சொன்னன், தெரியுமா?

"நான்தானுங்க அந்தப் பெண்ணைக் கொன்றுவிட்டேன். ஏன் அப்படிச் செய்தேனே, எனக்கே புரியவில்லை. அவளுடைய நகைகளையெல்லாம் ஊருக்கு வெளியிலே புதைத்து வைத்திருக்கிறேன்" என்ருன்!

எனக்கும் அந்த வழக்குக்கும் சம்பந்தம் இராததால், உள்ளூர் 'அவுட் போஸ்டி'ல் இருந்த போலீஸ்காரனிடம் மட்டும் தகவலை எட்ட விட்டேன். அந்தப் போலீஸ்காரன் மறு நாள் காலை, வாலிபன் சொன்ன இடத்தில் போய்த் தேடி, அந்த நகைகளை எடுத்து வந்தான்.

இதற்குள் யாரோ ஒருத்தி போலீஸாரிடம் வந்து, "பாட்டையின் பக்கம் வயலுக்குக் கிட்ட அந்தப் பெண், பாவம், சுள்ளி பொறுக்கிக்கிட்டிருந்தது. அப்போ யாரோ, 'இன்னும் சற்றுத் தள்ளிப்போனல் நிறையக் கிடைக்குமே' என்று சொன்னது என் காதில் விழுந்தது" என்று தகவல் கொடுத்தாள்.

கடைசியில் செஷன்ஸ் கோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்தது. ஜட்ஜ் வெகு காலம் இந்தியாவில் பல வழக்குகளை விசாரித்து அநுபவப்பட்டவர். சாட்சிகளைத் துருவித் துருவி விசாரிப்பதில் மிகவும் நிபுணர் என்று பெயர்

எடுத்தவர். விசாரணை நடந்து முடிகிற வரை நானும் கூடவே இருந்து கவனித்து வந்தேன். சாயங்கால வேளைகளில் ஜட்ஜோடு நான் டென்னிஸ் ஆடுவது வழக்கம். அப்போதெல்லாம் வழக்கைப்பற்றி அவர் ஒரு வார்த்தை கூடப் பேசுவதே யில்லை. விசாரணை முடிந்த அன்று சாயங்காலம், "உங்களுக்குத்தான் இந்த வழக்கைப்பற்றித் தெரிந்திருக்குமே; எனக்கென்னவோ இந்தப் பிராஸிக்யூஷன் தரப்புச் சாட்சியம் சுத்தமாகப் பிடிக்கவே யில்லை!" என்றார்.

எனக்கும் அப்படித்தான் பட்டது; அதனால் அவர் சொன்னது வியப்பாகத் தோன்றவில்லை. அந்தப் பெண்ணைப் பாட்டையருகிலுள்ள வயலில் பார்த்ததாகப் போலீஸாரிடம் தகவல் சொன்னவள், இப்போது சற்று மாற்றிச் சொன்னாள். "அந்தப் பெண் சுள்ளி பொறுக்கிக்கொண்டிருக்கும்போது இவன் அவளைக் கூப்பிட்டுப் பேசினான். என் கண்ணாலே பார்த்தேனுங்க" என்றாள். இன்னொருத்தியும் சாட்சியம் சொன்னாள்; இவள், "அந்தப் பெண்ணோடு கூடவே இவனும் வயல் பக்கம் போனான். அப்புறந்தான் அங்கே அவளைக் கொன்னுபோட்டுக் கிடந்தது" என்றாள். எதிரி சொன்னபடி போலீஸார் தேடினதில் நகைகள் கிடைத்தது உண்மைதான்; இருந்தாலும் அவை அப்படி ஒன்றும் பிரமாத மதிப்புள்ளவை என்று சொல்வதற்கில்லை. எதிரி தரப்புச் சாட்சியம் ஒரு புறம் இருக்க, 'ஊரில் சர்வசகஜமாக ஜனங்கள் பேசிக்கொண்டதிலிருந்து விலை மதிப்புள்ள ஒரு நகையும் இதோடு களவு போயிருக்கிறது என்று கடைசியில் சிலர் நிரூபிக்கப் பார்த்தார்கள்' என்று ஊகிக்க வேண்டியிருந்தது.

எப்படி இருந்தால் என்ன, குறுக்கு விசாரணையின்போது சாட்சிகள் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்லவே ஒன்றும் ரசப்படவில்லை. கடைசியில் எதிரியை விடுதலை செய்யும்படி தீர்ப்பாயிற்று.

ஜட்ஜுக்கும் சரி, எனக்கும் சரி, அவன்தான் கொன்றான் என்று நிச்சயமாகத் தெரியும். ஆனால் அவர் பல வருஷ காலம் இந்தத் துறையில் அநுபவப்பட்டிருந்தால் சாட்சிகள் சொன்னதோ, பிற விவரங்களோ பொருத்தமாக அமையவில்லை என்று அவருக்குத் தெரிந்தது. சட்டப்படி அவர் அவனை விடுதலை செய்தது சரிதான்; அதில் ஆட்சேபமே இல்லை.

இதே மாதிரிதான் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தீர்ப்பாகும் என்று இதை எடுத்துக் காட்டவில்லை. ஆனால், "சிறந்த முறையில் சாட்சியம் அமைய வேண்டும். இங்கிலாந்தைவிட இந்த விஷயத்தில் இங்கே அதிகக் கவனம் செலுத்த வேண்டும்" என்பது கோர்ட்டாரின் கருத்து. இது சரியான முறைதான். நம் நாட்டில் கிட்டத்தட்ட 100-க்கு 80 பேர் கிராமவாசிகள். ஆகவே, எளிய வாழ்க்கை நடத்துபவர்கள். அவர்கள் சொல்வதை அப்படியே நம்பவும் முடியாது. தாங்கள் சொல்வது சரிதானா இல்லையா என்று அலசிப் பார்க்கவும் மாட்டார்கள். உலக விஷயம் தெரியாதவர்கள். வாஸ்தவமாகவே தாங்கள் நேரில் பார்த்தது இன்னது, அப்புறம் தங்களுக்கு நியாயமாகப் பட்டதையும் கூடச் சேர்த்துச்

சொன்னது இன்னது, யார் சொல்லியோ கேட்டுச் சொன்னது இன்னது என்று பகுத்துச் சொல்ல அவர்களுக்குத் தெரியாது. உலகத்தில் சர்வசகஜமாக வாழ்ந்துவரும் ஓர் ஆசாமி ஏதோ இட்டுக் கட்டியதை நிஜமாகவே எண்ணிக்கொண்டு பேசுகிருனே; அதே மாதிரி இவர்களும் பிடிவாதமாய்த் தாங்கள் சொல்லுவது தான் சரி என்று எண்ணிக் கொண்டு விடுகிருர்கள். விஷயம் உண்மையாக இருந்துவிட்டால் கேட்பானேன்? ஒவ்வொரு தகவலும் முழுக்க முழுக்கச் சரியா தப்பா என்று இவர்கள் அதைப் பற்றி மண்டையை உடைத்துக் கொள்வதில்லை.

நான் மாஜிஸ்டிரேட்டாக இருந்த சமயம்; முதல் முதலாகச் சில சாதாரணக் கிரிமினல் வழக்குகள் விசாரணைக்கு வந்தன. இன்னுங்கூட அவைகள் மறக்கவேயில்லை. சரியானபடி திணறித் திண்டாடிவிட்டேன். விஷயம் என்னவோ பிரமாதமில்லை. வரப்புச் சண்டை; அவர்களில் ஒருத்தன் இன்னொருத்தனை அடித்துவிட்டான்.

அவர்கள் கோர்ட்டில் ஆஜராஞர்கள். இரண்டு தரப்பாரும் வக்கீல் வைக்கவில்லை. வாதி சாட்சிக் கூண்டில் ஏறி ஆணையிட்டுவிட்டுப் பேச ஆரம்பித்தான். சண்டைக்கு முன் என்ன நடந்தது, தன்னை எதிரி எப்படி அடித்தான், எங்கே அடி விழுந்தது, அதனுல் எவ்வளவு வலி எடுத்தது என்றெல்லாம் விவரமாகச் சொல்லிக்கொண்டே போனுன்.

எதிரி இதைக் கேட்டுச் சலித்துப் போனதுபோல் நின்ருன். வாதி சொல்லி முடித்ததும் எதிரியைப் பார்த்து, "என்ன அப்பா, இதற்கு என்ன சொல்கிருய்?" என்றேன்.

அவன், "அந்த ஆள் சொல்கிறது சரிதானுங்க. ஆனுல் ஒன்று கேட்கணும் அவனை!" என்ருன்.

"சரி" என்று அநுமதி கொடுத்தேன்.

எதிரி வாதியைப் பார்த்து, "ஏன் அப்பா, நான் உன்னை அடித்தேனு? உன் சகோதரனை அடித்தேனு?" என்று கேட்டான்.

டக் என்று பதில் வந்தது: "என் சகோதரனைத்தான். ஆனுல் அவனுக்கு உடம்பு சரியாக இராது போகவே, நான் கோர்ட்டில் ஆஜரானேன்."

அதோடு அன்று கோர்ட்டு முடிந்தது. அவர்களும் வெளியே போனுர்கள். அப்புறம் வந்து என்னைத் தொந்தரவும் செய்யவில்லை. வழியிலேயே இரண்டு பேரும் ராஜியாகப் போய் விட்டார்கள்.

முன்னே இங்கே இருந்த பல ஐரோப்பிய ஜட்ஜுகளும் மாஜிஸ்டிரேட்டுகளும் இந்த மாதிரி ஒரு தர்ம சங்கடத்திலும், சூழ்நிலையிலும் மிகவும் திறமையாகச் சாட்சிகளை விசாரித்து இது தான் சரி என்று நிர்ணயித்து வந்தார்கள். இதனுல் பொதுமக்களுக்கும் அவர்களிடத்தில் அபாரமான மதிப்பு இருந்து வந்தது.

கிருஷ்ணாவதாரம்

பரீட்சித்து மன்னன் சுகமுனிவரைப் பார்த்து, "ஸ்வாமி, தாங்கள் சந்திர சூரிய வம்சங்களைப்பற்றி விரிவாகச் சொன்னீர்கள். ஆனாலும் யதுகுலத்தினுடைய வீரத்தைப்பற்றிக் கேட்க வேண்டுமென்று எனக்கு மிகவும் ஆவலாக இருக்கிறது. பகவான் நாராயணர் அவதரித்த குலமாயிற்றே அது! அவர்தானே அசுவத்தாமன் எரித்துவிட்ட என் உடலைக் காத்தார்!" என்றான்.

சுக முனிவரும் அப்படியே சொல்லலானார்: "ஒரு காலத்தில், கொடிய அரசர் வடிவம் தாங்கின அசுரர்களால் பாரமுற்றுப் பூமிதேவி துயரம் தாங்க முடியாமல் கதறினாள். அவள் பிரம்மாவிடம் முறையிட்டாள். அவரும், சிவபெருமானும் பிற தேவரும் புடைசூழப் பூமிதேவியுடன் பால்கடலின் கரைக்கு வந்தார். பகவானைப் பலவிதமாகத் துதித்தார்; சமாதி நிலையில் ஆழ்ந்தார். அப்போது பகவானின் குரல் கேட்டு மனம் தெளிந்தார். தேவர்களுக்குத் தாம் கேட்டதைச் சொன்னார்: 'பகவானுக்கு இது எற்கனவே தெரிந்ததுதான். அவர் யதுகுலத்தில் பிறந்து பூமிபாரத்தை அகற்றும்வரையில் நீங்களும் அதே குலத்தில் பிறந்து அவருக்கு உதவியாக இருக்கவேண்டும். ஆதிசேஷனும் அவருக்கு முன்பாகவே அவதரிக்கப் போகிறான். பகவானுடைய சக்தியாகிய மாயையும் அவருடைய உத்தரவுப்படி உலகத்தில் பிறக்கப் போகிறாள்.'

"அப்போது யதுகுல மன்னனான சூரசேனன் மதுரா நகரத்தில் அரசு செலுத்தி வந்தான். ஒரு சமயம் அவனுடைய புதல்வரான வசுதேவர், உக்கிரசேனன் என்ற அரசனுடைய மகள் தேவகியை மணந்து தேரில் எறித் தம் இருப்பிடத்துக்குப் புறப்பட்டார். உக்கிரசேனனின் மகனான கம்சனே தேரை ஓட்டிக்கொண்டு போனான்; பல வாத்தியங்களுடன் பணிப்பெண்களையும் எராளமான சீர்வரிசைகளையும் உக்கிரசேனன் கூடவே அனுப்பி வைத்தான்.

பாகவதத்தில் முக்கியமான பகுதி தசமஸ்கந்தம். அது கிருஷ்ணபகவானின் லீலைகளைச் சொல்லுவது.

“நடுவழியில் அசரீரி ஒன்று கேட்டது; ‘அடே அறிவற்றவனே, இவளிடம் பிறக்கும் எட்டாங் குழந்தை உன்னைக் கொல்லப்போகிறதே!’ என்றது. இதைக் கேட்டதும் கம்சனுக்குக் கோபந் தாங்கவில்லை. அவன் தன் சகோதரியைக் கொல்ல அவள் தலைமயிரைப் பிடித்தான். அப்போது வசுதேவர், ‘அப்பா, நீயோ வீரன்; அப்படி இருக்க, இவளைக் கொல்லப் பார்ப்பது நியாயமா?’ என்று சமாதானமாகச் சொல்லிப் பார்த்தார். ஆனால் அதை அவன் காதில் போட்டுக் கொள்ளவேயில்லை. இருந்தாலும் வசுதேவர், ‘அப்பா, நீ உன் தங்கையிடம் பயப்படுவானேன்! இவளைக் கொல்ல வேண்டாம். இவளுக்குக் குழந்தை பிறந்தால் உன்னிடமே அவைகளைக் கொடுத்துவிடுகிறேன்’ என்றார்.

“கம்சனும் மகிழ்ச்சியுற்று அதற்கு இசைந்தான். வசுதேவர் மனைவியுடன் அரண்மனைக்குச் சென்றார். சில மாதங்கள் சென்றதும் தேவகிக்குக் கீர்த்திமான் என்று ஒரு குழந்தை பிறந்தது. வசுதேவர் தாம் வாக்களித்தபடியே அந்தக் குழந்தையைக் கம்சனிடம் கொடுத்துவிட்டார். வசுதேவரின் நேர்மையைக் கண்டதும் கம்சன், ‘இதை நீங்களே எடுத்துக்கொண்டு போங்கள். உங்களுடைய எட்டாவது மகனால் தானே ஆபத்து?’ என்றான். வசுதேவர் மகிழ்ச்சியுற்றுக் குழந்தையை எடுத்து வந்தார். ஆனால் நந்தகோபன் முதலிய யாதவர்களும் தேவகி முதலிய பெண்களும் இதை நம்பவில்லை. கம்சனுடைய கொடூர குணம் அவர்களுக்குத் தெரியும்.

“அப்போது நாரதர் கம்சனிடம் வந்தார்; ‘அரசே, நந்தகோபன் முதலியவர்களும் அவனைச் சேர்ந்த பெண்களும் தேவர்களின் அவதாரம். அசுரர்களை அழிக்கவே அவர்கள் பிறந்திருக்கிறார்கள்’ என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

“உடனே கம்சன் வசுதேவருக்கும் தேவகிக்கும் விலங்கிட்டு

வீட்டிலேயே அவர்களை அடைத்து வைத்தான். முதலில் கீர்த்திமான் என்ற குழந்தையையும், பின்னால் பிறந்த குழந்தைகள் ஐந்து பேரையும் கொன்றான். ஏழாவதாகத் தேவகியின் கர்ப்பத்தில் பகவானுடைய கலையான ஆதிசேஷன் தோன்றினான். அப்போது தேவகிக்கு இன்பமும் துயரமும் மாறி மாறி வளர்ந்து கொண்டே வந்தன.

"அப்போது யோகமாயை என்ற சக்தியிடம் பகவான், 'தேவி, நீ போய்ப் பூலோகத்தில் நந்தகோபனின் மனைவி யசோதைக்கு மகளாகப் பிற. அதோடு நீ தேவகியின் வயிற்றில் இருக்கும் ஆதிசேஷனை எடுத்து, வசுதேவனின் இன்னொரு மனைவியான ரோகிணியின் வயிற்றில் வைத்துவிடு. நான் தேவகியின் வயிற்றில் என் அம்சத்துடன் அவள் மகனாகப் பிறக்கப்போகிறேன்' என்றார்.

"அப்படியே அவளும் செய்தாள். தேவகியின் கர்ப்பம் கலைந்தது என்று பெண்கள் பேசிக்கொண்டார்கள். பிறகு பகவான் தேவகியின் வயிற்றில் புகுந்ததும் அவள் தனிச் சோபையுடன் திகழ்வதைக் கண்டான் கம்சன்; 'இப்போது நாம் என்ன செய்வது? கர்ப்பிணியான தங்கையைக் கொல்வது தகுதியில்லையே!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். குழந்தை பிறக்கும் நாளை எதிர்நோக்கியிருந்தான்.

"பிறகு ரோகிணி நட்சத்திரம் கூடிய மங்களநாளில் நள்ளிரவில் பகவான் அவதரித்தார். திசைகள் தெளிந்துவிளங்கின. புள்ளினங்கள் கானகத்தில் இனிமையாகப் பாடின. செந்தாமரை போன்ற கண்களுடன், சங்கு, சக்கரம், கதை முதலியவைகளை நான்கு கைகளில் ஏந்தி, மார்பில் ஸ்ரீவத்ஸமும் கவுஸ்துபமும் இடையில் பீதாம்பரமும் காதில் வைடூரிய குண்டலமும் உடல் முழுதும் அணிகளும் பூண்டு விளங்கினார் பகவான். வசுதேவர் ஆச்சரியத்தோடு இந்தக் காட்சியை நோக்கினார். 'பகவானே நமக்குக் குழந்தையாகப் பிறந்துவிட்டாரே!' என்று பூரிப்படைந்தார். அவரை வணங்கித் துதித்தார்.

"தேவகியும் மகிழ்ச்சியுற்றாள். ஆயினும் கம்சன் வந்துவிடப்போகிறானே என்று பயந்து, 'பகவானே, தாங்கள் எனக்கு மகனாகப் பிறந்தது கம்சனுக்குத் தெரியாமல் இருக்கவேண்டுமே! இந்த ரூபத்தை மறைத்துக்கொள்ளுங்கள்!' என்று வேண்டிக் கொண்டாள்.

"பகவான் அவர்களைப் பார்த்துச் சொன்னார்: 'நீங்கள் இருவரும் ஸ்வாயம்புவ மன்வந்தரத்தில் பிருச்னி, ஸுதபஸ் என்ற பெயருடன் இருந்தீர்கள். பிரம்மதேவன் உலகத்தில் மக்களைப் பெறும்படி உங்களுக்கு உத்தரவிட்டான். நீங்கள் இருவரும் புலன்களை அடக்கி என்னைக் குறித்துத் தவம் செய்தீர்கள். நான் அதைக் கண்டு மகிழ்ந்து உங்களெதிரே தோன்றினேன். என்ன வேண்டும் என்று கேட்டேன். அப்போது நீங்கள், என்னைப் போன்ற மகன் வேண்டும் என்றீர்கள். அப்படியே நானும் உங்களுக்கு மகனாகப் பிறந்தேன். அப்போது எனக்குப் பிருச்னிகர்ப்பன் என்று பெயர். அடுத்த பிறவியில் நீங்கள் காசியபர், அதிதி என்ற பெயரோடு தோன்றினீர்கள். நான் வாமனனாக உங்கள் வயிற்றில் பிறந்தேன்.

இதோ உங்கள் மூன்றும் பிறவியில், பழைய ஜன்மங்களை ஞாபகப் படுத்துவதற்காக இந்த உருவத்தோடு பிறந்திருக்கிறேன். என்னை மகன், கடவுள் என்று இரண்டு விதமாகவும் வழிபட்டு வாருங்கள்; நல்ல கதி அடையுங்கள். கம்சனிடம் பயப்படும் பட்சத்தில் என்னைக் கோகுலத்தில் சேர்த்துவிட்டு யசோதையின் வயிற்றில் பிறந்திருக்கும் என் மாயையை உடனே இங்கே கொண்டுவந்து விடுங்கள்' என்று சொல்லிக்கொண்டே குழந்தையாக மாறிவிட்டார்.

"அப்படியே வசுதேவர் குழந்தையை எடுத்துக்கொண்டு கோகுலத்துக்குப் புறப்பட்டார். பகவானுடைய மாயையால் காவலாளிகள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள். கோட்டைக் கதவுகள் தாமாகவே திறந்துகொண்டன. மேகம் மூடி மழை பொழியத் தொடங்கியது. ஆதிசேஷன் தன் படத்தால் பகவான்மேல் நீர் விழாதபடி பார்த்துக்கொண்டான். வெள்ளம் கரை புரண்டு ஓடும் யமுனை, தானாகவே பகவானுக்கு வழி விட்டது. வசுதேவர் மெதுவாகக் கோகுலத்துக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே இருந்த எல்லாரும் உறங்கிக்கொண்டிருந்தார்கள். யசோதையின் படுக்கையில் பகவானை விட்டுவிட்டு, முன்பே அங்கே இருந்த பெண் குழந்தையை எடுத்துக்கொண்டு தம் இருப்பிடத்துக்குத் திரும்பினார். தேவகியின் பக்கத்தில் அந்தக் குழந்தையை விட்டுவிட்டு முன்போல் காலில் விலங்கை மாட்டிக்கொண்டார்.

யசோதைக்கு, முன்பு குழந்தை பிறந்தது என்றுமட்டும் ஞாபகம் இருந்ததே தவிர, அது என்ன குழந்தை என்று அவள் கவனிக்கவில்லை. விழித்துக்கொண்டபோது ஆண்குழந்தை இருப்பதைக் கண்டதும் அவள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தாள்.

காகித அளவு

பெரிய அளவு பக்கத்தோடு ஒரு பத்திரிகை நடந்து கொண்டிருந்தது. அதை அபிவிருத்தி செய்வதற்காக, காகிதத்தை மடித்துப் பக்க அளவைச் சிறிதாக்கி வெளியிடத் தொடங்கினார்கள். உடனே அதன் விற்பனை அதிகரிப்பதற்குப் பதிலாக, மட மட என்று சரிந்து, சில பிரதிகளுக்கு இறங்கிவிட்டது.

பத்திரிகை நிர்வாகிகள் இதற்கென்ன காரணம் என்று விசாரித்தார்கள்.

ஒருவர் சொன்னார்: "முன்னெல்லாம் சாப்பாட்டு மேஜைமீது விரிப்பாகப் போட உங்கள் பத்திரிகையிலிருந்து இரண்டே தாளை எடுத்துப் போட்டால் போதுமானதாயிருந்தது. இப்போதோ எட்டுத் தாளை எடுத்து விரித்தாலும் போதவில்லை. யார் வாங்குவார்கள்?"

—'வொய்ஸ் அண்டு அதர்வொய்ஸ்'

வீட்டுக்காரர்கள் எச்சரிக்கையாக இருந்தால், திருட்டு ஏன் நடக்கிறது?

திருடர்கள்! ஜாக்கிரதை!

இன்ஸ்பெக்டர் பிங்கே

நோய் வந்த பிறகு டாக்டரிடம் போய் வைத்தியம் செய்துகொள்வதைவிட, நோய் வராமல் தடுத்துக்கொள்வதே நல்லது. அது போலவே, நம்மிடம் இருக்கும் பொருள்களைத் திருடன் சுலபமாக எடுக்கும்படி வைத்துவிட்டுப் பிறகு போலீசில் பிராது கொடுத்து அவனைத் தேடித் திரிவதைவிட, திருட்டுக்கே இடம் இல்லாதபடி செய்வது நல்லது.

கதவுகள் பத்திரமாக மூடியிருந்தும் மேற்கம்பிகளைப் பெயர்த்துக்கொண்டு நுழையப் பார்க்கிறான் திருடன்.

'திருடனே வராதபடி எப்படிச் செய்ய முடியும்?' என்று நீங்கள் கேட்கிறீர்கள். அப்படிச் செய்ய எத்தனையோ வழிகள் இருக்கின்றன. இன்று சாயந்தரம் நடு ரோட்டில் மிஸ் மல்லிகாவின் தங்கச் சங்கிலி திருட்டுப் போய் விட்டது. காரணம் என்ன? ஜன நடமாட்டம் இல்லாத ஒரு தெருவில் அவள் தன்னந்தனியே போனதுதான். அவள் தன்னோடு அண்ணனையோ தம்பியையோ வேறு உறவினரையோ துணைக்கு அழைத்துச் சென்றிருந்தால் இந்தத் திருட்டு நேர்ந்திராது.

இதுவாவது நடுத் தெருவில் நடந்த கதை. உங்கள் வீட்டிலே ஜன்னல்களையும் கதவுகளையும் பந்தோபஸ்தாக வைத்திருக்கிறீர்களா? மனிதர்கள் திருடுவதற்கு எத்தனையோ காரணங்கள் இருக்கின்றன. உங்கள் வீட்டு வேலை முழுவதையும் நீங்களே செய்தாலும், பாத்திரம் தேய்க்கவும் வீடு பெருக்கவுமாவது வேலைக்காரர்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்களோ இல்லையோ? அவர்கள் வீட்டின் எந்த மூலை முடுக்கிலும் தாராளமாக வளைய வருகிறார்கள். நீங்கள் எங்கே பணத்தை வைக்கிறீர்கள், நகை நட்டுகளை எங்கே பத்திரப்படுத்துகிறீர்கள் என்பவை போன்ற விஷயங்கள் யாவும் அவர்களுக்குத் தெரியும்.

இது போகட்டும்; அவர்களை வேலைக்கு வைத்துக்கொள்வதற்கு முன்பு அவர்கள் இதற்கு முன் எங்கேயாவது ஏதாவது திருடியிருக்கிறார்களா என்று நீங்கள் ஆராய்ந்தது உண்டா? இதை எப்படிக் கண்டு பிடிப்பது என்கிறீர்களா? அவர்களுடைய

காப்பிரைட்: ஸ்த்ரீ (மராட்டி: செப்டம்பர் '54), கிர்லோஸ்கர்வாடி, ஸாதாரா.

கட்டை விரல் அடையாளத்தை எடுத்துப் போலீஸில் விசாரியுங்கள். வேண்டிய தகவல்களை உங்களுக்குக் காலணாச் செலவு இல்லாமல் போலீஸார் கொடுப்பார்கள். இந்த வேலைக்காரர்கள் ஏற்கனவே திருட்டுக் குற்றத்தில் சிக்கியிருந்தால் போலீஸாருக்குத் தெரியும். ஒவ்வொரு ராஜ்யத்திலும் முக்கியப் போலீஸ் ஆபீசில் 'ஃபிங்கர் ப்ரின்ட் பீரோ' (கையடையாளத்தைப்பற்றிய முழுத் தகவல்கள்) இருக்கின்றன. உங்கள் வீட்டில் ஒரு திருடனை வேலைக்கு வைத்துக்கொண்டு பிறகு நீங்கள் பிராது கொடுத்ததும் அவனைத் தேடி அலைவதைவிட முன்னமேயே அவனைப்பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதில் போலீஸார் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள்.

சரி, அந்த வேலையாள் இது வரைக்கும் திருட்டுக் குற்றத்தில் சேராதவனாகவே இருக்கலாம். ஆனால் அவனைத் திருட வைக்க நீங்கள் முயற்சி செய்கிறீர்களே, அதை என்னவென்று சொல்வது? அலமாரியைப் பூட்டிவிட்டுச் சாவிக்கொத்தை நீங்கள் மேஜை மேல் போட்டு வைக்கிறீர்கள். 'அந்த அலமாரியைத் திறந்து அதில் என்னதான் இருக்கிறது பார்ப்போமே!' என்ற ஆசை எப்பொழுதாவது அந்த வேலைக்காரனுக்கு உண்டாகாதா? வெளியே போய் வந்ததும், பணப்பையை உங்கள் சட்டையிலேயே விட்டு வைக்கிறீர்கள். இது உங்கள் வேலைக்காரனைத் திருடத் தூண்டுவதுபோலத்தான்.

வீட்டு வேலைக்காரன் கிடக்கட்டும்; வெளித் திருடனுக்கு உள்ளே வர வழி விடுகிறீர்களே.



ஜன்னலுக்குப் பக்கத்து மேஜையில் விலையுயர்ந்த பொருள்களை வைத்துவிட்டுப் போனால்..

இதைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? ஜன்னல் அல்லது வாசற் கதவின் கண்ணாடி உடைந்துபோயிருக்கிறது. அதன் வழியாகக் கை விட்டுத் திருடன் தாழ்ப்பாளை நீக்குகிறான். கண்ணாடி உடைந்ததுமே அந்த இடத்தில் வேறு கண்ணாடியோ மரப் பலகையோ பொருத்தியிருந்தால் இந்தச் சங்கடம் வந்திருக்காது.

உங்கள் கோட் ஸ்டாண்டை ஜன்னலுக்குப் பக்கத்திலேயே அடித்திருக்கிறீர்கள். கெட்டிக்காரத் திருடன், கொக்கி மாட்டிய தடியை நீட்டி உங்கள் துணிகளை எடுத்துக்கொண்டு போகிறான். இப்படி எத்தனையோ விலையுயர்ந்த கம்பளிக் கோட்டுகள் திருட்டுப் போயிருக்கின்றன. ஆகையால் இனியாவது கோட் ஸ்டாண்டை ஜன்னலிலிருந்து தூரத்தில் அடியுங்கள்; அல்லது ஜன்னலை மூடிவையுங்கள்.

சில வீடுகளில் கணவன் மனைவி ஆகிய இரண்டே பேர் இருக்கிறார்கள். அவர்கள் அடிக்கடி



உடைந்த ஜன்னல் வழியே தாழைப் பெயர்க்கிறான்.

சினிமாவுக்குப் போகிறார்கள். பேசாமல் போய்த் தொலையக் கூடாதோ? பக்கத்து வீட்டு நீலலோசனியிடம், "எங்கள் பால்காரன் வருவான். கால் படி பால் வாங்கி வையுங்கள். நாங்கள் சினிமாவுக்குப் போய் வருகிறோம்" என்கிறார்கள். சாலையில் தன்பாட்டுக்குப் போகும் ஒரு சோதாப் பயலின் காதில் இது விழுகிறது. அவன் முகம் மலருகிறது. அவன் பல நாளாகச் சோறின்றி இருப்பவன். அவர்கள் வீட்டைப் பூட்டிக்கொண்டு போவதை அவன் ஆவலோடு பார்க்கிறான். அவர்கள் திரும்பிவர, குறைந்த பட்சம் மூன்று மணி நேரம் ஆகும் என்று அவனுக்குத் தெரியும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அவன் மறு சாவி போட்டு வீட்டையே துவம்சம் செய்துவிடுகிறான். தம்பதிகள் திரும்பி வந்து பார்த்தால் அலமாரிகள் திறந்து கிடக்கின்றன; துணிகள் நாலு பக்கமும் சிதறியிருக்கின்றன; பெட்டிகளெல்லாம் வாயைத் திறக்கின்றன! 'சினிமாவுக்குப் போகிறோம்' என்று அவர்கள் விளம்பரம் செய்ததன் பயன் இது.

இதைவிட வேடிக்கையான சம்பவம் இன்னொன்று இருக்கிறது. வீட்டு வாசலைப் பூட்டிவிட்டு நீங்கள் சாவியை உங்கள் மனைவியின் வசதிக்காக இறவாணத்தில் வைக்கிறீர்கள் அல்லது ஜன்னலைப் பாதி திறந்து வைத்து ஒதுக்கமாகச் சாவியைப் போடுகிறீர்கள். இது உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் மட்டும் தெரிந்த ரகசியம் என்று நினைக்க வேண்டாம். வெளி ஆள் ஒருவனுக்கும் இது தெரிகிறது. ஒரு தடவை கதவுப் பக்கமாக உட்புறம் இருந்த ஆணியில் சாவி தொங்குவதைக் கண்ட ஒரு திருடன், சுலபமாக உள்ளே புகுந்து வீட்டைச் சூறையாடிவிட்டான்.

இரவில் தூங்கப் போகுமுன்பு எல்லாக் கதவுகளையும் சரியாகத் தாழிடுங்கள். இரவில் வெளியிலிருந்து வரும்போது, கம்பிகளின் இடுக்கில் கைவிட்டு நீங்கள் வாசற் கதவைத் திறக்கிறீர்களா? பேஷ்! அதைத்தான் திருடனும் செய்கிறான்.

ஒரு கிராமத்தில் பணக்கார அம்மாள் ஒருத்தி இருக்கிறாள். அவள் விதவை; வீட்டில் வேறு யாரும் இல்லை. திருடர்களிடம் அவள் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க விரும்பினாள். வெளி வாசற் கதவை அவள் கயிற்றினால் கட்டி அந்தக் கயிற்றின் முனையை அவள் தன் படுக்கையறையிலிருந்த ஒரு மணியோடு பிணைத்திருந்தாள். யாராவது வாசற் கதவைத் திறக்க முயன்றால் உடனே உள்ளே மணி அடிக்கும். அவளுடைய இந்த முன் ஜாக்

கிரதையினுல் ஒரு தடவை ஒரு திருடர் பட்டாளமே போலீசாரிடம் மாட்டிக்கொண்டது.

இரவில் வெளியே போகும்போது அக்கம்பக்கத்தில் தடபுடல் செய்யாமல், வீட்டில் ஒரு விளக்கையும் ஏற்றிவிட்டுப் போவது நல்லது. வீட்டில் யாரோ இருக்கிருர்கள் என்றே திருடன் நினைப்பான்; துணிவாகக் கதவை உடைத்துக்கொண்டு உட்புக மாட்டான்.

வீட்டுக் கூரையைப் பிய்த்துக் கொண்டு வரும் திருடர்கள் உண்டு. மங்களூர் ஓடு போட்ட வீடுகளில், ஓட்டுக்குக் கீழே தட்டியடித்து வைப்பது நல்லது.

ஜன்னலுக்குப் பக்கத்திலேயே மேஜைமேல் விலையுயர்ந்த பொருள்களை வைக்கிறீர்களே! திருடர்களுக்கு இதைவிட வரவேற்பு வேறு என்ன வேண்டும்?

வீடுகளை ரிப்பேர் செய்யும்போது நீண்ட ஏணிகளைச் சுவரில் சார்த்தி வைக்கிருர்களே. அதைப் பயன்படுத்திக்கொள்ளத் திருடனுக்கு எவ்வளவு நேரமாகும்! உள்ளே புகுந்ததும் அறையிலே பெட்டிகள் ஒன்றன்மேல் ஒன்ருக அடுக்கியிருக்கின்றன. அவன் எல்லாப் பெட்டிகளையுமே ஒவ்வொன்ருக எடுத்து அப்புறப்படுத்தி விடுகிருன். இந்தப் பெட்டிகளின் பக்கவாட்டுப் பிடிகளைச் சேர்த்து ஒரு சங்கிலியில் நீங்கள் பிணைத்து வைத்துப் பூட்டும் போட்டிருந்தால், அந்தத் திருடன் சுலபமாகப் பெட்டிகளை அப்புறப்படுத்த முடியாது. பெட்டிகள் கனமாகவும், பூட்டுகள் உறுதியாகவும் இருக்க வேண்டும்.



பெட்டிகளுக்குச் சங்கிலியிட்டுப் பூட்டியிருப்பதால் திருடனுக்குத் தொல்லையாகிவிட்டது.

கண்ணுடியோ கம்பியோ போட்ட ஜன்னல்கள் அல்லது கதவுகளுக்கு வலைகளைப் பொருத்துவது நல்ல பாதுகாப்பு. காற்று வருவதற்காக மேலேயுள்ள சிறு ஜன்னல்களில் கம்பிகள் மிகவும் குட்டையாக இருக்க வேண்டும். அவற்றுக்கும் வலை அடித்து விடுவது நல்லது.

பையன்களிடம் நிறையப் பணம் கொடுத்தோ, பெண்களுக்கு நிறைய நகை அணிவித்தோ வெளியே அனுப்பும்போது அவர்களுக்குத் தகுந்த துணைக்கும் ஏற்பாடு செய்யுங்கள். இது ராம ராஜ்யமல்ல. எங்கே பார்த்தாலும் வேலையில்லாத் திண்டாட்டமும் பணமுடையும் தாண்டவமாடுகின்றன. இந்த நிலையில் நீங்கள் அஜாக்கிரதையாக இருந்துவிட்டுப் பிறகு போலீஸார் புலன் விசாரித்தும் உங்கள் பண்டம் கிடைக்கவில்லையென்ருல் அவர்களைப் பழிப்பதிலே என்ன பயன்?

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிறார். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.

த. பாலாம்பாள்:

கேள்வி: எனக்கு நெஞ்சு வலிக்கிறது. 'லங்ஸ்', 'ஹார்ட்' இரண்டிலும் கெடுதல் இல்லை என்கிறார்கள் டாக்டர்கள். எனக்கு மலச்சிக்கல் உண்டு. நெஞ்சு வலி எதனால் எனக்கு உண்டாகிறது என்றும், என்ன செய்தால் குணப்படும் என்றும் தெரிவியுங்கள்.

விடை: பல மருந்துகளை உண்டிருக்கிறீர்கள்; பல இஞ்செக்ஷன்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஆனால் முக்கியமான காரணத்தை நீக்கிக்கொள்ளவில்லை. மலச்சிக்கல் வாயுவைக் கிளப்பி நெஞ்சு வலியை உண்டாக்கும். இருதயம், சுவாசப் பை இரண்டிலும் கோளாறு இல்லை என்று டாக்டர் சோதித்துச் சொல்லியிருப்பதால், மலச்சிக்கலுக்குப் பரிகாரம் வைத்தியரிடமே நேரில் கேட்டு அறிந்துகொள்ளவேண்டும்.

சோம. சுப்பையா:

கே: நான் ஒரு சினிமா பார்த்தேன். திரையில் ஒரு பல்லி இருந்தது, என் கண்ணுக்குத் தெரிந்தது. அந்தப் பல்லி உயிருடன் இருந்தது. பிலிம் ஓட்டும் போது வரும் ஒளி அந்தப் பல்லியைத் தாக்கவில்லை. பிரகாசமான ஒளியில் அந்தப் பல்லி உயிர் வாழ்ந்திருப்பது எப்படி?

வி: இந்தக் கேள்வி வைத்தியம் அல்லது சுகாதார விஷயமான கேள்வியல்ல. என்றாலும் விடை கூறுகிறேன். நண்பர் பார்த்த படம் அவருடைய உள்ளத்தைக் கவரவில்லை என்று புலனாகிறது. படம் கவர்ச்சிகரமாக



இருந்தால், பல்லி இருந்ததைக் காண முடியாது. மாணுக்கனை வாத்தியார், "எல்லாம் நுழைந்ததா?" என்று கேட்டபோது "வால்மட்டும் நுழையவில்லை" என்று அவன் சொன்னது போல் இருக்கிறது, நண்பர் படம் பார்த்ததும். இது கிடக்கட்டும். பிலிம் ஒளியில் திரைமேல் இருக்கும் பல்லி இறந்து போகாது.

ஏ. பக்கீர் ஹுசைன்:

கே. 1: மாட்டு வண்டி, பஸ் இவைகளில் என் நண்பர் செல்லும் போது வாந்தி எடுக்கிறார். ஆனால், ரெயில் வண்டி, சைக்கிள் இவைகளில் செல்லும்போது வாந்தி எடுப்பதில்லை.

வி: கப்பல் யாத்திரை செய்பவர்களுக்கு இந்த மாதிரி கோளாறுகள் ஏற்படுவது சகஜம். கப்பல் அலைகளால் ஏற்படும் அசைவில், உடம்பில் சில நரம்பு நிலைகளுக்கு ஓரளவு அதிர்ச்சி ஏற்படுகிறது. இதனாலேதான் வாந்தி உண்டாகிறது. மாட்டு வண்டியில் செல்லும்போதும் பஸ்ஸில் செல்லும் போதும் சிலருக்கு இதேபோல் அதிர்ச்சி ஏற்படுகிறபடியால் வாந்தி உண்டாகிறது. ரெயில் பிரயாணத்திலும் சைக்கிள் சவாரியிலும் ஆட்டம் உண்டாவதில்லை; வாந்தியும் உண்டாவதில்லை.

கே. 2: என் தம்பிக்கு வயது 15. அவன் தலைமயிர் அடர்த்தியாக இல்லை. இப்போதே நரைத்துப் போய்விட்டது. அதை அடர்த்தியாக வளரச் செய்யவும், அதன் நரையைப் போக்கவும் வழி உண்டா?

வி: உடம்பில் பொதுக்கோளாறுகள் இருப்பதால் தோன்றக் கூடியவை இந்தக் குறிகள். இவைகளுக்குப் பரிகாரம் தேடி, உடம்பை ஆரோக்கிய நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அப்போது தலைமயிரும் அடர்ந்து வளரும்; நரையும் மாறும். 'தைராயிட்' என்னும் கிரந்திக் கோளாற்றினால் இது ஏற்படலாம். வைத்தியரை நேரில் கண்டுதான் பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும்.

கே. அப்துல் ரஹீம், பழனி:

கே: எனக்கு அடிக்கடி ஏப்பம் வந்துகொண்டே இருக்கிறது. வயிற்றில் ஏதோ கட்டி போல் இருப்பதாகத் தெரிகிறது. நான்கு அல்லது ஐந்து ஏப்பங்கள் வந்தவுடன் உடம்பு சௌக்கியமாயிருக்கிறது. இதற்கு என்ன காரணம்? என்ன செய்ய வேண்டும்?

வி: ஜீரண சக்திக் குறைவே, ஏப்பம் அடிக்கடி வருவதற்கு முக்கியமான காரணம். ஜீரண சக்தி கெடுற்றுப் போவதற்குப் பல காரணங்கள் உண்டு. வயிறு கட்டி போல் ஆகிறபடியால், அதில் புண் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. வயது நாற்பதுக்கு மேல் இருந்தால், புற்று நோய் இருக்குமோ என்றும் ஆராய வேண்டியிருக்கும். வைத்தியரிடம் சோதனை செய்துகொள்வது அவசியம்.

ராஜம் பொன்னு, கோச்சி.

கே. 1: எங்கள் வீட்டில் ஒருவருக்கு 'டைஃபாய்ட்' ஜுரம் வந்து தலைக்கு நான்கைந்து முறை தண்ணீர் விட்டாயிற்று. ஆனாலும், இப்போது மாலை வேளையில் 99 முதல் 99.4 டிகிரி வரையில் ஜுரம் வந்துகொண்டேயிருக்கிறது. காரணம் என்ன? பயம் ஒன்றும் இல்லையே?

வி: 'டைஃபாயிட்' ஜுரத்துக்குப் பிறகு இப்படி இடைவிடாமல் 99.4 டிகிரி ஜுரம் வந்துகொண்



டிருப்பதில்லை. சிலருக்கு அவ்வப்போது திடீரென்று ஜுரம் தோன்றி மறையலாம். ஆகவே, முதலில் தோன்றியது 'டைஃபாய்ட்' ஜுரந்தானா என்று சந்தேகிக்க நேர்கிறது. இந்த ஜுரத்தை இப்போது நன்றாக ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.

கே. 2: தித்திப்புப் பொருள் எதையேனும் தின்றால் பல் மிகவும் கூசுகிறது. ஏதாவது வைட்டமின் குறைவினால் இப்படிக் கூசுகிறதா? இதற்கு என்ன செய்யவேண்டும்?

வி: 'கால்சிய'க் குறைவினால் பல் கூசலாம். கால்சியம் உப்புக்களைச் சாப்பிட்டு இதைக் குணப்படுத்திக் கொள்ளலாம்.

எம். வாசுதேவன், பேரம்பூர்:

கே. 1: பங்களூரிலேயே வசித்து வந்த பிறகு சென்னைக்கு வந்ததும் என் உடம்பு உஷ்ணமாகிவிட்டது. சிறுநீர் மிகவும் மஞ்சளாயிருக்கிறது. அதைக் கழிக்கும்போது எரிச்சலும் உண்டாகிறது. உடம்பில் கட்டிகளும் புறப்படுகின்றன.

வி: குளிர்ச்சியான பங்களூரிலிருந்து உஷ்ணமான சென்னைக்கு வந்தால், இப்படித்தான் இருக்கும். குளிர்ந்த பிரதேசத்தில் சிறுநீர் வழியாகத்தான் உடம்பிலிருந்து நீர் வெளியாக வேண்டும். ஆகையால், சிறுநீர் தெளிவாகவும் ஏராளமாகவும் கழியும். சென்னையில் வந்ததும் வேர்வை அதிகமாவதால் சருமம் தளரும்; கட்டிகள் தோன்றலாம். சிறுநீர் குறைந்தும் அதில் கழிவுப்பொருள் அதிகமாய்க் கலவையாகும். இப்படிப்பட்ட காரணங்களால் நண்பர் அவதிப்படுகிறார்.

சென்னை உஷ்ணத்தைத் தவிர்ப்பதற்காக ஊட்டிக்குப் போகிறவர்கள் சென்னைக்குத் திரும்பியவுடன் படுகிற பாட்டைப் பார்த்தால், 'இவர்கள் சென்னையிலேயே இருக்கலாம்; அல்லது ஊட்டியிலேயே இருக்கலாம். அப்படிச் செய்யாமல் ஏன் இப்படித் தவிக்கிறார்கள்?' என்றுதான் நமக்குத் தோன்றும்.

கே. 2: சென்னை வாசத்தில் என் தலைமயிர் உதிர்வதால், வழுக்கை விழுந்துவிடுமோ?

வி: தலைமயிர் உதிர்வதற்கு வேறு காரணம் தேடவேண்டும். சென்னை வாசம் காரணமாகாது.

சி. அ. அனந்தநாராயணன், திருப்பனந்தாள்:

கே. 1: என் வயது 20. அதற்குரிய லட்சணங்களைக் காணவில்லை. என்ன டானிக் சாப்பிடலாம்?

வி: இந்த வயதில் பசி நன்றாயிருந்தால், பால் நிறையச் சாப்பிட வேண்டும். டானிக் எதுவும் அவசியமில்லை. மீன் எண்ணெய்களை வாங்கிச் சாப்பிடலாம். கோழி முட்டையைப் பாலில் கலந்து சாப்பிடலாம். அது உடம்பைப் பருமனாக்கும்; பலத்தைக் கொடுக்கும். ஆனால் தேகப்பயிற்சியும் அவசியம்.

கே. 2: அடிக்கடி தலைவலி வருகிறது; புருவம் வலிக்கிறது.

வாசித்தால் கண்ணிலிருந்து நீர் ததும்புகிறது. பரிகாரம் வேண்டும்.

வி: மற்றப்படி ஆரோக்கியக் குறைவு எதுவும் இல்லாவிட்டால் கண்ணாடி போட்டுப் பார்வைக் குறைவைச் சரிக் கட்டிக்கொள்ள வேண்டியது தான்.

கே. பி. சிதம்பரம், தென்காசி:

கே: சிறு பையன் இழுப்பு வியாதியால் வருந்துகிறான். மாதத்தில் ஒரு தடவைக்குக் குறையாமல் இழுப்பு வருகிறது. என்ன செய்யலாம்?

வி: இழுப்பு ஒரு குடும்பநோய். அதற்குப் பரிகாரம் சொல்வது கஷ்டம். தாற்காலிகமான மருந்துகளைப் பிரயோகித்து இழுப்பை நிறுத்தலாம். ஆனால் அடியோடு குணப்படுத்த முடியாது. ஊரை விட்டு வேறு ஊருக்குச் சென்றால் சிலருக்கு இது குணமாகிறது. மல பரிசோதனையும் ரத்த பரிசோதனையும் செய்து காரணங்களை நீக்கிக் குணப்படுத்த முயலலாம். அதிருஷ்டம் வேண்டும் குணமாவதற்கு. யோகாசனங்கள் செய்து சிலர் குணமடைகிறார்களாம்.

ராணி, காரைக்கால்:

கே: வேர்வை அதிகமாவதால் அக்குளில் ஈரமாகிறது. மஞ்சள் நிறமும் உண்டாகிறது. பரிகாரம் உண்டா?

வி: ஆள் பருமனாயிருந்தால் வேர்வை அதிகமாகலாம். பருமனைக் குறைக்க ஆகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்; பயிற்சியும் வேண்டும்.

மகாதேவன், சிமோகா:

கே: கடந்த இரண்டு வருஷங்களாக எனக்குக் காதில் துர்நாற்றமும் சீழும் வருகின்றன. எண்ணெய் தேய்த்துக்கொள்ளாதது காரணமா? என்ன பரிகாரம்?

வி: காதில் சீழ் வருவதற்குப் பல காரணங்கள் உண்டு. இரண்டு வருஷங்களாகச் சீழ் வருகிறதென்றால், காதுக்குள் எலும்பைப் பற்றிய கோளாறு இருக்க வேண்டும். அதைக் குணப்படுத்த நல்ல மருந்துகள் இப்போது இருக்கின்றன. காது வைத்திய நிபுணரைக் கேட்டுக்கொள்ளுங்கள். எண்ணெய் தேய்த்துக்கொள்ளாதது காரணமாகாது.

காமகோடி பீடம்

★

இந்த மடத்துக்கு முன் காலத்தில் ஏராளமான சோத்துக்களும் செல்வாக்கும் இருந்திருக்கின்றன. இந்த விவரத்தைத் திருவாங்கூர்ப் புராதனப் போருள் ஆராய்ச்சி இலாகாவின் பிரதான உத்தியோகஸ்தராயிருந்து காலஞ்சென்ற டி. ஏ. கோபீநாத ராவின் புத்தகத்திலிருந்து 'குமரி மலர்' எடுத்துத் தந்திருக்கிறது.

13-ஆம் நூற்றாண்டில் காஞ்சியில் ஆண்டு வந்த சோழ மன்னன், ஒரு கிராமத்தைக் காமகோடி பீட மடத்துக்குக் கொடுத்திருக்கிறான். இந்த மடம் அஸ்திசைலநாதர் என்ற வரதராஜரின் கோயிலுக்கு மேற்கில் இருப்பதாக அந்தச் சாஸனம் சொல்லுகிறது.

விஜயநகர சாம்ராஜ்யம் இருந்த காலத்தில் ஸ்ரீ கிருஷ்ண தேவ ராயரும் அவருடைய பிதா நரசிம்மதேவ ராயரும் செங்கல்பட்டு ஜில்லாவிலும் வட ஆர்க்காடு ஜில்லாவிலும் ஆறு முழுக் கிராமங்களைக் காஞ்சி ஸ்ரீ மகாதேவ சரஸ்வதி, ஸ்ரீ சந்திரசூட சரஸ்வதி, ஸ்ரீ சதாசிவ சரஸ்வதி என்னும் ஆசாரியர்களுடைய காலத்தில் கொடுத்திருக்கிறார்கள்.

17-ஆம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற பத்திராசல ராமதாஸரின் தாய்மாமன்களும் கோல்கொண்டா ராஜ்யத்தின் மந்திரிகளுமான அக்கன்னா, மாதன்னா என்பவர்கள், காஞ்சி சாரதா மடத்துக்கு ஒரு கிராமம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

மதுரையில் பரோபகாரி என்று கீர்த்தி பெற்ற ராணி மங்கம்மாளின் புத்திரரான விஜய சொக்கநாயக்கர் 1709-ஆம் வருஷத்தில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள 6 கிராமங்களில் சில நிலங்களை லோக குரு சங்கராசாரிய ஸ்வாமிகளுக்குக் கொடுத்திருக்கிறார்.

1710-ஆம் வருஷத்தில் முகம்மதிய சாம்ராஜ்யத்தில் ஆலம்கீர் என்பவரின் உத்தரவின்பேரில் செங்கல்பட்டு ஜில்லாவில் ஒரு கிராமத்திலிருந்து காஞ்சி சாரதா மடத்து ஸ்ரீ சங்கராசாரியருக்கு வருஷ வர்த்தனையாக 115 வராகன் கொடுக்கும்படி ஓர் இனாம் சாஸனம் ஏற்பட்டது.

இந்தச் சாஸனங்களிலிருந்து இரண்டு விஷயங்கள் தெளிவாகின்றன: ஒன்று, மடத்துக்கு இந்தக் காலங்களில் முழுக் கிராமங்கள் ஏழும், ஏழு கிராமங்களில் சில பாகங்களும், ஒரு கிராமத்தின் வரும்படியில் ஒரு பாகமும் கிடைத்திருக்கின்றன; இரண்டு, 1710-ஆம் வருஷம் வரைக்கும் மடம் காஞ்சிபுரத்தில்

மூலம்: குமரி மலர் (தமிழ்: ஆகஸ்ட் '54), மௌப்ரேஸ் ரோடு, சென்னை.

இருந்திருக்கிறது. பிறகு கர்நாடக யுத்த காலத்தில் நாட்டின் சீர் கேடான நிலைமையை உத்தேசித்து மடம் காஞ்சியை விட்டுக் கிளம்பித் தெற்கே பல பாளையக்காரர்களின் ஆதரவில் இருந்து வந்து, கடைசியாக 1730 - ஆம் வருஷ வாக்கில் தஞ்சாவூர் அரசரின் ஆதரவினுல் கும்பகோணம் போய்ச் சேர்ந்ததாகத் தெரிகிறது. அந்தக் காலத்தில் மடத்தின் சொத்துக்கள் இப்போது இருப்பதைவிடப் பத்து மடங்காவது அதிகமாக இருந்திருக்க வேண்டும். ஆனுல், இப்போதோ, செங்கற்பட்டு ஜில்லாவில் ஒரு கிராமத்திலும் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் இரண்டு கிராமங்களிலும் ஆக மூன்று கிராமங்களில் சில பகுதிகளே மடத்தின் அநுபவத்தில் மிஞ்சி இருக்கின்றன.

சரித்திர சம்பந்தமாகவும் பழைய நாணயங்கள் பற்றியும் விவரங்கள் சேகரிப்பதற்காக 24-12-1816 முதல் 27-5-1817 வரையில் புதுச்சேரி, காரைக்கால் முதலிய அநேக இடங்களில் மாக்கன்ஸி என்பவரின் மகாராஷ்டிர மொழிபெயர்ப்பாளரான பாபுராவ் என்பவர் சுற்றிக்கொண்டிருந்தார். அவருடைய குறிப்புக்களில் பின்வரும் விஷயங்கள் இருக்கின்றன:

"1817-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் 8, 9-ஆம் தேதி நாச்சியார் குடி வழியாய்க் கும்பகோணம் போய்ச் சேர்ந்தேன். ஷராப்புக்களிடமிருந்து சில நாணயங்கள் சேகரம் செய்தேன். ஏப்ரல் மாதம் 10-ஆம் தேதி பிரதான குருவான சங்கராசாரியரைத் தரிசித்தேன். அவரைத் தரிசிப்பதற்காகப் பழம் முதலியவை வாங்குவதற்கு ரூ. 4 செலவாயிற்று. அவரைக் கண்டு அவருடைய மடத்தில் இருக்கும் செப்பேடுகளுக்குப் பிரதி தரவேண்டுமென்று கேட்டேன். மடத்தின் காரியஸ்தர்கள் எவ்வளவோ ஆபத்தான யுத்த காலங்களில்கூட மிகவும் ஜாக்கிரதையாகக் காப்பாற்றி வந்திருந்த அந்த மூல சாஸனங்கள் எங்கே தங்கள் கையை விட்டுப் போய் விடுமோ என்ற பயத்தால், தங்களிடம் அந்த மாதிரி சாஸனம் எதுவும் கிடையாது என்று சாதித்து விட்டார்கள். எனக்கு மூல சாஸனங்கள் வேண்டியதில்லை என்றும் பிரதி எடுத்துக்கொள்கிறேன் என்றும் அவர்களிடம் சொன்னேன். எனவே, அவர்கள், 'மடத்துக்கு முன்னொரு காலத்தில் சொந்தமாயிருந்து, இப்போது கைவிட்டுப் போன நிலங்கள் சம்பந்தமாக நீங்கள் உங்கள் எஜமானருக்குச் சிபாரிசு செய்யவேண்டும்; அவைகளில் சில கிராமங்களாவது எங்களுக்கு மறுபடியும் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டும். இதற்குச் சம்மதித்தால், சோழ, பாண்டிய, விஜய நகர ராஜவம்சங்களுக்கு ஆசாரிய ஸ்தானம் என்ற முறையில் ஆசாரிய பரம்பரையின் சரித்திரங்களை எழுதுவதற்கு வேண்டிய அநேக விவரங்கள் தருகிரேம்' என்று சொன்னுர்கள். அவர்கள் கேட்டுக் கொண்டபடி நான் அவர்களுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் கொடுத்தேன். இதன்மேல் அவர்களுக்கு என்னிடம் நம்பிக்கை ஏற்பட்டது.

"என்னை அவர்களுடைய மடத்துக்கு அழைத்துக்கொண்டு போய் அங்கிருந்த 125 தாமிர சாஸனங்களைக் காண்பித்தார்கள். ஒவ்வொரு சாஸனத்திலும் ஐந்தாறு

செப்பேடுகளைப் பிணைத்திருந்தார்கள். எனக்கு இரண்டு சாஸனங்களின் பிரதிகளைக் கொடுத்தார்கள். ரூபாய் 5 பெறுமான வஸ்திரமும் எனக்குப் பரிசளித்தார்கள்.”

பாபுராவ் கொடுத்திருக்கும் விவரங்களிலிருந்து ஒவ்வொன்றும் 5 தகடுகள் உடைய 125 தாமிர சாஸனங்கள் அந்தக் காலத்தில் மடத்தில் இருந்தன என்பது வெளியாகிறது. இப்போது மடத்தில் இருப்பது கோபீநாத ராவ் வெளியிட்டிருக்கும் 10 சாஸனங்கள்தான். மற்றவை என்ன வாயின என்று தெரியவில்லை. தாமிரப் பாத்திரங்கள் செய்வதற்காக அந்தத் தாமிர சாஸனங்களை உருக்கியிருக்கலாம் என்று சொல்கிறார்கள். மாக்கன்ஸி காலத்து மானேஜர்களுக்கு இருந்த அவ்வளவு அக்கறை பின்காலத்தில் இருந்தவர்களுக்கு இல்லாததாலோ அல்லது அந்தச் சாஸனங்களில் கண்ட சொத்துக்களைத் திரும்பப் பெறும் விஷயத்தில் அவர்களுக்கு நம்பிக்கை போய்விட்டதாலோ, இந்த மாதிரி அசந்தர்ப்பம் நேர்ந்திருக்கலாம்.

மாக்கன்ஸியின் கையெழுத்துப் பிரதிகள் சம்பந்தமாக டெய்லர் என்பவர் தயாரித்த மூன்றாவது புத்தகத்தின் 340-341-ஆம் பக்கங்களில் விஷ்ணு காஞ்சியில் கிடைத்த ஒரு தாமிர சாஸனத்தின் சுருக்கம் இருக்கிறது. அந்தப் புத்தகத்தில் தாதாசாரிய வம்ச பரம்பரைபற்றிய விவரங்கள் இருக்கின்றன. தாதாசாரியருக்கு முன் இருந்தவர்களின் விவரங்களும் இதில் இருக்கின்றன. இவை அந்தக் கோயிலின் காலத்தை நிர்ணயிப்பதற்குப் பிரயோசனப்படலாம். இதில் ஸ்ரீ சங்கராசாரியர், ஸ்ரீ ராமாநுஜாசாரியர் இவர்களின் பெயர்களும் வருகின்றன என்று டெய்லர் எழுதியிருக்கிறார். இதிலிருந்து ராமாநுஜாசாரிய பரம்பரையில் உள்ளவர்களுக்குக் காஞ்சி விஷ்ணு கோயிலின் நிர்வாகத்தில் சம்பந்தம் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

வரதராஜர் கோவில் சுவர்களிலிருந்து பிரதி செய்து கவர்ன்மெண்ட் கல்வெட்டு எழுத்து டிபார்ட்மெண்ட் வெளியிட்டுள்ள 1919-ஆம் வருஷத்து 443-ஆம் நம்பர் சாஸனத்தில் இந்த விஷயம் இருக்கிறது: ராமாநுஜ சம்பிரதாயத்தைச் சேர்ந்த ஜீயர், வரதராஜர் கோயிலுக்குக் கொடுத்த நான்கு கிராமங்களில் ஒன்றான சுருட்டில் என்ற கிராமத்துக்குச் சங்கராசாரியபுரம் என்று மற்றொரு பெயர் உண்டாம். அந்தக் கிராமத்தில் ஒரு குடியானவன் தன் பூமியை வெட்டும்போது அங்கே அத்வைத சந்நியாசி ஒருவரின் விக்கிரகம் அகப்பட்டதாம். இந்தக் கிராமம் விஷ்ணு காஞ்சியிலிருந்து தெற்கே 7 மைல் தூரத்தில் இருக்கிறது.

விஷ்ணு காஞ்சி கோயிலின் மற்றொரு சாஸனத்தின்படி காஞ்சீபுரம் பெருமாள் கோயிலில் இருக்கும் வேத மடத்தில் வசிக்கும் வேதேந்திரசாகரருக்குப் பிட்சைக்காக ஹரியண்ண உடையாரென்ற ஹரிஹரர், 1378-இல் ஒரு கிராமம் கொடுத்தார் என்று தெரிகிறது. விஷ்ணு காஞ்சியில் வரதராஜர் கோயிலில் உள்ள வேத மடத்தில் அந்தக் காலத்தில் அத்வைத சம்பிரதாயத்தில் ஒன்றான ‘சாகர’ என்னும் பிரிவைச்

சேர்ந்த ஒரு சந்நியாசி மடம் இருந்திருக்கவேண்டும் என்று இதனுல் தெரிகிறது.

சிவ காஞ்சியில் உள்ள கைலாச நாத சுவாமி கோயிலுக்குச் சமீபத்தில் உபநிஷத் பிரம்மேந்திர மடம் என்ற மற்ருேர் அத்வைத மடம் இருக்கிறது. இந்த மடத்தின் பூர்வாசாரியர்களில் ஒருவர், 108 உபநிஷதங்களுக்கும் பிரம்ம சூத்திரத்துக்கும் பகவத்கீதைக்கும் வியாக்கியானம் செய்திருக்கிருர்.

ஸ்ரீ சங்கரர் காஞ்சியை அடைந்தது, அங்கே காமாட்சியைப் பிரதிஷ்டை செய்து அங்கேயே சித்தி அடைந்தது இவை பற்றி ஹுல்ஷ் என்பவர் தம் ரிப்போர்ட்டில் சொல்லியிருக்கிருர். 1946-ஆம் வருஷம் கூடலி சிருங்கேரி மடத்தார் வெளியிட்டுள்ள பாரதி சந்நியாசிகளின் 'குரு பரம்பரா ஸ்தோத்திர மாலை'யில் உள்ள விவரம் இதை ஊர்ஜிதப்படுத்துகிறது.

காஞ்சி காமாட்சி கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் ஆசாரியரின் மூர்த்தியைத் தவிர, செங்கல்பட்டு ஜில்லாவில் திருவொற்றியூர், மாங்காடு, பூவிருந்தவல்லி (பூனமல்லி), பாப்பான் சத்திரம், கடம்பர் கோயில் முதலிய கிராமங்களிலும் நகரங்களிலும் உள்ள ஆலயங்களில் ஆசாரியரின் மூர்த்திகள் இருக்கின்றன. பூஜைக்கேற்ற மூர்த்திகளைத் தவிர, காஞ்சீபுரத்தில் வரதராஜ ஸ்வாமி கோயில், ஏகாம்பரநாத ஸ்வாமி கோயில், கச்சபேசுவரர் கோயில், புண்ணியகோடீசுவரர் கோயில், செவிலிமேடு நரசிம்மர் கோயில் இவற்றின் தூண்களில் அத்வைத சந்நியாசி ஒருவரின் மூர்த்தி செதுக்கியிருக்கிறது. இது ஆசாரியரின் மூர்த்தியாகவே இருக்கவேண்டும்.

காஞ்சீபுரத்தில் ஈசானிய பாகத்தில் இருக்கும் சிவஸ்தானம் என்ற கோயிலில் கர்ப்பக்கிருகத்தின் பின்புறத்திலுள்ள கல் சுவரில் ஆசாரியரின் மூர்த்தி ஒன்று, சிவ பார்வதி, ஸ்கந்தர், சோமாஸ்கந்தர் இவர்களுக்குத் தண்டப் பிரணமம் செய்துகொண் டிருக்கும் பாவனையில் அமைந்திருக்கிறது. இதிலிருந்து, காஞ்சீபுரத்துச் சிற்பிகள் சங்கராசாரியரிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

1792-ஆம் வருஷத்திலே கிழக்கு இந்தியக் கம்பெனியார், கிருஷ்ணு முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள ஜில்லா அதிகாரிகளுக்கு ஆசாரிய ஸ்வாமிகளின் யாத்திரை சம்பந்தமாய் அனுப்பிய உத்தரவிலிருந்து, மடத்தில் 500 பேர் இருந்தார்களென்றும் வாகனங்கள், பரிவாரங்கள் முதலியவைகள் கூடவே சென்றதாகவும் தெரிகிறது.

கோபீநாத ராவ் வெளியிட்ட தாமிர சாஸனங்களிலிருந்து எவ்வளவு சொத்து மடத்துக்கு இருந்ததென்று தோன்றுகிறதோ அதில் பத்தில் ஒரு பங்குகூட இப்போதில்லை.

200 வருஷங்களுக்கு முன் ஏற்பட்ட யுத்தங்களின் காரணமாக மடத்தின் சொத்துக்கள் மிகவும் குறைந்து போய்விட்டாலும், சிஷ்யர்கள் மாத்திரமல்லாமல் பிற அபிமானிகளும் காட்டும் ஆதரவினுல் இந்த மடம் இப்போதும் ஸ்ரீ ஆதி சங்கரரின் உயர்ந்த கருத்துக்களை எங்கும் பரப்பிக்கொண்டுதான் வருகிறது.

கண்ணுக்குள்ளே கண்ணாடி

★

முகத்துக்கு அழகாக மூக்குக் கண்ணாடி அணிய ஆசைப்படுகிறவர் சிலர். அதை ஒரு தொல்லையாகக் கருதுகிறவரும் உண்டு. சிறிதும் சிரமம் இல்லாமல் கண்ணோடு கண்ணாகப் பொருந்தும் இந்தப் புதிய கண்ணாடி பற்றிய விவரத்துக்கு ஆதாரம் 'இல்லஸ்டிரேடட்'டிலுள்ள தகவல்.

நாம் சகஜமாகக் கண் பார்வையைச் சரிப்படுத்த உபயோகிக்கும் கண்ணாடியை மூக்குக் கண்ணாடி என்றுதானே சொல்லுகிறோம்? காதில் மாட்டிக்கொண்டாலும் மூக்கின் மேல்தானே நிற்கிறது; அதோடு காதில் மாட்டாமலும் மூக்கில் பதித்துக் கொள்ளும் கண்ணாடி இருக்கிறதே! ஆகவே, மூக்கு முக்கியமாக இருப்பதால் இப்படிப் பெயர் வந்திருக்கலாம். ஆனால் அசல் 'கண்'ணாடியே-அதாவது, கண்ணுக்குள் விழியோடு பொருத்தினாற்

ஒரே பெண் ஒரு படத்தில் சட்டம் போட்ட மூக்குக் கண்ணாடி அணிந்திருக்கிறாள். மறு படத்தில் புதுமையான 'மைக்ரோ-லென்ஸ்' அணிந்திருக்கிறாள்.

போல் போட்டுக்கொள்ளும் 'லென்ஸ்' - இருக்கிறது, தெரியுமா? கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக இதைப் பலர் உபயோகித்து வருகிறார்கள். கொஞ்சகாலமாக இவர்கள் தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது. மூக்குக் கண்ணாடிகளைவிட இந்த மாதிரி கண்ணோடு பொருத்தும் 'கண்'ணாடிகளே சௌகரியமானவை என்று அநுபவமூலம் நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள்.



காகிதத்தைப்போல் மெல்லிய 'மைக்ரோ-லென்ஸ்' ஒரு கட்டைவிரல் நுனியில் நிற்கும் தோற்றம்.

இப்போது அமெரிக்க விஞ்ஞானிகள் துளிக்கூட உறுத்தாதபடி கண்ணில் பொருத்தக்கூடிய சின்னஞ் சிறிய 'லென்ஸ்' கண்டுபிடித்திருக்கிறார்கள். இதை 'மைக்ரோ-லென்ஸ்' என்கிறார்கள்.

"இப்போது கிடைக்கும் 'லென்ஸ்'களுக்குள் இதுதான் சரியானது; சுலபமாகவும் போட்டுக்கொள்ளக்கூடியது" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

இதன் விட்டம் $\frac{3}{8}$ அங்குலம், கனம் $\frac{1}{8000}$ அங்குலம் என்றால் எவ்வளவு லேசாக இருக்கும் பாருங்கள்! விழியிலுள்ள வளைவுக்கேற்றபடி அமைந்திருப்பதால் இந்தப் புதிய மைக்ரோ-லென்ஸைச் சௌகரியமாய்ப் பொருத்திக்கொள்ளலாம். புதிய 'இன்செக்ஷன்-மோல்டிங்' முறை ஒன்றை அநுசரித்துத் தயாரித்த பிளாஸ்டிக் 'லென்ஸ்' இது. தூரப் பார்வை, சமீபப் பார்வை, அஸ்டிக்மாடிஸம் என்ற கோளாறு இப்படிப் பலவகைக் கண் பார்வைக் குறைகளையும் போக்கத் தகுந்தபடி இந்த 'லென்ஸ்'களைத் தயாரித்திருக்கிறார்கள். உலகிலுள்ள பல நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள் இந்த ஆராய்ச்சியில் ஒன்று சேர்ந்து ஈடுபட்டு உழைத்து வருகிறார்கள்.

பென்ஸில்வேனியா மாகாணத்திலுள்ள ஃபிலடெல்ஃபியா நகரில் கண் வைத்தியக் கல்லூரியில் வேலை பார்ப்பவர் டாக்டர் ஜான் வி. நீல். இவர் ஓர் ஆண்டுக்கு மேலாக இந்த 'லென்ஸ்'களைப் பல பேருக்கும் போட்டுப் பரிசோதித்திருக்கிறார். "துளிக்கூடக் கண்ணை உறுத்துவதேயில்லை" என்று இவர் உறுதி கொடுக்கிறார். அதற்கு மேல் கேட்பானேன்?

வெகு சீக்கிரத்தில் மூக்குக் கண்ணாடியே போய் மக்கள் இந்த 'மைக்ரோ-லென்ஸை' உபயோகிக்க ஆரம்பித்து விடுவார்கள் என்றுதான் தோன்றுகிறது.

மறைந்த கணித மேதை

டாக்டர் பா. நடராஜன்

'ஒளி விளக்குகள்' என்ற புஸ்தகத்தில் பெர்னர்ட் ஷா, மெஸ்மர், எஸ். எஸ். பிள்ளை இந்த மூன்று பேர் வரலாறுகளையும் தெள்ளிய தமிழில் ஸ்ரீ நடராஜன் எழுதியிருக்கிறார். மூன்றுபேரும் மூன்று வகையில் மேதைகள். இலக்கியத் துறையில் ஷாவும், மனத் தத்துவ ரீதியில் நடக்கும் வைத்தியத் துறையில் மெஸ்மரும், கணிதத் துறையில் பிள்ளையும் உலகப் புகழ் பெற்றவர்கள். இவர்களுடைய வாழ்க்கை விவரங்கள் மிக்க வியப்புக் குரியன. ஆசிரியர் நடராஜன் சிறிது காலத்துக்கு முன் வரையில் சென்னை அரசாங்கத்தின் பொருளாதார ஆலோசகராக இருந்தார். இப்போது ஆந்திர அரசாங்கத்தில் அதே மாதிரி பதவியை வகிக்கிறார்.

செங்கோட்டையில் ஏறக்குறைய நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு வேளாண்குடியில் தோன்றியவர் டாக்டர் சிவசங்கர நாராயண பிள்ளை. எஸ். எஸ். பிள்ளை என்று பிற்காலத்தில் இதை அவர் சுருக்கிக்கொண்டார். மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்தார். பெற்றோரையும் இளமையிலேயே இழந்தார். நெருங்கிய உறவினர் ஒருவருடைய ஆதரவில் வளர்ந்து வந்தார்.

செங்கோட்டையில் ஹைஸ்கூல் படிப்பையும் நாகர்கோயிலில் இண்டர்மீடியட் படிப்பையும் முடித்து, பிள்ளை திருவனந்தபுரத்து அரசர் கல்லூரியில் பி. ஏ. படிக்கச் சென்றுவிட்டார். ஒவ்வொரு வகுப்பிலும் அந்த வகுப்புக் கணித ஆசிரியர் வியக்கவும் புகழவும் பொருமை கொள்ளவும், அவர் மேதை விளங்கியது. ஒவ்வொரு வகுப்பிலும் அந்த வகுப்புப் பாடங்களைப் பல படி தாண்டிய கணிதப் புதிர்களிலேயே அவர் கவனம் முற்றும் சென்றது.

பி. ஏ. தேர்தலில் கணிதத் துறையில் இரண்டாவது வகுப்பிலேயே பிள்ளை தேறினர். மேதையான அவர் இரண்டாம் வகுப்பில் தேறியதற்கு என்ன காரணம்? பி. ஏ. வகுப்பில் படிக்கும்போதே அவர் எம். ஏ. வகுப்பையும் தாண்டிய பெரிய கணிதப் புதிர்களுக்கு விடை காணத் தொடங்கிவிட்டார். பரீட்சை வினத்தாள் வந்தது. தாம் அதுவரையில் வாழ்ந்த எட்டாத கொம்பிலிருந்து தரை மட்டத்துக்கு வரவேண்டிய

காப்பிரைட்: ஒளிவிளக்குகள் (தமிழ்ப் புஸ்தகம்); விலை: ரு. 1-0 0. வெளியிட்டோர்: பொற்றாமரைப் பதிப்பகம், 32, எழும்பூர் ஹைரோடு, சென்னை.

தாயிற்று. ஆகாய விமானத்தில் அற்புதமான கரணங்கள் போடும் ஒரு விமானியைக் கழைக் கூத்தாடிகளோடு போட்டி போடச் செய்தால்...?

'மேதை என்பது தொண்ணூற்றொன்பது பங்கு உழைப்பு; ஒரு பங்கு அருள்' என்று எடிசன் வருணித்தாராம். பிள்ளை பேருழைப்பைக் கைக்கொண்டார். கணிதத்தைத் தவிர உலகில் அவர் வேறு கருமம் அறியார்.

சென்னைப் பல்கலைக் கழக விதிகளின்படி ஒருவரைக் கணிதத் துறையிலோ மற்றெந்தத் துறையிலோ ஆராய்ச்சி மாணவராய் அநுமதிக்குமுன், குறைந்தது பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பில் தகுந்த முறையில் அவர் தேறியிருக்க வேண்டும். பிள்ளையோ பி. ஏ. வகுப்பில் மிக மட்டமான முறையில் தேறியிருந்தார். அப்படியிருந்தும் சென்னைப் பல்கலைக் கழகத்தார் கட்டாயம் செய்யாமல் விதியை நெகிழ்த்தி அவரை ஆராய்ச்சி மாணவராக நியமித்தார்கள். அரசாங்கத்திலோ, அரசாங்க முறைகளை அடிச்சுவடு பற்றி நடக்கும் பல்கலைக் கழகங்களிலோ பெரும்பாலும் இப்படி நடப்பதில்லை. முன்னே மற்றொரு கணித மேதை ராமநுஜம் விதிப்படி இப்படிப் பெற வேண்டிய தகுதியைப் பெருததால், கும்பகோணம் கல்லூரியின் ஆதரவைப் பெறத் தவறினர்; பிறகு அவருடைய மேதையை மேல்நாட்டுக் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தார் கண்டு ஆதரித்தார்கள். அது சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு அழியாத ஒரு மாசாகிவிட்டது. அந்த மாசு நீங்கவோ என்னவோ, பிள்ளையைச் சென்னைக் கழகத்தார் ஒரு விலக்காகச் சேர்த்துக்கொண்டார்கள். இதற்கு மிக அடிப்படையாக இருந்தவர் காலஞ் சென்ற சின்னத்தம்பிப் பிள்ளை. அவர் பச்சையப்பன் கல்லூரி பிரின்ஸ்பாலாகப் பல ஆண்டுகள் தொண்டு புரிந்து வந்தார். பி. ஏ. பட்டமே பெற்றிருந்தும், கணிதத் துறையில் ஓர் ஆசிரியராக இருந்தார். அவர் அன்றைப் பல்கலைக் கழக அமைச்சுக் குழுவில் இடம் பெற்றிருந்தார். கணிதத்தைப்பற்றி வரும் விவகாரங்களில் சின்னத் தம்பிப் பிள்ளையின் கருத்தையே எல்லாரும் ஏகமனதாக ஒப்பி வந்தார்கள். சாமானியருக்கு விதித்த விதிகள் மேதைகளுக்குச் செல்லுபடியாகமாட்டா என்று விண்டிகேட்டில் சின்னத்தம்பிப் பிள்ளை வற்புறுத்தியதன்பேரில், எஸ். எஸ். பிள்ளையை ஆராய்ச்சி மாணவராக அநுமதித்தார்கள்.

பிள்ளையாவது ஒருவிதமாகப் பி. ஏ. வகுப்பில் தேறினர். ஆனல் அவருக்கும் முன்னிருந்த கணித மேதை ராமாநுஜம் எஃப். ஏ. கூடத் தேற முடியாதவராக இருந்தார். கும்பகோணம் கல்லூரியில் எஃப். ஏ. வகுப்பில் பயிலுகையில், கணிதம் ராமாநுஜத்தின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டது. பிற துறைகளான ஆங்கில இலக்கியம், சரித்திரம், உடல் நூல் முதலிய எல்லாவற்றையும் அவர் மறந்தார். வகுப்பில் என்ன நடக்கிறதென்று தெரியாமலே தம் கணித உலகத்திலேயே மூழ்கியிருந்தார். இதனல் எஃப். ஏ. வகுப்பில் தேற முடியாமல் தெலுங்கு தேசத்துக்கு ஓடிவிட்டார்! 'மேதை தான் கருதியதையே செய்கிறது; திறமையோ தன்னால் முடிந்ததைச் செய்கிறது'

என்பது மேல்நாட்டுப் பழமொழி.

பிள்ளை, செங்கோட்டையிலிருந்து புறப்பட்டுச் சென்னைக்கு வந்ததே ஒரு கதை. பரீட்சை முடிந்ததும், அவருடைய அபார கணித ஞானத்தையும், ஆராய்ச்சித் திறனையும் அறிந்த ஆசிரியர், சென்னையில் சில நண்பர்களுக்குக் கடிதங்கள் கொடுத்து வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார். பிள்ளையின் இனத்தவரும் நெருங்கிய உறவினருமான ஒருவர் அப்போது பிரபல வக்கீலாகச் சென்னையில் இருந்தார். அன்றைய நீதிக்கட்சி அரசியலிலும் இந்த வக்கீல் பிரமுகருக்குச் சிறப்பான செல்வாக்கு இருந்தது.

பிள்ளை இந்தப் பிரபலஸ்தருக்கும் ஒரு கடிதம் கொண்டுவந்தார். யாருமே தமக்கு நிகரில்லையென்றும் தாம் அறியாத கலையை எவருமே அறிந்ததில்லை யென்றும் கருவம் கொண்டிருந்த இந்த வக்கீல், பிள்ளையின் ஏழைமையையும் தாழ்மைத் தோற்றத்தையும் கண்டு எள்ளி நகையாடினாராம். "கணிதத்தில் என்ன ஆராய்ச்சி!" என்று கையாண்டி செய்தாராம். மனமுடைந்த பிள்ளை, 'மதியாதார் முற்றம் மிதிக்க வேண்டாம்' என்பதற்கு இணங்க அன்று முதல் தம் இனத்தவர் உதவியையே நாடுவதை விட்டுவிட்டார். "சமூக நலமென்று பிதற்றிச் சுய நலம் பேணித் திரியும் பலரைக் கொண்டவை அரசியல் கட்சிகள்" என்று அடிக்கடி சொல்லுவார். அரசியல் அதிகாரத்தில் இருப்பவரின் அகத்தை இறுதி வரையிலும் அவர் எட்டியும் பார்ப்பதில்லை.

பல்கலைக் கழகத்தில் விடாமல் நான்காண்டு ஆராய்ச்சி செய்து எம். எஸ்ஸி. பட்டம் எடுத்தார். அவருடைய ஆராய்ச்சி முடிவுகளைக் கண்ட பரீட்சையாளர்கள், "ஏன் இவர் இந்த ஆராய்ச்சிகளை எம். எஸ்ஸி. பட்டம் பெறுவதற்காகச் சமர்ப்பித்தாரோ? மேல் பட்டமான டி. எஸ்ஸி. பட்டத்துக்குச் சமர்ப்பித்திருக்கலாமே!" என்று மெச்சி எழுதியிருந்தார்களாம். அவர் விரைவில் டி. எஸ்ஸி. பரீட்சையிலும் தேறி டாக்டர் பட்டம் பெற்றார்.

பட்டங்கள் எடுப்பதற்கு முன்னும் பின்னுமாக இருபதாண்டுகளுக்குமேல் அண்ணமலை, திருவாங்கூர், கல்கத்தா ஆகிய மூன்றின் பல்கலைக் கழகங்களிலும் விரிவுரையாளராகவும் ஆராய்ச்சி ஆசிரியராகவும் பிள்ளை வேலை பார்த்தார். மாணவர்களின் அன்பையும் மற்றைய ஆசிரியர்களின் நட்பையும் நிறையப் பெற்றார். தமக்கு வழிகாட்டியாகவும் உறுதணையாகவும் இருந்த பல ஆசிரியர்களையும், நண்பர்களையும்பற்றிக் கூறுகையில், சிறப்பாக, காலஞ்சென்ற கணிதப் பேராசிரியர் சேஷு ஐயர், சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூல் நிலையப் பாதுகாப்பாளர் ரங்கநாதன், டாக்டர் வைத்தியசாமி, டாக்டர் விஜயராகவன், டாக்டர் நரசிங்க ராவ் முதலியவர்களைக் குறிப்பிடுவார். அரசாங்கத் துறையிலே மத்தியச் சுங்கவரி இலாகாவில் இருக்கும் சட்டநாதருக்கும் பிள்ளைக்கும் இளமை தொட்டே நெருங்கிய நட்பு.

பிள்ளை ஆராய்ச்சித் துறையிலே ஒளிபெற்று உயர்வதைக் கண்ட அவரினத்தவருள் தனவந்தர் பலரும், அதிகாரிகள் பலரும் தங்கள் பெண்ணை அவருக்குக்

கொடுக்க முன் வந்தார்கள். பிள்ளையின் மனம் பணத்தையும் நாடவில்லை; உயர்ந்த இடத்து உறவையும் நாடவில்லை. தம்மையொத்த எளியவரான இந்துக் கல்லூரியின் தமிழ்ப் பண்டிதர் அருணசலம் பிள்ளையின் மகளையே மணந்தார். மனைவிபால் மட்டற்ற காதல்கொண்ட கணவர். உவவா இன்ப இல்லறம் நடத்தி இருவரும் காதலொருமித்துப் பெற்ற மக்கள் மூவர், இப்போது சுகமாக வாழ்கிறார்கள்.

கணிதத் துறையிலே பற்பல பகுதிகள் இருக்கின்றன. இவைகளில் இலக்கங்களின் தத்துவம் (தியரி அவ் நம்பர்ஸ்) பற்றிய துறையிலேயே பிள்ளையின் மனம் இளமை முதல் சென்றது. இந்தத் துறையில்தான் மேதை ராமாநுஜமும் உழைத்தார். இந்திய நுண்ணறிவுக்குத் தொன்று தொட்டே ஒருவித வசீகரம் கொடுத்து வந்த துறை என்று கணிதசரித்திர அறிஞர்கள் இதைக் கருதுகிறார்கள்.

இலக்கங்களின் தத்துவத் துறையில் பிள்ளையோடு ஆசிரியர் சௌலா என்ற வடநாட்டவரும் அரிய ஆராய்ச்சிகளைச் செய்து வந்தார். இரண்டு பேரும் கடித மூலம் பல கணித நுட்பங்களை எழுப்புவதும் விடை காண்பதுமாகப் பல ஆண்டுகளைப் போக்கினார்கள். இந்த இரண்டு பேரையும் தவிர, டாக்டர் விஜயராகவனும் இந்தத் துறையில் சிறிது உழைத்திருக்கிறார். வடநாட்டில் குப்தா என்பவரும் ஏறக்குறைய இந்தத் துறையில் பல நுட்பங்களைக் கண்டு வருகிறார். இவர்களுக்குள்ளே பிள்ளையே தலை சிறந்தவர்.

இலக்கங்களின் தத்துவத்திலே 1770-ஆம் ஆண்டில் வாரிங் என்பவர் ஒரு கணக்குப் போட்டுப் போனார். அதற்கு வேண்டிய ருசுவை அவர் விளக்கவில்லை. பின்னே அதற்கு ருசுக் காண எத்தனையோ பேர் முயன்றார்கள். பிரபல கணித ஆசிரியர்களான கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையைச் சேர்ந்த ஹார்டி, லிட்டில்வுட் போன்றவர்களெல்லாம் அதற்குத் தகுந்த ருசுக் காண முயன்றும் பயன்படவில்லை. டாக்டர் பிள்ளை தக்கதொரு ருசுக் கண்டு நூல் வடிவாக வெளியிட்டார். அவருடைய புகழ் உலகப் புகழாக உயர்ந்தது. இதைத் தவிர, வேறு சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளியிட்டுள்ளார். முன்னே 'நாமக்கல் அம்பாளின் அருள் சக்தி'யால் ராமாநுஜம் கண்ட பல கணிதப் புதிர்களுக்கு, பின்னே வந்த பிள்ளை விஞ்ஞான முறையில் எல்லாரும் ஒப்பத் தகுந்த ருசுக்கள் கண்டார்.

ஆயினும், இந்தியக் கணித சங்கம், பிள்ளையின் மேதைக்குத் தகுந்த விதம் அவரைப் போற்ற முன்வரவில்லை. புகழ் பெற்ற மேனாட்டுக் கணித அறிஞரான இ. டி. பெல் என்பவர், உலகத்தில் ஒவ்வொரு நாட்டின் கணித மேதைகளையும்பற்றி எழுதிய நூலில், இந்தியாவைப்பற்றிச் சொல்லும்போது, உலக வரிசையில் வைத்தெண்ணும்படியாக இரண்டு பேரையே குறிப்பிடுகிறார். ஒருவர், ராமாநுஜம்; மற்றவர் எஸ். எஸ். பிள்ளை. 'மென் அவ் மாத்தமாட்டிக்ஸ்' என்ற அந்த நூல் வெளியானதும் பல இந்தியக் கணித அறிஞர் பிள்ளையின் மீது பொறாமை கொண்டார்கள்.

நல்ல காலமாய், பிள்ளை விளம்பரப் பிரியராயில்லை. எவரோடும் இணக்கமாய் வாழும் பண்புடையவர். ஓரளவுக்குக் கோழை என்றே சொல்லலாம்; கல்கத்தாவில் கலகம் என்று கேள்விப்பட்டதும், தலைகால் தெரியாமல் விழுந்தடித்து ஓடி வந்தார். குடத்துள் இட்ட விளக்குப்போல் வாழ இசைந்தும், அவருக்கு உரிய இடத்தை அளிக்க மறுத்தது இந்தியக் கணித சங்கம்.

ஆனல், பிள்ளையின் புகழும் ஆராய்ச்சித் திறனும் இங்கிலாந்து சென்று, அங்கிருந்து அட்லாண்டிக் கடல் கடந்து அமெரிக்காவை எட்டின. இந்தியக் கணித சங்கம் கொடுக்காத மரியாதையை உலகக் கணித சங்கம் கொடுக்க விரும்பி, அவரை அழைத்தது. இந்தியப் பல்கலைக் கழகங்கள் கொடுக்க முடியாத 'பெரும் பதவியை, உலகத்திலேயே கணிதத் துறையில் முதன்மை பெற்று விளங்கும் பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம் கொடுக்க முன்வந்தது.

அமெரிக்காவிலிருந்து அழைப்பு வந்ததென்று பெருமை கொண்டோம். எமன் விடுத்த ரகசிய அழைப்பென்று அறியாதிருந்து விட்டோம். 'மேரிலாந்தின் நட்சத்திரம்' என்ற விமானம் எகிப்தியப் பாலைவனத்தில் எரிந்து விழுந்ததும், உண்மையில் விழுந்தது கணித வானத்தில் ஒளி விட்டுக்கொண்டிருந்த ஓர் ஒப்பற்ற நட்சத்திரமே. இலக்கம் என்ற ஒரே துறையில் உழைத்த இரண்டு பெருங் கணித மேதைகள், தாய் நாட்டுக்கே தனிப் புகழ் தேடித் தந்த இரண்டு நல் இளைஞர்கள்—ராமாநுஜம், சிவசங்கர நாராயணப் பிள்ளை இரண்டு பேரும்—தாய் நாடு துறந்து அயல் நாட்டிலே இறந்தார்கள். பாரத பூமி உண்மையில் புண்ணிய பூமிதானு?

எப்போதும், இளநகை தவழும் முகம்; எல்லாருடனும் இனிக்க உரையாடும் சீலம்; எவரிடமும் காண முடியாத உயர் குணம்; அன்பரை உபசரிக்கும் ஒழுக்கம்; சுருண்ட குஞ்சி; தயங்கித் தயங்கிப் பேசும் இனிய மொழிகள்; கள்ளரையும் வெல்லவல்ல வெள்ளை உள்ளம் - இவைகளை அறிந்தவர் எவ்விதம் மறப்பது? பிள்ளையின் புகழுடம்பு நின்றது; பூத உடம்பு போனதெங்கே?

நோய் வராத குடும்பம்

பிரிட்டிஷ் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த இளங்குமரி ஒருத்தி, "எனக்கு உடம்பு சரிப்படவில்லை. ஆஸ்பத்திரிகளைப் போய்ப் பார்வையிட இன்று நான் வரமாட்டேன்" என்று சொல்லிப் படுக்கையில் படுத்துக்கொண்டாள்.

மேரி ராணி இதைக் கேட்டதும், ராஜகுமாரியின் அறைக்குள் விடுவிடென்று நுழைந்தாள். கட்டளையிடுங் குரலில், "பிரிட்டிஷ் ராஜகுடும்பத்தினருக்கு உடம்பு சரிப்படவில்லையாவது! அவர்களுக்கு நோயே வராது. கிளம்பு" என்றுள். இப்படிப்பட்ட பயிற்சியைப் பெறுகிறார்கள் அந்த ராஜ குடும்பத்தினர். இது வீண் போகுமா?

—லாரன்ஸ் தாம்ஸன், 'ந்யூஸ் க்ராணிக்கிள்.'

இன்று காந்தமும் அதோடு சம்பந்தம் பெற்ற மின்சாரமும் பற்றி எவ்வளவோ விரிவாக அறிந்திருக்கிறார்கள்; அன்றோ—

காந்தத்தின் கதை

அருணேசர்

காந்தத்தைப்பற்றிச் சீனர்கள் கிறிஸ்து பிறக்க 1000 ஆண்டுக்கு முன்பே அறிந்திருந்தார்களென்றும், அந்தக் காலத்திலேயே அவர்கள் காந்த சக்தி நிறைந்த இரும்புப் பாளங்களைக் கண்டு பிடித்திருந்தார்களென்றும் தெரிகிறது. இதிலிருந்துதான் அவர்கள் கப்பல் மாலுமிகளுக்குத் திசை காட்டும் கருவி (மாரினேர்ஸ் காம்பஸ்) செய்யத் தெரிந்துகொண்டார்கள். கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் இந்து மகா சமுத்திரத்தில் ஓடிய சீனக் கப்பல்களில் தெற்கு நோக்கியபடி நீண்டிருந்த காந்த ஊசிகளைத் திசை காட்ட உபயோகித்ததாகச் சொல்லுகிறார்கள். டாக்டர் லாமர் நாஜீம் என்பவர் ஒரு சமயம் இயற்கைச் சரித்திரக் கல்லூரி ஒன்றில் செய்த பிரசங்கத்தில், சீனரின் திசை காட்டிக் கருவியைப்பற்றி எடுத்துக் காட்டியிருக்கிறார். சீனக்காரர்கள் அந்தக் காலத்தில் ஒருவிதக் காந்தப் பெட்டி (மாக்னட் காரியேஜ்) வைத்திருந்தார்களென்றும், அதில் தெற்குத் திசையையே தொடர்ச்சியாய்க் காட்டிக்கொண் டிருக்கக் கூடிய அசையும் கைகாட்டி ஊசி இருந்ததென்றும் ஹம்போல்ட் என்ற ஜெர்மன் யாத்திரிகர் ஒருவர் கூறியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் காந்தத்தை முதலில் மனிதர் அறிய வந்த வரலாறுபற்றி நாடோடியான சில கதைகள் உண்டு. ஓர் இடையன் தன் இரும்புப் பூண் தடியை ஒரு பாறையின்மேல் ஊன்றி நின்றபோது, அந்தத் தடியைப் பாறை இழுப்பது கண்டு பயந்தோடிச் சிலரிடம் அவன் தெரிவித்தானாம். அவர்கள் அதை ஆராய்ந்து பார்த்ததில், அது கல்லிலுள்ள இயற்கையான ஆகர்ஷண சக்தி என்பதாக அறிந்தார்களாம்.

இன்னொரு கதையும் உண்டு. கடலில் சென்றுகொண்டிருந்த ஒரு கப்பலைப் பெரும் பாறை ஒன்றின் அருகில் புயல் தள்ளிக்கொண்டு போயிற்று. பாறையருகில் கப்பல் நெருங்கியவுடனே, கப்பலின் பலகைகளை இணைத்திருந்த இரும்பு ஆணிகளெல்லாம் தாமே பிடுங்கிக்கொண்டு பாய ஆரம்பித்தன. இப்படிச் சிறிது நேரத்தில் எல்லா ஆணிகளும் பிடுங்கிக்கொண்டு ஓடி விடவே, கப்பலின் பலகைகளெல்லாம் கழன்று சிதறிக் கொட்டிவிட்டன; அதில் இருந்தவரெல்லாம் கடலில் விழுந்துவிட்டார்கள். அவர்களில் சிலர் நீந்தி அருகில் இருந்த கற்பாறையில் தொத்தி ஏறித் தப்பினார்கள். அந்தப் பாறையின்மீது

காப்பிரைட்: விஞ்ஞானி (தமிழ்: ஆகஸ்ட் '54), வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

தங்கள் கப்பலின் ஆணிகளெல்லாம் ஒட்டிப் பிடித்துக்கொண்டிருந்ததை அப்போது அவர்கள் கண்டார்கள். அந்த ஆணிகளில் ஒன்றைக் கையில் எடுக்க ஒருவன் முயன்றபோது ஆணி எளிதில் கைக்கு வராமல் இழுத்துக்கொண்டபடியே ஒட்டி நின்றது. பலமாய் இழுத்துப் பார்த்ததில் ஆணி கைக்கு வந்தாலும் பாறையின் பக்கமே இழுப்பது தெரிந்தது. அதிலிருந்து, அந்தப் பாறைக்கு ஏதோ ஆகர்ஷண சக்தி இருக்கிறதென்று கண்டு, தப்பித்துத் தங்கள் ஊருக்குத் திரும்பிச் சென்றபின் மற்றவருக்கும் இந்த அதிசயச் செய்தியை அறிவித்தார்கள்.

இந்தியாவில் வெகு காலத்துக்கு முன்பே காந்தத்தைப்பற்றி அறிந்திருந்தார்களென்றும் அதை உபயோகித்தார்களென்றும் தெரிகிறது. மௌரிய அரசனான சந்திரகுப்தனின் சரித்திரத்தில், இதைப் பற்றிச் சுவையான வரலாறு ஒன்று உண்டு. சிறையிலிருந்த இளவரசன் சந்திரகுப்தனை ஒரு சோதனை செய்ய நவநந்தர்கள் வெளியே அழைத்துச் சென்றார்கள். வேறு நாட்டு அரசன் ஒருவன், இரும்பும் மெழுகும் கொண்டு செய்த சிங்கம் ஒன்றைக் கூட்டில் அடைத்து ஊரூராக அனுப்பினான். காவலாளன் சொன்னபடி அந்தச் சிங்கம் ஆடியது. ஆனால் மற்றவர்களால் இப்படி ஆட்டிவைக்க முடியவில்லை. காவலாளன் ஒரு காந்தக் கம்பியை உபயோகித்துச் சிங்கத்தை நினைத்த இடமெல்லாம் திருப்புகிறானென்று சந்திரகுப்தன் கண்டுகொண்டானாம். தானும் அப்படியே செய்து, சிங்கத்தை ஆடச்செய்தானாம்.

இப்படிப் பலவிதக் கதைகள் உண்டு என்றாலும், மேல் நாட்டார்கள் காந்தத்தைப்பற்றி அறிய வந்தது கி. பி. 4-ஆம் நூற்றாண்டில்தான். முதல் முதல் 'லிடியா' நகரத்தை அடுத்த 'மக்னீஷியா' என்னும் ஊரில் கிரேக்கர்கள் காந்தக் கல்லைக் கண்டு பிடித்தார்கள். அங்கே சிதறிக் கிடந்த கற்களுக்கு இரும்புத் துண்டைத் தம்வசம் இழுக்கும் சக்தி இருப்பது அவர்களுக்குத் தெரிந்தது. இந்தச் செய்தி நாளடைவில் எங்கும் பரவியது. அதிலிருந்து காந்தக் கற்களுக்கு மாக்னெட் என்று அந்த ஊரின் பெயரே ஏற்பட்டுவிட்டது.

பின் காலத்தில் ஸ்வீடன், ஆர்க்கேஞ்சல், ஸ்பெயின் முதலிய இடங்களிலும் காந்தம் இயற்கையாகவே இருப்பதைக் கண்டார்கள்.

1599-ஆம் ஆண்டுக்குப் பின்புதான் காந்தத்தைப்பற்றிய நூதன ஆராய்ச்சி தொடங்கியது. அப்போது முதலாம் எலிஸபெத் மகாராணி ஆண்ட காலம். 1600-ஆம் ஆண்டில் இங்கிலாந்தைச் சேர்ந்த கொல்செஸ்டரில் வசித்த டாக்டர் வில்லியம் கில்பர்ட் என்பவர், 'காந்தமும் மின்சாரமும்' என்பதைப்பற்றி ஆராய்ந்து ஒரு நூல் எழுதி வெளியிட்டார். இவருடைய கருத்துக்களே பின்னால் பல பேர்களின் ஆராய்ச்சி அறிவைத் தூண்டிப் பலவித நூதனங்களை ஆராய்ந்து வெளியிட உதவின.

விசித்திரமான வரலாறு படைத்தது
இந்தக் கவர்னர்-ஜெனரலின் இருப்பிடம்;

கொழும்பு ராணி மாளிகை

கெனத் ஜே. சோமநாதர்

இலங்கையின் கவர்னர்-ஜெனரலாகப் பதவி பெற்ற முதல் இலங்கையர் ஸர் ஒலிவர் குணத்திலக்க. ஜூலை மாதம் 17-ஆம் தேதி தொடங்கி ராணி மாளிகையில் அவர் வாசம் செய்கிருர்.

ராணி மாளிகை இருக்கிற இடம், டச்சுக்காரர் காலத்தில் கட்டாந்தரையாகக் கிடந்தது. ஆனுல், 1785-இல் டச்சு எஞ்சினீரான கப்ரின் போனந்தர் தயாரித்த ஒரு படத்தில் இங்கே ஒரு கட்டிடம் தென்படுகிறது. இது இலங்கையின் கடைசி டச்சுக் கவர்னர் வான் அன்ஜல்பீக் என்பவருக்குச் சொந்தமானது. கொழும்பு 1796-இல் ஆங்கிலேயர் வசப்பட்ட பின்னும் 1799-இல் தாம் இறக்கும்வரை வான் அன்ஜல்பீக் இங்கேயே தங்கியிருந்தார்.

ஆங்கிலேயர் காலத்தில், கவர்னராயிருந்த ஸர் ராபர்ட் வில்மட் ஹோர்ட்டன் என்பவர், 1831-இல் குடியேற்ற நாட்டுக் காரியதரிசிக்கு எழுதிய கடிதம் ஒன்றில், "இப்போது கல்கிசை என்ற இடத்தில் இருக்கும் கவர்னர் மாளிகை, கொழும்பிலிருந்து ஏழு



மூலம்: ஸ்ரீலங்கா (தமிழ்: ஆகஸ்ட் '54), கொழும்பு, இலங்கை.

மைலுக்கு மேற்பட்ட தூரத்தில் இருப்பதால், கொழும்பில் கவர்னருக்கு உகந்த வேறோர் இடம் அவசியம்" என்று வற்புறுத்தினர். ஹோட்டன் ராஜ மாளிகையைத் திருத்தி மனித வாசத்துக்கு உகந்ததாகச் செய்யும்படி ஆலோசனை சொன்னர். 700 பவுன் செலவிட்டு அப்படியே அதைச் சீர்திருத்தினர்கள்.

கவர்னர் ஸ்டேவர்ட் மெக்கன்சி காலத்தில் மேலும் பல திருத்தங்கள் செய்தார்கள். 1852 - இல் 7,000 பவுன் செலவில் உதவி சிவில் எஞ்சினீர் டுரெண்ட் கொர்சோ என்பவர் முழுக் கட்டிடத்தையும் திருத்திக் கட்டினர்.

இதற்கு 'ராணி மாளிகை' என்று பெயர் வந்த கதை சுவராஸ்யமானது. கொழும்பு நகரம் ஆங்கிலேயர் கைக்கு வந்ததும், இருபத்தொரு சிவில் அதிகாரிகள் இங்கே வந்தார்கள். ஆறும் லெஸ்லி பிரபுவின் ஐந்தாம் குமாரர் கௌரவ ஜார்ஜ் மெல்வில் லெஸ்லி என்பவரும் இவர்களில் ஒருவர். இவர் கறுவாச்செய்கை நிலத்தின் மேற்பார்வை அதிகாரியாக இருந்த ஜோஸஃப் ஜோயின்வில் அவர்களின் பதவியை ஏற்ருர். பிறகு 1802-இல் இலங்கையின் சம்பளப் பொறுப்பு மேலதிகாரியானர்.

இவர் அந்த வருஷம் நவம்பர் 27-ஆம் தேதி, டச்சுக் கவர்னர் வான் டி கிருப் என்பவரின் புதல்வியும், கடைசி டச்சுக் கவர்னர் வான் அன்ஜல்பீக் என்பவரின் மருமகளுமான லெக்கோமினு கீர்டி ரூடா வான் டி கிருப் என்பவளைக் கொழும்பில் மணம் புரிந்தார்.

"மிஸஸ் லெஸ்லி தன் 15-ஆம் வயதிலே குடும்பப் பொறுப்பேற்று 16-ஆம் வயதில் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள்" என்று ஜே. பீ. லூயிஸ் கூறுகிருர். மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் கலியாண விருந்தொன்றை மணமகளின் மாமனர் கிறிஸ்டியன் வான் அன்ஜல்பீக், கொள்ளுப்பிட்டியில் தம் வீட்டில் நடத்தினர். இந்த விருந்தில் கவர்னர் நார்த் என்பவரும் கொழும்பிலுள்ள பல பிரமுகர்களும் பிரசன்னமா யிருந்தார்கள்.

அடுத்த வருஷம் லெஸ்லியின் பொறுப்பிலிருந்த கணக்கு விவரங்களில் 10,000 பவுன் துண்டு விழுந்ததைக் கண்டு பிடித்தார்கள். இந்தத் தொகை குறைந்ததற்குக் காரணம் லெஸ்லியின் திருவிளையாடலாக இருக்க முடியாது. என்றாலும், அவரை 1803-ஆம் ஆடு ஏப்ரல் மாதம் மேல் பதவியிலிருந்து கீழ்ப் பதவிக்கு மாற்றிவிட்டார்கள். இன்னும் பல தொல்லைகள் ஏற்படுவதற்கு முன்னே லெஸ்லியின் மாமனர் இந்தத் தொகைக்குப் பதில் தமக்குச் சொந்தமான ஒரு பிரதேசத்தை அரசாங்கத்திடம் அளிக்க முன் வந்தார். அந்த இடத்தில்தான் இப்போது ராணி மாளிகை இருக்கிறது.

1803-ஆம் ஆடு அக்டோபர் மாதம் லெஸ்லி, கவர்னர் நார்த் என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது இது: "என் மாமனர் வான் அன்ஜல்பீக், நான் இருக்கும் இக்கட்டான நிலையிலிருந்து என்னை மீட்கும் நோக்கத்துடன், காலஞ் சென்ற கவர்னர் வான் அன்ஜல்பீக் அவர்களுக்குச் சொந்தமான காணியை (இதன்

பெறுமதி 35,000 ரிக்ஸ் டாலர் என்று தாங்களே மதிப்பிட்டிருக்கிறீர்கள்) அளிக்கப் பெருமனத்துடன் முன் வந்திருக்கிறார்.''

லெஸ்லியைக் கவர்னர் நார்த் கண்ணியமாக நடத்த விரும்பினார். ''அரசாங்கம் இந்த வழக்கைக் கருதி இந்த வீட்டைப் பெற விரும்புகிறதே யொழிய, வீட்டைப் பெறும் நோக்கத்துடன் அல்ல'' என்று வரைந்தார். லெஸ்லிக்கு நார்த் எழுதிய இன்னொரு கடிதத்தில், ''உம் கணக்கு விவரங்கள் குறித்து உமக்கும் என் அரசாங்கத்துக்கும் இடையில் நடந்த எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களையும் பிரிட்டிஷ் மந்திரிகளுக்கு நான் தெரிவிக்காமல் இருக்க முடியாது. இதை அன்ஜல்பீக்குக்கு முன்பே அறிவித்திருக்கிறேன். ஆனால் எங்களுக்கிடையில் நடைபெறும் கடிதப் போக்குவரத்து மிகவும் ரகசியமாக இருக்கும். இந்த விஷயத்தில், கொழும்புக் கோட்டையில் இருக்கும் வான் அன்ஜல்பீக்கின் இல்லத்தைப் பெற ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் எப்படிப்பட்டவை என்பதை விவரமாகக் காட்ட நினைத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

1804-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17-ஆம் தேதி ராணி மாளிகைப் பிரதேசத்தைக் கட்டிடங்களோடு அரசாங்கத்தின் பெயருக்கு உறுதிப் பத்திரம் எழுதி அளித்தார்கள். அதன் பின்பு லெஸ்லி தம் மனைவி மக்களுடன் இலங்கையை விட்டுச் சென்றார். 1805-இல் மிஞ்சிய 65,000 ரிக்ஸ் டாலர்களை லெஸ்லி அனுப்பி வைத்தார். இந்த வருஷத்திலேயே இலங்கை அரசாங்கத்தின் மூலமாக ஆட்டுப்பட்டித் தெருவிலுள்ள தேவாலயத்தில் வான் டிகிரூப்பின் மனைவி, வான் அன்ஜல்பீக்கின் மனைவி இருவரின் ஞாபகார்த்தமாகவும் குறிப்புக்கள் பதிக்க லெஸ்லி அனுமதி கோரினார். அனுமதி கிடைத்ததும் ஞாபகச் சின்னங்களைப் பதித்தார்கள்.

லெஸ்லி 1812-இல் இங்கிலாந்தில் காலமானார். அவருடைய புதல்வி 1892-இல் 89-ஆம் வயதில் கன்னியாகவே இருந்து உயிர் துறந்தாள்.

ஸர் சாலமன் டயஸ் பண்டார நாயக்க என்பவர் எழுதியுள்ள 'கடந்த கால ஞாபகங்கள்' என்ற நூலில், 1919-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ராணி மாளிகையில் நடைபெற்ற ஒரு கலியாண வைபவத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்: ''முன்னாள் இலங்கைக் கவர்னர் ஸர் வில்லியம் மானிங், இலங்கையில் மணம் செய்து கொண்ட முதல் பிரிட்டிஷ் கவர்னர். ராணி மாளிகையில் மணமாவது ஒரு விசேஷமாகும்.''

மணமகள் லண்டன் நகரைச் சேர்ந்த செல்வி ஓல்கா செப்டன் ஜோன்ஸ் என்பவள். பல மக்கள் பெருந் திரளாக வந்து இந்த வைபவத்தில் கலந்துகொண்டார்கள். மணமகளுக்கு ஏராளமான பரிசுகள் கிடைத்தன.

''புதிய சீமாட்டி எல்லாரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தினாள். கவர்னரின் நல்லாட்சிக்கு அந்த அம்மாள் பெரிதும் உதவியிருக்கிறாள்'' என்று ஸர் ஸாலமன் கூறுகிறார். லேடி மானிங் அவர்களின் தாய் செப்டன் ஜோன்ஸ், மணமகளுடன் இலங்கை வந்திருந்து மணமான பின் இங்கிலாந்து திரும்பினாள்.

விநோதமான சட்டங்கள்

★

தேசங்கள்தோறும் பாஷைகள் மட்டுமா? மற்றும் எத்தனேயோ போலச் சட்டங்கள்கூடத்தான் வேருயிருக்கின்றன. இந்த விசித்திரமான விவரங்களுக்கு ஆதாரம் 'பீ மகஸீ'னில் உள்ள ஒரு கட்டுரை.



நாம் நம் நாட்டில் இருந்து கொண்டு ஐரோப்பியர்களேயும் அவர்கள் வாழ்க்கை முறையையும் பார்க்கும்போது, நமக்கு அவர்கள் எல்லாரும் ஒரே விதமாக வாழ்வதாகத்தான் தோன்றும். ஆனுல் ஐரோப்பாக் கண்டத்தில் ஆறு ஏழு நாடுகளேச் சுற்றிப் பார்க்கும்போது ஒன்றுக்கொன்று பல விதங்களிலும் மாறுபட்டிருப்பது தெரியும். ஒரு வார காலத்தில் நம் வயிறு பலவகை உணவுகளுக்கு ஈடுகொடுத்தாக வேண்டும்; பல விதமான சீதோஷ்ண நிலேகளே நம் உடல் தாங்கிச் சமாளித்தாக வேண்டும். இன்னெரு சங்கடம், நாட்டுக்கு நாடு வேறுபடும் விநோதமான சட்ட விதிதான்; மேலாகப் பார்க்கும்போது இது தெரியாது. ஆழ்ந்து கவனித்தால்தான் தெரியும்.

போர்ச்சுகல் நாட்டுக்குப் போய்ப் பழக்கம் உள்ளவர்கள் அதன் தலேநகரான லிஸ்பன் நகரில் உலாவும்போது பத்துப் பேருக்குத் தெரியும்படியோ, போலீஸ்காரன் கண்ணில் படும்படியோ சிகரெட் பற்ற வைக்க மாட்டார்கள். இதற்கென்ற தனி 'லேஸென்ஸ்' வாங்கியாக வேண்டும்; இல்லாவிட்டால் சட்டப்படி இது குற்றமாகும்.

ரோம் நகரத்தில் போக்கு வரத்துப் பாதை நடுவில் 'டேஞ்ஜர் சிக்னல்' விளக்குக் காட்டும்போது யாராவது குறுக்காக நடந்து சென்ருல், உடனே கீச்சென்று பிகில் சத்தம் கேட்கும். அந்த இடத்திலேயே அவரிடமிருந்து 'டிராஃபிக்' கான்ஸ்டபிள் அபராதத் தொகையைக் கறந்துவிடுவார்! 'மோட்டார் ஓட்டியைப் போல் பாட்டைசாரியும் விதிகளுக்கு அடங்கி ஒழுங்காக நடந்தாக வேண்டும்' என்றுதான் இத்தாலிய அதிகாரிகள் இப்படிச் செய்கிருர்களோ, ஐரோப்பாவில் கார் ஓட்டும் லட்சணம் அவர்களுக்குத் தெரிந்திருப்பதனுல் ஆபத்து நேராமல் அவரைப் பாதுகாக்கத்தான் இப்படிச் செய்கிருர்களோ, இது தான் புரியவில்லே.

டென்மார்க் நாட்டின் தலேநகர் கோபன்ஹேகன். அங்கே வெளியூரிலிருந்து வந்த ஓர் ஆசாமி ஹோட்டலில் தங்குகிருர். 'அறை

ஜன்னல் கதவையெல்லாம் சாத்தியிருக்கிறார்களே ; புழுக்கமாயிருக்கிறதே' என்று தோன்றுகிறது அவருக்கு. ஜன்னல்கதவு ஒன்றைத் திறந்துவிடுகிறார். அப்புறம் கொஞ்ச நேரத்தில் பார்க்க வேண்டுமே; ஹோட்டலில் ஒரே அமர்க்களம்! விஷயம் இதுதான்: இங்கெல்லாம் குளிர்காலம் மிகவும் கடுமையாக இருக்கும். அநேகம் கட்டிடங்களில் சீதோஷ்ண நிலைக்கு ஈடுகொடுத்துச் சரிக்கட்டிக்கொண்டு போக நடு மையத்திலிருந்து உஷ்ணம் பரவக்கூடியபடி சில அமைப்புக்களை அங்கங்கே பொருத்தியிருக்கிறார்கள். புதிதாக வந்த ஆசாமி முன்பின் யோசியாமல் ஜன்னல் கதவைத் திறந்துவிட்டதால், அவருடைய அறையில் உஷ்ணம் குறைந்தாலும் மற்ற அறைகளில் உஷ்ணம் அதிகமாகி அங்கே இருந்தவர்கள் அது தாங்காமல் அலறும்படி ஆகிவிட்டது.

ஒழுக்கம் குலையாமல் இருக்க வேண்டும் என்பதற்காகச் சில நாடுகளில் விநோதமான சட்ட விதிகள் அமலில் இருக்கின்றன.

துருக்கியிலுள்ள இஸ்தான்புல் நகரத்தில் டாக்ஸியில் ஒருவருக்குமேல் பிரயாணி இருந்தால் உள்ளே விளக்குப் போடவேண்டும் என்று ஒரு சட்டம் உண்டு. அப்படிப் போடாவிட்டால் உடனே கோர்ட்டுக்கு இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள் அதிகாரிகள்.

ரோம் நகரத்தில் காதலர்கள் வெளியே உலாவும்போது முத்தமிட்டுக்கொண்டால், உடனே போலீஸ் அதிகாரி அவர்களைப் பிடித்து அபராதம் வசூலித்து விடுவார். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால், காதலன் முத்தமிடும்போது அவளும் முத்தமிட்டால் இரண்டு மடங்காக அபராதத்தொகையைக் கறந்துவிடுவார்கள். இந்த மாதிரி கண்டுபிடித்துக் கிடைக்கும் அபராதத்தொகையில் இத்தாலியப் போலீஸாருக்கு ஒரு பகுதியைக் கொடுப்பதால், இந்த மாதிரிக் காரியம் எங்கேயாவது நடக்கிறதா என்று கண்கொட்டாமல் எந்த நேரமும் இவர்கள் கவனிப்பது வழக்கம்.

ஸ்பெயினிலும் போர்ச்சுகலிலும் இந்த விஷயத்தில் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார்கள். எஸ்டோரில் என்ற இடத்தில் ஆங்கிலேயர் ஒருவர் குளத்தில் நீந்திக்கொண்டிருந்தார். அப்போது அங்கே ஒரு கான்ஸ்டபிள் பிஸ்தலும் கையுமாக வந்து அவரைப் பிடித்துத் தரதரவென்று போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றான். ஆனாலும் அவர் தலை நிமிர்ந்துதான் நடந்து போனார். விஷயம் இதுதான்: பொது இடங்களில் ஆண்கள் மார்பு வெளியில் தெரியும்படி நீந்தக் கூடாது என்று அங்கே ஒரு சட்ட விதி உண்டு.

பிரான்ஸில் உல்லாசமாகச் சுற்றலாமென்றால் அதற்கு அங்கே அமலில் உள்ள பாட்டை விதிகள் குந்தகமாக இருக்கின்றன. எந்த வண்டி வலது பக்கமாக வந்தாலும் அதற்கு உடனே வழி விட்டாக வேண்டும் என்பது

இந்த விநோதமான விதிகளில் ஒன்று.

இவைகளைப்பற்றிக் குறிப்பிடும் போது கில்மன் என்ற ஆங்கிலேயர் தம் அநுபவத்தைத் தமாஷாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்: "சென்ற மகா யுத்தத்தின்போது ஒரு நாள் 15 டன் கனமுள்ள மோட்டார் டிரக் ஒன்றைப் பாரிஸ் நகரில் அகன்ற ஒரு சாலை வழியே ஓட்டிக்கொண்டே போனேன். பனி கீழே உறைந்து வழி படுமோசமாக இருந்தது. அப்போது சற்றுத் தொலைவில் குப்பை வண்டி ஒன்று வேறு ஒரு பக்கத் தெருவிலிருந்து எங்களுக்கு எதிரே வந்தது; குப்பை வண்டிக் காரன் ஒதுக்கி ஓட்டுவான் என்று நான் நேராகப் போய்க்கொண் டிருந்தேன். ஆனால் அதுவோ நேராக எங்கள் டிரக்கின் முன் பாகத்தில் மோதிக்கொள்கிற மாதிரி வந்துவிட்டது! உடனே பிரேக் போட்டேன். அதனால் எங்கள் டிரக் அப்படியே உளையில் அழுந்திச் சக்கரம் அசையாமல் நின்றுவிட்டது. அப்புறம் நல்ல வேளையாக எப்படியோ பின்னுக்கு அடித்து ஒதுக்கினேன். மயிரிழை தப்பியது. குப்பை வண்டியின்மேல் உட்கார்ந்திருந்த வண்டிக்காரன் புருவத்தை நெரித்து எங்களைக் கொஞ்ச நேரம் ஏற இறங்கப் பார்த்தான். அப்புறம் ஒன்றுமே நேராததுபோல் தன் கையில் வைத்திருந்த 'ஸாண்டுவிச்'சைப் பரக்கப் பரக்கப் பிய்த்துச் சாப் பிட்டுக்கொண்டே போய் விட்டான்."

இத்தாலிய நண்பர் ஒருவரிடம் இவர் இப்படி ஐரோப்பாவில் விநோதமான சட்டங்கள் இருப் பதைப்பற்றிப் பிரஸ்தாபித்தா ராம்; அந்த நண்பர், "உங்கள் சட்டப் புஸ்தகத்தில் இப்படி ஒன்றும் விநோதமாக இல்லையோ?" என்று கேட்டார். இவர் சற்று நேரம் யோசித்து விட்டு, "ஆமாம். இருக்கத்தான் இருக்கிறது. ராத்திரி வேளைகளில் ஜனங்கள் நடமாடும் ரஸ்தாவில் பாயை உதறக் கூடாது என்றும் இன்னும் இதைப்போலவும் சில சட்டம் உண்டு" என்றார்.

அதற்கு அந்த இத்தாலிய நண்பர், "ஆமாம்; ஆமாம். இது ரொம்ப விநோதமாகத்தான் இருக்கிறது. ஆனால் ஒன்று: இங்கிலீஷ்காரன்தான் அந்த மாதிரி உதறுவான்; அது நிச்சயம்" என்றாராம்.

இரண்டே வழிகள்

நூறு வயதுக் கிழவர் ஒருவரை, "எப்போதும் நீங்கள் எப்படிச் சந்தோஷமாயிருக்கிறீர்கள்?" என்று யாரோ கேட்டார்கள்.

"ஒவ்வொரு நாளும் போது விடியும்பொழுது, எனக்கு இரண்டே வழிகள் தோன்றுகின்றன; ஒன்று, சந்தோஷமா யிருப்பது; மற்றது, சந்தோஷமில்லாமலிருப்பது. நான் எப்போதும் முதல் வழியையே தேர்ந்தெடுத்துக்கொள் கிறேன்" என்றார் கிழவர்.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

அதிகாரிகள் எவ்வளவுதான் முயற்சி எடுத்தும்
இவர்களும் ஓயாமலே நடமாடுகிறார்கள்!

ரெயில் வண்டியில் தொல்லை

★

மத்திய ரெயில்வே பம்பாய்ப் பகுதியில் பிளாட்பாரத்திலும் ரெயிலிலும் பிச்சை எடுப்பவர், பழம் முதலிய சாமான்களை விற்கும் கூடைக்காரர் இவர்களின் உபத்திரவம் அதிகம். இவர்களை அவ்வப்போது கவனித்து வெளியேற்றுவதற்கென்றே டிராவெலிங் டிக்கட் பரிசோதகர் ஒருவரும், 20 செக்கிங் உத்தியோகஸ்தர்களும் இரண்டு உதவி டிராவெலிங் பரிசோதகர்களும், ஒரு டிக்கட் கலெக்டரும் இருக்கிறார்கள்.

பம்பாய் நகரப் பகுதியில் ஹார்பர் பிராஞ்சு லைன் உட்பட எல்லா இடத்திலும் பகல் 12 மணியிலிருந்து 22-ஆம் மணிவரை-அதுதான்: இரவு பத்து மணிவரையில்-இவர்கள் கண்காணித்து வர வேண்டும். பகல் 12 மணிவரையில் தொல்லை இல்லை. ஏனென்றால், பிரயாணிகள் எல்லாருமே காலையில் புறப்படும்போது நன்றாகச் சாப்பிட்டுவிட்டு வந்திருப்பார்கள். அவர்களுக்குப் பசி எடுக்கும்போதுதான் தொல்லை ஆரம்பிக்கிறது. அப்போதுதான் பழம், உணவு முதலிய பொருள்களை விற்கும் கூடைக்காரர்களும், பிச்சைக்காரர்களும், டிக்கட் இல்லாமல் உள்ளே நுழைபவர்களும், ரெயில் வண்டியின்

மூலம்: ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன் (ஆங்கிலம்: ஆகஸ்ட் '54), பம்பாய்.

புட்போர்டில் பிரயாணம் செய்பவர்களும் ஏராளமாக வருகிறார்கள். விக்டோரியா டெர்மினஸ், கல்யாண் இந்த இரண்டு இடங்களிலும் ரெயில்வே மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகள் உண்டு. பிடிபட்டவர்களை ரெயில்வே சிப்பந்திகள் இங்கே கொண்டு வந்து நிறுத்துவார்கள். ரெயில்வேயை ஏமாற்றுவதே வழக்கமாக இருக்கும் பேர்வழிகள் பிளாட்பாரத்திலும் ரெயில் வண்டியிலும் ரெயில்வே யூனிபாரம் உடுத்திருப்பவர்களைத் தூரத்தில் பார்க்கும்போதே நழுவி விடுவார்கள்; ஆகவே, இவர்களைக் கண்காணிக்கும் ரெயில்வே சிப்பந்திகள் சில சமயம், சாதாரணப் பிரயாணிகள்போல் உடுத்துக் கொண்டு அங்கும் இங்கும் உலாவுவது வழக்கம். பிச்சைக்காரர்கள் எப்போதுமே நேர் வழியாக வெளியிலோ உள்ளேயோ போக மாட்டார்கள். ஆகவே, அங்கே உள்ள டிக்கட் கலெக்டர்கள் அவர்களைப் பிடிக்க முடிகிறதில்லை. ரெயில்வேயின் சுவரேறிக் குதித்தோ, கிராதியை ஓரிடத்தில் பெயர்த்து வழிசெய்துகொண்டோ, ரெயில்பாதை வழியாகவோ ஸ்டேஷனிலும் அப்படியே ரெயில் வண்டியிலும் புகுந்துவிடுவார்கள். அங்கே கும்பலில் கந்தலும் கிழிசலுமாக உடுத்துக்கொண்டு பிச்சை எடுத்துக்கொண் டிருப்பார்கள். ரெயில்வே யூனிபாரத்தில் டிராவெலிங் டிக்கட் பரிசோதகரையோ தங்களைக் கண்காணிக்கும் ரெயில்வே சிப்பந்தியையோ பார்த்ததும் கும்பலில் தலை தெரியாதபடி உட்கார்ந்துவிடுவார்கள். ஸ்டேஷனில் வண்டி நிற்கும்போது ஒரு பெட்டியிலிருந்து இன்னொரு பெட்டிக்குத் தாவி டிக்கட் பரிசோதகரை ஏமாற்றிவிடுவார்கள். நகரப் பகுதிகளில் ரெயில்வே எல்லையில் இப்படித் தப்பித்துக் கொள்வது சுலபந்தான். ஆனால் சாதாரண உடையில் உலாவும் ரெயில்வே சிப்பந்திகள் இந்த விஷயத்தில் அநுபவப்பட்டிருப்பதால் ‘டக்’கென்று கூர்மையாக இவர்களைக் கவனித்துப் பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

ஆனால் பழம் முதலியவற்றை விற்பவர்களைப் பிடிப்பதுதான் மிகவும் சிரமம். இவர்கள் ‘சீசன் டிக்கட்’ வாங்கிக்கொண்டு ஒரு நாளைக்குப் பல தடவை ரெயிலில் போய் வருவார்கள். ரெயில்வே யூனிபாரம் போட்டவர்களைத் தூரத்தில் பார்த்ததுமே இவர்கள் தங்கள் சாமான்களைத் துணியால் மறைத்து மூடிவிட்டு மற்றப் பிரயாணிகளைப்போல் உட்கார்ந்து விடுவார்கள். டிக்கட் எங்கே என்று கேட்டால் உடனே அவர்கள் தங்கள் ‘பாஸை’க் காட்டத் தயாராக இருக்கிறார்கள். “பொரி கடலை, அவல், சாத்துக்குடிப் பழம் எல்லாம் ஏன் வைத்திருக்கிறாய்?” என்று கேட்டால், “நாங்கள் கடைக்காரர்; வெளியூரில் கொண்டுபோய் விற்கிறோம். ‘சீசன் டிக்கட்’ வைத்திருக்கிறவர்களுக்குக் கொஞ்சம் சாமானும் எடுத்துக்கொண்டுபோக அவ்வளவு உரிமை கூடவா இல்லை? சரியானபடி டிக்கட்டும் சாமானும் எடுத்து வருகிறவர்களுக்கு இல்லாமே பின்னே யாருக்கு, ஐயா, இந்த ரெயில் வண்டி விடறாங்க?” என்றுதான் பதில் சொல்வார்கள். டிக்கட் இராமல் பிரயாணம் செய்பவர்களாயிருந்தால் அகப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான். ஆனால் பழம் முதலியவற்றை விற்பவன்

ஒன்றும் செய்யாமல் மற்றப் பிரயாணிகளைப்போல் உட்கார்ந்திருக்கும்போது அவனைப் பிடிப்பது எப்படி? அது போதாதென்று நாலுபேர் அவனுக்குப் பரிந்து கொண்டு, "அந்த ஆள் எங்கே ஐயா, விற்ருன்? நீ பார்த்தாயா?" என்று எதிர்த்துக் கேட்கப் புறப்பட்டுவிடுவார்கள்! ஆனால் ரெயில்வே சிப்பந்திகள் சாதாரணமாக உடை உடுத்துக்கொண்டு கண்காணிக்கும்போது இப்படி விற்பவர்களையும் பிச்சைக்காரர்களையும் கையும் பிடியுமாகப் பிடித்துவிடலாம். அப்புறம் டிக்கட்டைக்காட்டினலும் சரி, அவர்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. பிச்சைக்காரர், கூடைக்காரர் இவர்களின் உபத்திரவம் தீர இப்படி மாறுவேஷத்தில் ரெயில்வே சிப்பந்திகள் வந்து இவர்களைப் பிடிப்பதுதான் சரியான வழி என்று அநுபவ மூலம் தெரிகிறது.

மூன்று பிரத்தியேக டிக்கட் இன்ஸ்பெக்டர்களின் மேற்பார்வையில் நன்ருக அநுபவப்பட்ட சிப்பந்திகள் மிகவும் திறமையாக இங்கே கண்காணித்து வருகிருர்கள். இந்திய ரெயில்வே சட்டத்தின் 47/2, 122, 118 பிரிவுகளின்படி அத்துமீறி உள்ளே நுழைவது, பிச்சை எடுப்பது, பண்டம் விற்பது - இப்படிப் பல குற்றங்களுக்காக அநேகம் பேரைப் பிடித்துத் தண்டித்திருக்கிருர்கள்.

ஜூன் 1954-இல் இப்படிக் கண்காணித்ததில் 514 கூடைக்காரர்களைப் பிடித்தார்கள். இவர்களில் 230 பேர் வயது வந்த பெரிய ஆட்கள். இவர்களை இந்திய ரெயில்வே சட்டம் 47/2 பிரிவின்படி தண்டித்தார்கள். 'ரூ. 5 - இலிருந்து ரூ. 15 வரை அபராதம்; அதைக் கட்டத் தவறினல் தலைக்கு 4 நாள் முதல் 10 நாள் வரையில் சிறைத் தண்டனை' என்று விதித்தார்கள். டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்த பல சிறுவர்களை 'ரிமாண்டி'லே வைக்கப் போதிய வசதி இராததால் அவர்களிடமிருந்து இருமடங்காகக் கட்டணம் வசூலித்து விட்டுவிட்டார்கள். மற்றச் சிறுவர்களை 'ரிமாண்டி'ல் வைத்து, இளம் பிள்ளைகளை விசாரிக்கும் ஜுவனைல் மாஜிஸ்டிரேட்டிடம் அனுப்பிவிட்டார்கள்.

இந்த முயற்சி ஒன்று மட்டுமே போதாது; பொதுமக்களும் ரெயில் வண்டி, பிளாட்பாரம் இங்கெல்லாம் பிச்சைக்காரர்களுக்கு இரக்கப்பட்டு எதுவும் தரக்கூடாது; கண்ட கூடைக்காரர்களிடமிருந்தும் பண்டமும் வாங்கக்கூடாது. இவர்களில் பெரும்பாலோர் சிறு பையன்களே. "இப்படியெல்லாம் கஷ்டப்பட்டுப் பையன்கள் பிழைக்கிருர்களே பாவம், போகட்டும்!" என்று சாதாரண மக்கள் இவர்களிடம் அநுதாபம் காட்டுவது வழக்கம்; இது தவறு. சிறுவர்களை அடைத்து வைக்கும் 'ரிமாண்டு' விடுதிகளில் போதிய இடம் இராததால் கையும் பிடியுமாகப் பிடித்தாலும் இவர்களை ஒன்றும் செய்ய முடிவதில்லை. இருந்தாலும், ரெயில்வே சிப்பந்திகள் மாறுவேஷத்தில் டிக்கட் பரிசோதகர் ஒருவரின் மேற்பார்வையில், மற்றப் பிரயாணிகள் நிம்மதியாகப் பிரயாணம் செய்ய வேண்டி, இந்தப் பிச்சைக்காரர்களையும் கூடைக்காரர்களையும் விடாமல் கண்காணித்து இவர்களால் நேரும் உபத்திரவத்தைச் சமாளித்து வருகிருர்கள்.

இந்தப் பழைமையான கலை, புரட்சிக்குப் பிறகு அங்கே புத்துயிர் பெற்றிருக்கிறது.

சீன நிழலாட்டம்

சௌலின் லின் - ஜூயி

முந்தின நாள் இரவு நிழலாட்டம் ஒன்றைப் பார்க்கப் போயிருந்தேன். நாடகம் என்றால் எனக்கு எப்போதுமே பிடிக்கும். ஆனால் நிழலாட்டத்தையே நான் அதுவரையில் பார்த்ததில்லை. குறைந்தபட்சம் ஆயிரம் ஆண்டுகளாகச் சீனாவில் பிரபலமாக விளங்கி வந்தது இந்தப் பழங் கலை. குவோமிண்டாங் ஆட்சியில் மக்கள் அன்றாட வாழ்க்கை நடத்துவதே பெருந் திண்டாட்டமாகி விட்டது; ஆகவே, இந்தக் கலை ஆதரிப்பாரின்றி அழிந்துவிட்டது. 40 ஆண்டுகளுக்குமுன் பீக்கிங்கில் 30 நிழலாட்டக் கம்பெனிகள் இருந்தன. 1948 இல் பீக்கிங் விடுதலை அடைந்தபோது பெயருக்குக்கூட ஒரு கம்பெனி இல்லை! இப்போது மக்கள் அரசாங்கம் பீக்கிங்கிலும் கிராமாந்தரங்களிலும் இதற்கு ஊக்கமூட்டி ஆதரவளித்து வருகிறது.

பீக்கிங்கிலிருந்து 70 மைல் தூரத்திலுள்ள யூடியன் ஜில்லாவைச் சேர்ந்த கம்பெனியார் நடத்தி வரும் ஆட்டம் அது. பீக்கிங் நகரத்துத் தலைவாசலருகில் நாலு அடுக்கு மாடிமேல் அமைந்த கொட்டகையில்தான் ஆட்டம் நடந்தது. நான் நேரங் கழித்துப் போனேன். அதற்குள் ஏராளமாகக் கூட்டம் சேர்ந்துவிட்டது. எங்கும் இருட்டு. நன்றாக இழுத்துப் பரப்பி நாலு மூலையும் கட்டிய வெள்ளைத் துணியில் ஒரு யுத்தவீரன், அழகிய வர்ண ஆடை உடுத்திய ஒரு ஸ்திரீ இவர்களின் நிழல் உருவங்கள் சிவப்பு மேஜை ஒன்றின் எதிரே உட்கார்ந்திருப்பது தெரிந்தது. அவள் ஒரு கூஜாவிலிருந்து ஏதோ சாராயத்தை அவன் கையில் ஏந்தியிருந்த கோப்பையில் ஊற்றினாள். அதை அவன் சாப்பிட்டான். அந்த அங்க அசைவுகளைப் பார்த்

மூலம்: சைனா ரீகன்ஸ்ட்ரக்ட்ஸ் (ஆங்கிலம்: ஜூலை-ஆகஸ்ட் '54), ஷாங்கை, சீனா.

தால் தட்டையான பொம்மைகளா இவ்வளவு உயிரும் உணர்வும் பெற்று ஆடுகின்றன என்று எனக்கே ஆச்சரியமாக இருந்தது. முதலில் நம்பவே தோன்றவில்லை. ஆமாம்; கழுதைத்தோலில் செய்த வெறுந் தட்டைப் பொம்மைகளைத் தான் திரை மறைவில் இருந்தபடி கண்ணுக்குத்தெரியாத கம்பியினால் இப்படி ஆட்டிவைத்தார்கள்.

கூடவே, நாடக பாத்திரங்கள் பேசுவதுபோல் காட்டுகிறார்கள்; இந்தச் சம்பாஷணை பாட்டாகவே அமைந்திருக்கிறது. இரும்பு விசிறியாள் என்ற ராஜகுமாரியிடமிருந்து, ரிஷபன் என்ற அரசன்-அவள் கணவன் - விடை பெற்றுக் கொள்ளும் காட்சி. 'மேற்கு நோக்கி யாத்திரை' என்ற ஒரு பழங்கதை அது. இருந்தாலும் சரித்திர ஆதாரம் கொண்டது. கி. பி. 645-இல் பௌத்த பிட்சுவான ஹ்ஸூவான் த்ஸாங் இந்தியாவுக்குப் போய்த் திரிபிடகம் என்னும் பௌத்த நூலைக் கொண்டு வந்த வரலாறு சம்பந்தமானது. அடுத்த காட்சியில் ஹ்ஸூவான் த்ஸாங் ஒரு குதிரைமேல் சவாரி செய்து கொண்டே போகிறார். அவரோடு புராண ரீதியில் அவருடைய சிஷ்யர்கள் என்று சொல்லும் சூபாசியே என்பவன் பன்றி முகத்தோடும், ஸன் ஊ குங் என்பவன் குரங்கு முகத்தோடும் தோன்றுகிறார்கள்.

நாடகக்கதை இதுதான்: இந்த யாத்திரிகர்கள் பாதி வழி போய்க் கொண்டிருக்கும்போது அக்கினி மலை குறுக்கிட்டதாம். குரு அதைத் தாண்டி வழி நடக்க வேண்டும். அந்த ஊர் ராஜகுமாரியிடம் தீ அணைக்கும் இரும்பு விசிறி ஒன்று இருந்தது. ஆகவே, அதை வாங்கி வரச் சிஷ்யர்கள் இரண்டு பேரும் புறப்பட்டார்கள். ஆனால் அவர்கள் நினைத்த காரியம் பலிக்கவேண்டுமே! அவளுடைய மகனை ஒரு யுத்தத்தில் குரங்கன் கொன்றுவிட்டான்; அதுமுதல் அவளுக்கு அவனைக் கண்டாலே ஆவதில்லை. பன்றிமுகத்தான் அவளைப் போய்ப் பார்த்தான். ஆனால் சரியான உதை வாங்கிக் கொண்டு திரும்பி வந்தான்; அவ்வளவுதான். காரியம் பலிக்கவில்லை. பிறகு குரங்கன் போய்த் தன்னால் ஆன தந்திரமெல்லாம் செய்து பார்த்தான். ஆனாலும் ஏமாந்து வேறு ஒரு விசிறியை வாங்கிக்கொண்டு வந்தான். அது அக்கினி மலையை அணைப்பதற்கு மாறாக இன்னும் கொழுந்து விட்டு எரியும்படி செய்தது. கடைசியில் அவன் தன் மந்திர சக்தியினால், வெளியூர்

சென்றிருக்கும் அவள் கணவனை ரிஷபன் என்ற அரசனைப் போல் உருவம் எடுத்துக்கொண்டு போய்ச் சரியான விசிறியை வாங்கிக் கொண்டு வருகிறான்.

இன்னும் எவ்வளவோ அபார மான விஷயங்களையெல்லாம் நிழலாட்டத்தின் மூலம் காட்டலாம். ஜனங்களையும் விலங்குகளையும் நிமிஷநேரத்தில் கொண்டு நிறுத்தி விடுகிறார்கள். நிஜமாகவே திரைக்குப் பின்னால் தீ மூட்டி அக்கினி மலை நிற்பதைக் காட்டுகிறார்கள். பன்றிமுகத்தானும் குரங்கனைப் போலவே உருமாறும் வித்தை தெரிந்தவன். ஆகவே, கண் சிமிட்டும் நேரத்தில் அவன் ஒரு கல்லாக மாறுகிறான். ஒரு மேகத்தின்மேல் குரங்கன் ஆயிரக்கணக்கான மைல் சவாரி போவதுபோல் அமைந்த காட்சி பிரமாதமாக இருந்தது! குரங்கனுக்கும் ரிஷபனுக்கும் நடக்கும் மல்யுத்தத்தில் அந்தக் கைவரிசைகளைப் பார்த்தால் பிரமித்துவிடுவோம்! பன்றிமுகத்தான் ஜம்பமாகக் காதை ஆட்டிக்கொண்டு போவதைப் பார்த்து எல்லாருமே, 'ஹோ! ஹோ!' என்று வயிறு குலுங்கச் சிரித்தோம். ஒன்றாவது பொம்மையாகத் தோன்றவில்லை; அசல் உயிரோடும் உணர்வோடும் இருக்கும் மனிதர்களாகவே காட்சியளித்தன.

திரைக்குப் பின்னால் போய்ப் பார்க்கவேண்டும் என்று சொல்லவே அங்கே அழைத்துப் போனார்கள். கூடாரம் போல் அமைந்து சுற்றிலும் படுதா தொங்கியது. சூத்திரக் கயிற்றை இழுப்பவர் திரைக்குப் பின்னால் அந்த அளவுக்கு அமைந்த மேஜையண்டை உட்கார்ந்திருந்தார். மேலே மிகவும் பிரகாசமான எலெக்ட்ரிக் பல்பு எரிந்துகொண்டிருந்தது. அவர் கைக்கு எட்டும் தூரத்தில் குறுக்காகப் போட்ட ஒரு மூங்கிற் கழியில் பத்துப் பன்னிரண்டு பொம்மைகள் தொங்கிக்கொண்டிருந்தன. இன்னும் அந்த அந்தச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி பயன்படுத்த நாற்காலிகள், மேஜைகள், கட்டிடங்கள், கத்தி, வில், ஈட்டி முதலியவை அவரெதிரில் இருந்தன. ஒவ்வொரு பொம்மைக்கும் மூன்று இடத்தில் நீண்ட கம்பி கட்டி இருந்தது. அந்தக் கம்பிகளின் நுனியில் பிடித்துக்கொள்ள நெட்டி கட்டியிருந்தது. இந்த நெட்டியைப் பிடித்துக்கொண்டு தான் மிகவும் சாமர்த்தியமாகப் பொம்மைகளை உயிரும் உணர்வும் கொண்டு விளங்கும்படி ஆட்டி வைக்கிறார்கள். ஒரு கதா பாத்திரத்துக்குமேல் காட்டும்போது இன்னும் ஓர் ஆளைத் துணைக்கு வைத்துக்கொண்டார் சூத்திரதாரி.

இங்கே இருந்த வாத்தியங்களும் மொத்தத்தில் சீனாவிலே நாடக மேடைகளில் பயன்படும் வாத்தியங்களைப் போலவேதான் இருந்தன. ஒரு பெரிய தபளா, சின்னத் தபளா, ஜால்ராக் கட்டை, நாலு கம்பி போட்ட பிடில், பித்தளையால் செய்த தாரை, இரண்டு சேமக்கலங்கள், ஜாலராக்கள் இவைகள்தான். சின்னத் தபளாவும் ஜாலராக் கட்டையுந்தான் அதிகமாகப் பயன்பட்டன; இப்படித் தாளம் போடுகிற வேகத்தில் மக்களுக்கு ஆவலும் உணர்வும் மிகுதியாகும். பாடும்போது கூடவே பிடிலும் பக்கவாத்தியமாக இருந்தது. எல்லாப் பாடகர்களுமே ஆண்கள்தான். ஆண்

பெண், வாலிப - வயோதிக நாடக பாத்திரங்களுக்கு ஏற்ற விதத்தில் தமாஷ், துயரம் இப்படி அந்த அந்தச் சந்தர்ப்பத்துக்குத் தகுந்த மாதிரி ஒருவராகவோ பலராகவோ இவர்கள் பாடுவது வழக்கம். எல்லா வாத்தியங்களும் உபயோகமாகும் போது வாத்தியக்காரர்களைத் தவிர ஒவ்வொரு பாடகருங்கூட ஒரு வாத்தியத்தையாவது வாசிக்கிறார். சூத்திரதாரிக்குத் துணையாக இருப்பவர்கூடச் சற்றே ஒழிந்திருக்கும் நேரத்தில் ஏதாவது வாத்தியத்தை வாசிக்கிறார் என்றால் பாருங்களேன். நாடக பாத்திரங்களின் பேச்சை யாரும் நெட்டுருப் போட வேண்டியதில்லை; பெரிய பெரிய எழுத்தில் மேஜைமேல் ஒரு காகிதத்தில் எழுதி வைத்துக்கொண்டு படிப்பார்கள். வலதுபக்க ஓரம் தபளா அருகில் உட்கார்ந்திருந்தவர், பாவம், மிகவும் சிரமப்பட்டுக் கழுத்தை நீட்டி நீட்டி எழுத்தைப் படிக்க வேண்டியிருந்தது.

நாடக பாத்திரங்கள் எல்லாருமே கீச்சென்று உரத்த குரலில், சில சமயம் பொய்க் குரலில்கூடப் பேசுகிறார்கள். இந்தப் பக்கத்திலிருந்து ஒலி அந்தப் பக்கம் போவதற்குத் திரை தடையாக இருப்பது ஒரு காரணம்: அதோடு, பரந்த வயல் வெளிகளிலும் கிராமச் சந்தைகள் நடக்கும்போதும் அந்தப் பக்கம் தொலைவில் உட்கார்ந்திருப்பவர் காதுக்கு எட்டாது போய்விடுமே என்ற காரணத்தாலும் இப்படிப் பேசி வழக்கமாகிவிட்டது.

'முன் பக்கத்திலிருந்து பார்க்கும்போது இந்தப் பொம்மைகளின் நிழல்கள் அசைவதற்கு ஏற்ற மாதிரி துளியும் பிசகாமல் பாட்டும் வாத்திய ஒலியும் இசைந்துவருகின்றனவே' என்று எண்ணி, நாம் இங்கே பின்பக்கம் வந்து பார்த்தால், 'இந்தக் குச்சியும் தனித்தனியே கிடக்கும் வெற்றுப் பொம்மைகளுமா இப்படி ஆடின!' என்று ஆச்சரியமாக இருக்கும்; நம்பவே கூடத் தோன்றாது. ஆமாம்; அவ்வளவு உயிரோடும் உணர்வோடும் ஆடிய குரங்கன், பன்றிமுகத்தான், ராஜகுமாரி எல்லாமே கம்பி கட்டிவிட்ட - தோலால் செய்த - சின்னஞ்சிறு பொம்மைகள்தான்; அவை நடித்ததற்கு ஏற்றபடி பாடினவர்களும் சாதாரண உடை உடுத்த சாமானியமான ஆசாமிகளே! இரும்பு விசிறியாள் என்னும் ராஜகுமாரிக்குப் பதிலாகப் பேசிய ஆள், மீசை வைத்துக்கொண்டிருந்த ஓர் ஆண்பிள்ளைதான். இப்போது அந்தப் பொம்மைகளை விட்டுவிட்டு வாத்திய ஒலியை மட்டும் கேட்கும்போது அது அர்த்தமற்ற ஓசையாகத்தான் பட்டது.

ஆனால் முன்பக்கம் இத்தனை நேரமாக இந்த ஆட்டத்தையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த மக்கள், முடிவு என்ன ஆகிறது என்று காத்துக்கொண்டிருந்தார்கள். அதோடு அடிக்கடி சிரிப்பும் கைதட்டலும் பிரமாதமாக இருந்தன. நடுநடுவே அவர்கள் அந்தப் பக்கம் இருட்டில் மௌனமாக அமர்ந்து, நடப்பதைக் கூர்ந்து கவனித்தும் வந்தார்கள். இப்படி மக்கள் மயங்கும்படியான ஓர் அற்புதக் காட்சி திரையில் எப்படி நிகழ்ந்தது? இங்கே இருந்த பாடகர்களோ மற்றவர்களோ ஏதோ ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கி இப்படி நடந்துகொண்டதாகவும் தெரியவில்லை. தானக்

கட்டு, தானாகவே வந்தது. வெகு காலமாக இப்படிப் பயிற்சி செய்து அதுவே ஒரு பழக்கமாகிவிட்டது. இன்று வர்ணப் பேசும் படங்கள் எடுக்கும்போது ஒவ்வொரு விநாடியையும் திட்டமிட்டு, எல்லாம் பொருத்தமாக அமையும்படி விஞ்ஞான அறிவு கொண்டு தயாரிக்கிறார்களே, இந்த மாதிரி லயம் வெகு காலத்துக்கு முன்பே நிழலாட்டத்தில் அநுபவமும் பயிற்சியும் உள்ளவர்களுக்கு வந்துவிட்டது.

அன்று ஆட்டம் முடிந்ததும், ஆட்டக்கம்பெனி மானேஜரான லி யு-லான் என்பவரைப் பார்த்தேன். அவர் நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் உடனே பதில் சொன்னார். "யூடியன் ஜில்லாவில்தான் பல நூற்றாண்டுகளாக இந்த நிழலாட்டக் கலை பிரசித்தி பெற்றிருந்தது. ஆனால் 1937-இலிருந்து 1945-க்குள் ஜப்பானியர் சீனாவை ஆக்கிரமித்துப் பயங்கரக் கொடுங்கோல் ஆட்சி நடத்தி வந்தார்கள். ராணுவ ஆட்சி அமலில் இருந்ததால் இரவு வேளைகளில் ஆட்டம் நடத்த முடிவதில்லை. ஆனால் சமீபத்தில் நாடு விடுதலை அடைந்த பிறகு உள்ளூரில் சில குடியானவர்கள் தமாஷாய்ப் பொழுதுபோக்கப் புதிதாக 37 கம்பெனிகள் ஆரம்பித்து நடத்தி வந்தார்கள். இந்தக் கலையின்மேல் அவர்களுக்கு எவ்வளவு ஆசை தெரியுமா? இதில் வரும் பாட்டுக்களில் சிலவற்றைப் பாடிக்கொண்டே வயல்களில் இவர்கள் உழுவதைப் பார்க்கவேண்டும்!" என்றார் மானேஜர்.

இந்தக் கம்பெனி 1951-இல் யூடியன் ஜில்லாவில் மக்கள் ஆட்சி ஏற்பட்டபோது ஆரம்பித்தது. தனித்தனியே இந்தமாதிரி தமாஷாகத் தொடங்கிய சின்னச் சின்னக் கம்பெனியில் இருந்தவர்களில் கைதேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். நிழலாட்டக் கலை அழியாதபடி பாதுகாத்து மக்களின் புதிய அபிருசி, தேவைகளுக்கு ஏற்றபடி அதை வளர்ப்பதே இந்தக் கம்பெனியின் நோக்கம். பொம்மையை ஆட்டி வைப்பது, பாடுவது, காட்சிகளை நடத்த ஏற்பாடு செய்வது இப்படிப் பலவிதத்திலும் லி யு-லான் சிறு வயது முதல் பயிற்சி பெற்றிருப்பதால் தான் அவரை மானேஜராக நியமித்திருக்கிறார்கள். "பரம்பரையாக இந்த வித்தையில் ஊறி எழுந்தவர்கள் நாங்கள்" என்று அவரே சொன்னார். அவருடைய தந்தை ஒரு குடியானவர்; இந்தக் கலையில் மிகவும் ஈடுபாடு உள்ளவர். லி யு-லானுக்கு இரண்டு பிள்ளைகள்; இவர்கள் இந்த மாதிரி பொம்மை தயாரிப்பதில் நிபுணர்கள்.

இந்தக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் ஒன்பது பேர். இவர்களில் எட்டுப் பேர் குடியானவர்கள். இன்னும் பழையபடி மற்ற நேரங்களில் இவர்களும் நிலம் உழுது பயிரிட்டுத்தான் வாழ்ந்து வருகிறார்கள். சூத்திரதாரிமட்டும் முன்னே கிராமப் பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தவர். இவர் முழு நேரமும் இந்த ஆட்ட வேலையிலேயே ஈடுபட்டிருக்கிறார். "இப்படிக் கம்பெனி ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு வரும்போது உங்கள் நிலம் நீரை யார் கவனித்துக்கொள்வார்கள்?" என்று விசாரித்தேன். "இவர்கள் எல்லாருமே விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள்

வெளியில் போயிருக்கும்போது மற்ற அங்கத்தினர்கள் இவர்களுக்கு ஒத்தாசையாக நிலத்தை உழுது பயிரிடுவார்கள்" என்றார் வி யு-லான்.

இவர்களைத் தவிர, உயிரற்ற நூற்றுக்கணக்கான ஆண் பெண் பொம்மைகள், உடைகள், தனியாக எடுக்கக் கூடிய பொம்மைத்தலைகள், குதிரைகள் முதலிய விலங்குகள், மேஜை நாற்காலிகள், அலங்காரங்கள், பிற சாமான்கள், வீடுகள், மேகம் இப்படி எத்தனையோ பொம்மைகளும் கம்பெனியிடம் இருக்கின்றன. ஒவ்வொரு பொம்மையும் ஓர் அடி உயரம் இருக்கும். ஆடுமாடு கன்றுகளின் தோலைவிட உறுதியாகவும் வெளிச்சம் புகும்படி பளிங்குபோலவும் இருப்பதால் கழுதைத் தோலிலே இதைச் செய்கிறார்கள். மிகவும் நுணுக்கமான முறையில் பொம்மைகளைக் கத்தரித்து வைப்பார்கள்: சிலசமயம் 'லேஸ்' போல் அவ்வளவு மெல்லிதாகக் கூட இருக்கும்படி தயாரிப்பார்கள். மெல்லிதாகத் தலைப்பாகம் கத்தரிப்பதில்தான் கைத்திறமை இருக்கிறது. சாதாரணத் தொழிலாளியாக இருந்தால் புத்தகங்களிலிருந்து மாதிரி எடுத்து அப்படியே செய்துவிடுவான். ஆனால், உண்மையிலே கலைஞனாக இருப்பவனுக்கோ இப்படிச் செய்தால் திருப்தியே ஏற்படாது. கண், காது, மூக்கு முதலிய இடங்களில் தொளை போடுகிறார்கள். பார்த்தால் ஏதோ சர்வ சகஜமாக நமக்குத் தோன்றலாம். ஆனால் நாடகத்தில் பார்க்கும்போது முகக் குறிப்பெல்லாம் இதில் வெளியாகிறது; அதுதான் அற்புதம். இந்தமாதிரி தலைகள்தான் கம்பெனிக்குரிய பொக்கிஷம் என்று சொல்லவேண்டும். பொம்மைகளைத் தயாரிக்கும்போதே கெட்டியாகவும் பளிச்சென்றும் இருக்கும் வர்ணங்களைத் தீட்டிவிடுவார்கள்.

மானேஜரின் அறையில் ஒரு 'ஷெல்ஃப்' இருந்தது. அதில் இப்படித் தயாரித்த பொம்மை முதலியவை கட்டுக் கட்டாக இருந்தன — சுமார் முப்பது நாடகங்களுக்கு உபயோகப்படும் சாமான்கள். மொத்தமே அவ்வளவு நாடகந்தான் என்றாலும், சில நாடகங்கள் மிகவும் நீண்டவை. பத்துக்கு மேற்பட்டவை, பல பழைய நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டவை. பத்து முதல் முப்பது நாள் ராத்திரிகூடத் தொடர்ந்து காட்டிக்கொண்டு போகவேண்டியிருக்கும். பெயர்களைக் கேட்டதும் பிரபலமான கதைகள் பலவற்றை இப்படி நாடகமாக்கியிருக்கிறார்கள் என்று தெரிந்தது. "பேசும் நடையில், பாட்டுக்களோடு யார் இப்படிப் பொருத்தமாக அமைத்துக் கொடுத்தார்கள்?" என்று கேட்டேன். யு-லான், "எப்படிச் சொல்வது? தலைமுறை தலைமுறையாகக் கர்ண பரம்பரையாக வந்திருக்கும்; அப்புறம் அங்கங்கே தனிப்பட்ட ஆட்டக்காரர்கள் இதை எழுதி வைத்துக்கொண்டிருக்கலாம்" என்றார்.

சமீபத்தில் நாடு விடுதலையானதும் புதிய விஷயங்களைக் குறித்துப் புதுப் புது நாடகங்களைச் சிலர் எழுதி வருகிறார்கள். 'வியு-சியாவோ', 'சியாவோவின் திருமணம்', 'எர் ஹோ' முதலியவை இந்தமாதிரி புது நாடகங்கள். ஷென்ஸி, ஷான்ஸி மாகாணங்களில் பத்து ஆண்டுகளுக்குமுன் வாலிபர்களும் இளம்பெண்களும்

சுயேச்சை மணத்தை ஆதரித்தும், பழம் பசலி முறையை எதிர்த்தும் கிளர்ச்சி நடத்தி வந்தார்கள். அதை அடிப்படையாகக் கொண்டவை இந்த நாடகங்கள். "இப்போது வாலிபர்களும் இளம்பெண்களும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்து நாடகத்தைக் கவனிக்கும் போது பாருங்கள்! நாடகத்தில் வியு-சியாவோ என்ற பெண்ணை அவள் தகப்பன் பேராசைப்பட்டுப் பணத்துக்காக விற்கப் பார்க்கிறான். அந்தக் கட்டத்தில் அவள் அதெல்லாம் முடியாது என்கிறாள். அப்போது, வேடிக்கை பார்க்கும் இந்தப் பெண்களும் வாலிபர்களும் அவளை ஆதரித்து என்னமாகக் கை தட்டுகிறார்கள், தெரியுமா?" என்று சிரித்துக்கொண்டே சொன்னார் வியு-லான்.

கி. பி. 960 முதல் 1279-வரையில் சுங் அரச வம்சத்தார் ஆண்ட சமயத்திலேயே நிழலாட்டம் பிரபலமாக இருந்து வந்தது என்று சரித்திர வரலாறுகளிலிருந்து தெரிகிறது. ஹோனன் மாகாணத்தைச் சேர்ந்த பின்லியங் அப்போது நாட்டின் தலைநகராக இருந்தது. (இப்போது அதற்குக் கைபேங் என்று பெயர்.)

விடுமுறை நாட்களில் கும்பலில் குழந்தைகள் எங்காவது காணமல் போய்விடுமே என்று, தெருமூலையில் கொட்டகை கட்டி அவர்கள் தமாஷாகப் பொழுது போக்க இப்படிப் பொம்மலாட்டம் காட்டுவது வழக்கம். அதுமுதல் நாட்டில் பல இடங்களில் இந்தக் கலை அபிருத்தி அடைந்து வந்தது. இதில் ஏழு வகை உண்டு. முதலில் சீனவைப் பற்றி வெளி நாடுகளில் அக்கறை ஏற்பட்டதே இந்த நிழலாட்டம் போன்ற சில கலைகளினால்தான். கி. பி. 1781-இல் ஜெர்மனியில் கெதே என்ற பிரபல ஆசிரியரின் பிறந்த நாளை உத்தேசித்து, 'பிறப்பு', 'மினர்வாவின் வாழ்வும் செயலும்' முதலிய நாடகங்களைச் சீன நிழலாட்ட ரீதியிலேயே ஆடிக் காட்டினார்கள். 'மைடாவின் தீர்ப்பு' என்று பின்னால் நடந்த நாடகம் ஒன்றும் இதே ரீதியில் அமைந்திருந்தது.

யூடியன் கம்பெனியார் நடத்துபவை கிழக்கு ஹோபீ என்ற நாடக வகையைச் சேர்ந்தவை. பீக்கிங்கிலுள்ள டே ஷென் என்ற பிரபல கம்பெனியார் நடத்துவதை விட அதிகமாக நாடோடி வகையைச் சேர்ந்த நாடகங்களை யூடியன் கம்பெனியார் காட்டுகிறார்கள். முன்சொன்ன கம்பெனியார் பழைய பீக்கிங் நாடகப் பத்ததியைப் பெரிதும் கடைப்பிடித்து வருபவர்கள். அவர்கள் நடத்தும் ஆட்டங்களில் நடிப்பு, கண்ணைக் கவரும்படி பிரமாதமாக இருக்கிறது. சங்கீதமும் பலவகையில் சிறப்புற்று விளங்குகிறது.

எல்லா நிழலாட்டக்காரர்களுமே ஒன்றை முக்கியமாகக் கவனித்து நடத்தி வருகிறார்கள்: பழமையில் சிறந்த அம்சங்களையெல்லாம் எடுத்துக்கொண்டு சீனர்களின் இன்றைய வாழ்வையும் விருப்பங்களையும் பிரதிபலிக்கும் புதிய விஷயங்களை ஏற்று அவைகளை இந்தக் கலையின் மூலம் மக்களுக்குக் காட்டி வருகிறார்கள்.

அநுபவம் கலந்த கல்வி

விநோபா பாவே

அநுபவ ரீதியான கல்வி அளிப்பதே ஆதாரக் கல்விமுறையின் நோக்கம் என்பதை ஆசாரியர் வேத அழகாகவும் தெளிவாகவும் ஆதாரக் கல்வி மகாநாட்டில் ஒரு பிரசங்கத்தின் மூலம் வெளியிட்டார். அதில் முக்கியமான ஒரு பகுதி இது.

குழந்தையிடம் தாய், "அதோ பார் சந்திரன்" என்று சொல்லுகிறாள். குழந்தை அதைக் கேட்கிறது. அதன் பிறகு, தாய் மீண்டும், "சந்திரன் எங்கே இருக்கிறது? காட்டு, பார்ப்போம்" என்கிறாள். இப்படிக் குழந்தையைப் பரீட்சை செய்கிறாள். குழந்தை முதலில் கையால் சந்திரனைக் காட்டுகிறான். பிறகு "ச..ந்..தி..ர..ன்.." என்று எழுத்துக் கூட்டுவதுபோல் ஆரம்பித்து முடிவில், "சந்திரன்" என்று சேர்த்துச் சொல்லிவிடுகிறான். முதலில் வஸ்துவைப் புரிந்துகொள்கிறான்; பின்பு பெயரைச் சொல்லுகிறான். இதுதான் பாஷை கற்பிக்கும் முறை. தாயே ஆரம்ப ஆசிரியை. அதனால்தான் கல்வி நிபுணர்கள், "ஆரம்பத்தில் ஏற்பட்ட ஞானம் பின்பு இருப்பதில்லை; தாய் கலைப்பண்பு உள்ளவளாக இருந்தால் உலகம் உய்யும்" என்று சொல்கிறார்கள். தாய்தான் சிறந்த குரு. அந்தக் குரு எல்லாருக்கும் சுலபமாகக் கிடைத்துவிடுகிறாள்.

பள்ளிக்கூடத்துக் குரு முடிவில் மெருகு கொடுக்கிறார்; அவ்வளவுதான். சாமான் செய்து முடித்த பின்பு அதன் மேல் புறம் பாலிஷ் கொடுக்கிறார்களே, அதே மாதிரி பள்ளிக்கூடத்துக் குரு பாலிஷ் கொடுக்கிறார். இந்த ஆசிரியர்கள் இல்லாவிட்டால் பாலிஷ்தான் இல்லாமல் போகும்; மற்றப்படி ஒரு கெடுதலும் வராது. ஆனால் நல்ல முறையில் பாலிஷ் இருந்தால்தான், இந்தப் பாலிஷ் கொடுப்பவர் போய்விட்டாரே என்று வருந்துவோம்.

இன்று கொடுக்கும் பாலிஷ் மிகவும் மோசமானது. அரசாங்கம் தன் கொள்கைகளைத் திணிக்கவே லட்சக்கணக்கான ரூபாய் கல்விக்காகச் செலவிடுகிறது. உலகத்துக்கு ஞானத்தைப் பரப்பிய புத்த பகவான், துளசிதாசர், ஏசுநாதர் போன்ற மகான்கள் சுதந்தர புருஷர்கள். இன்றைக் கல்வி நிபுணர்கள் உலகத்துக்கு என்ன கொடுத்திருக்கிறார்கள்? தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை மட்டும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், உலகம் உய்ய வேண்டுமானால், கல்வி சுதந்தரமாக இருக்க வேண்டும். அப்போதுதான் அஹிம்சை உதயமாகும்.

குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பை ஆண்

மூலம்: ஸர்வோதயம் (தமிழ்: செப்டம்பர் '54), திருப்பூர்.

களிடமிருந்து விடுவித்துப் பெண் மணிகளிடம் ஒப்படைக்க வேண்டும். தாய்மார்களிடம் கல்வியளிக்கும் பொறுப்பு வந்தால் தான், குழந்தைகளின் மனம் விசாலம் அடையும். இவைகளைப் புஸ்தகத்தின் மூலம் ஏற்படுத்தக் கல்வி நிபுணர்கள் முயலுகிறார்கள்.

குழந்தை வெளியே சூரியநாராயணனைப் பார்க்கும்போதுதான், கண்களுக்கு மலர்ச்சி ஏற்படும். தத்துவத்தைக் கேட்கும்போது காதுகளுக்கு மலர்ச்சி ஏற்படுகிறது. இந்திரியங்களின் மலர்ச்சி மிருகத்துக்குக்கூட ஏற்படுகிறது. அதன் கண்களும் பார்க்கத் தகுந்த வஸ்துக்களையே பார்க்கின்றன; கால்களும் செல்லவேண்டிய இடத்துக்குத்தான் போகின்றன. ஆகையால், யந்திர இயல் போன்ற மலர்ச்சிக்குக் கல்வி இலாகா தேவையில்லை. யந்திர மலர்ச்சியை நான் விரும்பவில்லை; மனத்தின் மலர்ச்சியைத்தான் நான் விரும்புகிறேன். குழந்தை ஏதாவது ஒரு நல்ல காரியம் செய்துவிட்டு வந்தால், ஊரார் அதைப்பற்றி எதை வேண்டுமானாலும் சொல்லிக் கொள்ளட்டும்; தாய் மட்டும் குழந்தை செய்தது சரியென்றே ஆமோதிக்கிறாள். குழந்தைக்கு உலகமே கிடைத்துவிட்ட ஆனந்தம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால் தாய்மார்களிடம் குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும் பொறுப்பு இருக்க வேண்டும். உலகம் பூராவிலும் இந்தமாதிரி கல்விமுறை ஏற்பட்டுவிட்டால், அஹிம்சை தானாகவே உதயமாகிவிடும்.

உலகத்தில் ஆண்மைக்குரிய காரியம் ஏதாவது செய்யாதவர் ஆசிரியராக இருக்கத் தகுதியற்றவர். இன்றோ இருபது வயது வந்த வாலிபர்கள் ஆசிரியர் தொழிலில் அமர்ந்துவிடுகிறார்கள். அவர்களுக்கு வியாபாரத்திலோ, ராணுவத்திலோ, விவசாயத்திலோ எந்தவித அநுபவமும் கிடையாது. இப்படி அநுபவம் இல்லாதவர்களின் கையில் நம் குழந்தைகளை ஒப்படைத்தால், குழந்தைகளுக்கு அவர்கள் எப்படி வாழ்க்கையின் அநுபவத்தைப் போதிக்கமுடியும்? அவர்களிடம் ஆசிரியர் பொறுப்பை ஒப்படைக்காமல், வானப்பிரஸ்தாசிரமம் அநுசரிக்கும் பெரியோரிடமே அதை ஒப்படைக்க வேண்டும். மாணாக்கர் பிரம்மசரியம் அநுஷ்டித்துக்கொண்டு கல்வி கற்க வேண்டும். அதன் பொருட்டுத் தகுந்த குருவிடம் செல்ல வேண்டும். பிறகு கிருகஸ்தாசிரமம் எடுத்துக்கொண்டு உலகத்திலுள்ள எல்லா அநுபவங்களையும் பெற வேண்டும். அப்புறம் வானப்பிரஸ்தாசிரமம் எடுத்துக்கொண்டு, ஆசிரியராகச் சேவை செய்ய வேண்டும். நீங்கள் பென்ஷன் கொடுத்து அனுப்பிவிட்ட ஆசிரியர்தான் உண்மையான ஆசிரியராக இருக்கத் தகுதியுள்ளவர். பல உத்தியோகங்களிலிருந்தும் விலகி உபகாரச் சம்பளம் பெறும் அன்பர்கள் கௌரவ ஆசிரியர்களாகச் சேவை செய்தால், கல்விக்கு அதிகச் செலவே ஏற்படாது; நல்ல கல்வியும் கிடைக்கும். இன்றோ வாலிபர்களை ஆசிரியர்களாக அமர்த்துகிறார்கள். அவர்கள் குடும்பம் பெருகப் பெருகச் சம்பளத்தையும் கொஞ்சம் உயர்த்தி வருகிறார்கள். இன்று இருக்கும் ஆசிரியர்களெல்லாம் தகுதியற்றவர்கள்.

பஞ்சாப் சர்க்கார் ஒரு சுற்றறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள்.

அதில், "மாணவர்களுடன் ஆசிரியர்கள் அதிகத் தொடர்பு வைத்துக்கொள்ளக் கூடாது. இதனால் மாணவர்களுக்கு மிகவும் அபாயம் ஏற்படுகிறது" என்று கூறுகிறார்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சரீர சம்பந்தமான தொடர்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்றே இந்தச் சுற்றறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ஏனென்றால், பெரும்பான்மையான ஆசிரியர்கள் வாலிபர்களே. இதனால்தான் நான் வானப்பிரஸ்தாசிரமம் அநுசரிக்கும் முதியவர்களை ஆசிரியர்களாக அமர்த்த வேண்டும் என்கிறேன். இந்திரியங்களில் ஓரளவு சக்தி இருக்கும்போதே வானப்பிரஸ்தாசிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், சக்தி பூராவும் செலவழிந்த பிறகும் ஒருவரும் இன்று வானப்பிரஸ்தாசிரமம் எடுத்துக்கொள்ளத் தயாராயில்லை.

முன் காலத்தில் குருவுடன் குருவின் பத்தினியும் இருந்தாள். இன்றோ குரு பத்தினிக்குத் தன் கணவர் என்ன செய்கிறார் என்பது கூடத் தெரியாது. அவள் சமையல் செய்கிறாள்; குழந்தைகளைப் பராமரிக்கிறாள். அவள் தன் கணவனுக்கு உதவியாக இருக்க முடியுமா? ஆசிரியர் பிரசங்கம் புரிந்தால் அதன் குறிப்பை எடுக்க முடியுமா? ஆசிரியரின் ஸ்தானத்தில் அவருடைய மனைவிக்கும் இடம் இருக்க வேண்டும். மாணவரின் உணவு விடுதி முதலியவைகளைக் கவனிக்கும் பொறுப்பு அவளிடம் இருக்க வேண்டும். அவளே ஆரம்ப வகுப்புகளுக்குக் கல்வி போதிக்க வேண்டும். குழந்தைகளுக்கு அவளுடைய அன்பு கிடைக்கும். இதெல்லாம் அநுபவ சாத்தியமே.

ஆரம்பத்தில் உள்ளத்தில் மறுமலர்ச்சி ஏற்பட வேண்டும். பிறகே புத்தியின் மலர்ச்சி ஏற்பட வேண்டும். பக்தி, பஜனை, சங்கீதம், ஓவியம், கிராமக் கைத்தொழில், சமையல் முதலியவை மனமலர்ச்சியைக் கைகூடச் செய்யும். சமையல் என்பது குறிப்பிட்ட தொழில் அல்ல. அது தினசரிக் கடமையாகும். அதுவும் மனமலர்ச்சிக்குச் சாதனமாகும். தாய்க்கு ஓய்வு கொடுத்து, "நீ இனி மேல் சமையல் செய்யவேண்டாம்! குழந்தைகளைப் பராமரிக்க வேண்டாம்" என்று கூறினால், அவளுடைய சக்தியில் முக்கால் பங்கு விரயமாகிவிடும். சாபர்மதி ஆசிரமத்தில் காந்திஜி இருந்த போது, உணவு பரிமாறும் வேலையைத் தாமே மேற்கொண்டார். அவர் பரிமாறிய உணவை நாங்கள் எல்லாரும் உண்டிருக்கிறோம். அதன்மூலம் பெற்ற ஞானம், அவருடைய பிரசங்கங்களின் மூலங்கூடக் கிடைக்காது.

இறைவன் குழந்தைப் பருவத்தில் கம்சனைக் கொன்றான். தான் புரியவேண்டிய மகத்தான வேலைகளையெல்லாம் குழந்தைப் பருவத்திலேயே பகவான் செய்துவிட்டதால், நாம் பாலகிருஷ்ணனைப் பூஜிக்கிறோம். இவ்வளவு மகத்தான காரியம் செய்த பிறகுங் கூடக் கிருஷ்ணனின் தகப்பனார், அவனுக்குக் கல்வி அளிக்கக் கருதி ஒரு குருவிடம் அவனை அனுப்பினார். குரு அவனுக்கு ஆறு மாதத்திலேயே அத்தாட்சிப் பத்திரம் கொடுத்துவிட்டார். "நீங்களே பெரிய ஞானி. நீங்கள் பூராக் கல்வியும் கற்றுக்கொண்டு

விட்டீர்கள். இனி நீங்கள் போக லாம். உங்களை மாணவனாகக் கொண்டது என் பாக்கியமே. நீங் கள் கோரும் வரத்தைக் கேளுங் கள்" என்று கண்ணனிடம் சொன் னார் குரு. இறைவன் எல்லாவற் றுக்கும் மூலகாரணன். அவனே இங்கே நாடகம் நடிக்கிறான். குரு வரம் கேட்கும்படி வற்புறுத்திய போது, "என் தாயின் கையில் என்றும் எனக்கு உணவு கிடைக்க வேண்டும்" என்று கோரினான். கண்ணன் மறைந்த பிறகே அவனுடைய தாய் மறைந்தாள் என்பது உங்களுக்குத் தெரிந் திருக்கும். ஆகையால், சமையல் கலை மனமலர்ச்சிக்கு ஒரு கருவி யாகும். பிரியமாக முழு மனசோடு உணவு பரிமாற வேண்டும்.

ஒரு தடவை பகவான் புத்த ருடைய சிஷ்யர், எவனோ ஒரு மனிதனை அழைத்துவந்து அவனுக் குத் தர்மோபதேசம் செய்யும்படி கோரினார். அவனிடம் புத்தர் முதலில், "தாங்கள் சாப்பிட்டீர் களா?" என்று கேட்டார். "நான் நேற்றுமுதல் பட்டினி" என்று அவன் பதில் சொன்னான். உடனே அவனுக்கு உணவு கொடுக்கும்படி சிஷ்யரிடம் புத்தர் கூறினார். அதற்குச் சிஷ்யர் தர்மோபதேசம் பெறுவதற்காகவே அவன் வந்திருக் கிறான் என்று ஞாபகமூட்டினார். புத்தர், "முட்டாளே, பசியோடு இருப்பவனுக்கு உணவு அளிப்பது தானே முதல் தர்மம்!" என்று கூறினார். இந்த உண்மையை நாம் நன்கு அறிந்துகொள்ள வேண்டும். குழந்தைப்பருவத்தில் தாய் உணவு சமைத்து நமக்குக் கொடுக்கிறாள். இந்தக் காலத்தில் பையன் களுக்கு உணவு தயாரிக்கும் கலையையே கற்றுக் கொடுப்ப தில்லை; பெண்களுக்கு மட்டிலுமே கற்றுக்கொடுக்கிறார்கள். ஆண் களும் சமையல் வேலையைக் கற்க வேண்டும். சமையலில்தான் அன் புப் பிரவாகம் ஓடுகிறது. அதன் மூலந்தான் மன மலர்ச்சி ஏற்படும். அதன் பிறகு கலை, விஞ்ஞானம், தொழில், நெசவு முதலியவற்றைத் தந்தை கற்பிக்கலாம். ஆகையால் கல்வி சம்பந்தப்பட்டவரையில் தந்தை, தாய் (அதாவது குரு, குருபத்தினி) இவர்கள்தான் வேண்டும். போதனைக்கு இருவரும் சேர்ந்து கிடைக்காத இடங்களில் கல்வியும் கிடைக்காது.

யாருக்காவது வயிற்று நோவு எடுத்தால், அதன் காரணத்தைக் கண்டு அறிந்த பிறகு திருப்தி அடைகிறோம்; அப்போது அவ ருடைய வலியைப் பார்த்துக் கவலைப்படுவதில்லை. அந்த வலி யின் காரணத்தை அறிய முடியாத போதுதான் கவலைப்படுகிறோம். காரணத்தை அறிவதற்கு முன்பு வலி நின்றுவிட்டாலும், நமக்குக் கவலை ஏற்படும். அதாவது, குரு நம் வீட்டுக்கு வந்து போதிக்கா மல் திரும்பிச் சென்றுவிட்டது மாதிரி தோன்றுகிறது. இப்படி வயிற்று வலிகூட நமக்குக் குரு வாக அமைந்துவிடுகிறது. யாரா வது இறந்தால், அந்தச் சாவும் குருவாக அமைந்துவிடுகிறது. பிறப்பதும் நமக்குக் குருவாகி விடுகிறது. இந்த விதமாக உல கத்தில் எல்லா விஷயங்களி லிருந்தும் நாம் அநுபவம் பெறு கிறோம். இதுவே ஆதாரக் கல்வி யின் ரகசியம்.

எத்தனை மடங்குதான் மதமாற்றம் நடந்தும் மிஞ்சி நிற்கின்றன இவை;

கோவா இந்துக் கோயில்கள்

ஜரணி ஸ்ரீநிவாஸ்

கோவா என்றதும் பம்பாய் ராஜ்யத்தவருக்கு ஆசை தீரக் குடி வழங்கும் ஊர் என்ற எண்ணமே ஏற்படும். பொன்னைத் திருட்டுத்தனமாக வெளியேற்ற முயலும் திருவிளையாடலுக்கேற்ற சுரங்கம் அது என்றும் சிலர் எண்ணுவது வழக்கம். ஆனால் அப்படி ஒரேயடியாய்த் தவறான கருத்துக் கொண்டுவிடக் கூடாது. தென்னிந்தியாவின் இயற்கை எழில் மிகுந்த பிரதேசங்களில் இதுவும் ஒன்று; உல்லாசப் பிராயாணத்துக்கு உகந்த பிரதேசம்.

கிறிஸ்துவ மதம் இங்கே பரவியதுபோல், இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் பரவவில்லை. தெருவுக்கு ஒரு சர்ச்சாவது இருக்கும். சிறிய கல் சிலுவை தொடங்கி, மிகப் பெரிய ஸெயிண்ட் ஸேவியர் சர்ச்சுவரையிலும் பல அளவுகளில் சர்ச்சுகளை இங்கே காணலாம். இந்துக் கோயில்கள் பலவற்றின்மேல் சர்ச்சுகளை எழுப்பியிருக்கிறார்கள். போர்ச்சுகீசியப் பாதிரிகளின் மதமாற்றமுயற்சியால் இந்தியாவிலேயே கோவாவில்தான் கிறிஸ்துவர்களின் ஜனத்தொகை மிக அதிகரித்திருக்கிறது.

இந்த மதமாற்ற முயற்சிக்கும் தப்பி இந்து மதமும் அதன் கொள்கைகளும் இங்கே வேர் ஊன்றியிருப்பது மகத்தான ஓர் அதிசயமே. இங்கே மிஞ்சியிருக்கும் கோயில்களும் ஓரளவு இதற்குக் காரணமாகும்.

சரித்திர காலத் தொடக்கத்திலேயே இந்தக் கோயில்களின் மேல் வெளிநாட்டரசர் சிலர் படையெடுத்திருக்கிறார்கள். 13-ஆம் நூற்றாண்டில் கோவா யாதவ அரசர்களின் ஆட்சியில் இருந்தது. அப்போது முஸ்லிம் மன்னன் ஒருவன் அதன்மேல் படையெடுத்தான். விஜயநகர ராயர்களின் ஆட்சியில் சற்று அமைதி ஏற்பட்டது. முஸ்லிம் மன்னன் பாழ்படுத்திய ஸப்த கோடீசுவரர் கோயிலையும் வேறு சில கோயில்களையும் வித்தியா



சாந்தா துர்க்கை கோயில்

காப்பிரைட்; கர்மவீர் (கன்னடம்), ஹுப்ளி.

ரணியர் தாமே இருந்து புனர்நிர்மாணம் செய்து பிரதிஷ்டை செய்தார்.

வாஸ்கோ டி காமா கோவாவில் கால் வைத்தது முதல் ஆல்புகர்க்கின் தலைமையில் போர்ச்சுகீசியர் குடியேறலானார்கள். கி. பி. 1510-இல் மதமாற்றம் தொடங்கியது. சேனாதிபதிகளைவிட அதிகமாக அதிகாரம் பெற்ற மிஷனரிக் கூட்டம் தங்குதடை இல்லாமல் வந்து குவிந்தது. அவர்களுக்குள் கி. பி. 1542 முதல் 1552 வரையில் வாழ்ந்த ஸெயிண்ட் ஸேவியரைக் கிறிஸ்துவர்கள் 'மகான்' என்று அழைக்கலானார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால்தான் இவருடைய பூதவுடலை ரோமுக்கு அனுப்பினார்கள். 10 லட்சம் மக்களை மதம் மாற்றிக் கீழ் நாடுகளில் எல்லோரையும்விட இவர் அதிகப் புகழ் பெற்றார். ஏழைகளிடம் மிகுந்த இரக்கம் உள்ளவர். அதனால்தான் இவர் எண்ணம் விரைவில் கைகூடியது. நோயாளிகளுக்குப் பணிவிடை செய்தார். பல ஆஸ்பத்திரிகளை நிறுவினார். ஏழைகளுக்குப் பொருளுதவியும் செய்தார். இதனால் மதமாற்றம் வெற்றிகரமாக முடிந்தது. 1587-இல் 280 கோயில்கள் இருந்த இடத்தில் சர்ச்சுகள் தோன்றின. இருந்தாலும் ஆதி காலத்திலிருந்து இதுவரையில் ஐந்தாறு கோயில்கள் இங்கே நிலைத்திருக்கின்றன. இவை சாரஸ்வத சமூகத்தினர் வழிபடும் தெய்வங்கள் இருக்கும் இடம். கோவாவில் இருப்பதைவிடக் கோவாவுக்கு வெளியே தான் இவர்கள் அதிகமாக வசிக்கிறார்கள். வருஷத்தில் ஒருமுறை இவர்கள் இங்கே வருவது வழக்கம். இந்தச் சமூகத்தினர் வியாபாரத்திலும் பிற தொழிலிலும் முன்னேற்றம் அடைந்தவர்கள். இப்படி வரும் பக்தர்களாலும் இவர்கள் செலுத்தும் பிரார்த்தனை, கைங்கரியங்கள் முதலியவற்றாலும் இந்தக் கோயில்கள் பழம்பெருமையோடு அப்படியே இருந்து வருகின்றன.

மத்திய கோவாவில் கோண்டா என்னும் பிரதேசத்தைச் சூழ்ந்து, சாந்தா துர்க்கா, ம்ஹாளஸா, நாகேசர், ராமநாதர், மோங்கிரீசர் இவர்களுடைய கோயில்கள் இருக்கின்றன. கன்னடநாட்டுக் கோயில்கள் என்றவுடன் அவற்றின் சிற்பங்களே நினைவு வரும். இங்கே அப்படி ஒன்றும் இல்லை. மேல்பார்வைக்குச் சாதாரணமான கோயில்களே. விக்கிரகங்களும் லிங்கங்களும் சாதாரணமானவையே. வெளிக் கட்டிடங்கள் உயரமானவை. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிப் பிராகாரங்கள் இருக்கின்றன. எதிரில் முக்கிய மண்டபம் ஒன்று இருக்கிறது. அதில் 'குளோப்' புகளும் சுவர்களில் சித்திரங்களும் இருக்கின்றன.

கோயிலின் வெளிப்புறத்தில் அர்ச்சகர்கள் இருக்கும் வீடுகள் உள்ளன. இவற்றையெல்லாம் மீறி வாயிலின் முன்புறம் உயர்ந்து விளங்குபவை தீபஸ்தம்பமும் கோயிலுக்கு முன்போ, பின்புறமோ உள்ள ஒரு குளமுமாகும். எல்லாக் கோயில்களும் காரையும் கல்லும் கொண்டு கட்டியவை. அவ்வப்போது இவைகளைப் பழுது பார்க்கிறார்கள். சில கோயில்களில் இன்னும் புனருத்தாரண வேலை நடந்துகொண்டிருக்கிறது.

சாந்தா துர்க்கையின் தேவஸ்தானப் பகுதி மிகவும் விஸ்தீரணம் உள்ளது. இதன் உள் பிராகாரம் சிறியது. மற்றக் கோயிலின் தீபஸ்தம்பங்களைவிட இதன் தீபஸ்தம்பம் சற்றுப் பெரியது. மகாலக்ஷ்மி தாமோதர் கோயிலும் பிரசித்தமானது. இங்கே ஒரு தேவதாசி சபா மண்டபம் கட்டிக் கொடுத்திருக்கிறாள். நாகேசர் கோயிலின் எதிரில் விஸ்தாரமான அழகிய குளம் ஒன்று இருக்கிறது. கோவாவுக்கு அரசர் என்ற வெறும் பட்டம் மட்டும் உள்ள ஸோந்தேகர் மகாராஜா இங்கேயே வசிக்கிறார். கோயிலில் பூஜை, விசேஷ உற்சவம் இந்தச் சந்தர்ப்பங்களில் இவருக்கு விசேஷ மதிப்புக் காட்டுகிறார்கள். ராமநாதர் கோயிலும் ம்ஹாளஸா கோயிலும் புனருத்தாரண வேலைக்குப் பிறகு கண்ணைக் கவரும்படி அமைந்திருக்கின்றன. ம்ஹாளஸா கோயிலும் சாந்தா துர்க்கை கோயிலைப்போல் விசாலமாகவும் வெகு ரம்மியமாகவும் இருக்கிறது. இவை எல்லாவற்றிலும் சிறந்தது மோங்கிரீசர் கோயில். இதற்கு மூன்று கோபுரங்கள் இருக்கின்றன. வெளிப் பிராகாரமும் மிக விஸ்தாரமானது.

யாத்திரிகர் சில தினங்கள் தங்கியிருக்க ஒவ்வொரு கோயிலிலும் தகுந்த வசதி இருக்கிறது. தினசரி பூஜை தவிர, வார பூஜை, பக்ஷ பூஜை என்று விசேஷ பூஜைகள் உண்டு. இங்கே இருக்கும் அர்ச்சகர்கள் கொடுத்த அளவில் திருப்தி அடைகிறார்கள். இது அவர்கள் சௌகரியத்தையும் பக்தியின் மகிமையையும் பொறுத்தது என்பது இவர்கள் கருத்து. ஒவ்வொரு கோயிலும் ஒரு சமஸ்தானம் என்று சொல்லும் அளவுக்கு அவைகளுக்கு ஜமீன்களும் சொத்தும் ஏராளமாக உண்டு. கோவா சர்க்காரே தேவஸ்தானப் பஞ்சாயத்துக் கமிட்டியை நியமிக்கிறார்கள். இப்போதும் தேவதாசிகள் கோயிலில் சேவை செய்து வருகிறார்கள்.

கோவா, காடு மலைகள் நிரம்பிய பிரதேசம். சமுத்திரத்தை ஒட்டியது. உணவுப் பொருள்களுக்கும் நூல் துணிகளுக்கும் விலை அதிகம். ஆனால் அயல்நாட்டுப் பொருள்கள் இங்கே வெகு மலிவாகக் கிடைக்கும். கோவாவிலிருந்து அயல் நாடுகளுக்கு மாங்கனீஸ் ஏற்றுமதியாகிறது. மார்மகோவா துறைமுகத்தில் எப்போதும் சரக்குக் கப்பல்கள் காத்துக் கொண்டிருக்கும்.

இங்கே நகரங்கள் அதிகமில்லை. அவை சுத்தமாகவும் கச்சிதமாகவும் இருக்கின்றன. கோவாவின் தலைநகர் கோவா அல்ல; பணஜி என்னும் நகரமே. இங்கேதான் கோவாவின் ரேடியோ நிலையம் இருக்கிறது; கவர்னர் இருக்கிறார்.

பணஜி, கோவா இரண்டுக்கும் இயற்கைத் துறைமுகங்கள் அமைந்திருக்கின்றன. இதனால் கோவாவுக்குத் தலைநகரம் போன்ற மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. கோவாவின் விமான தளமும் இயற்கைத்தாய் அமைத்துக் கொடுத்ததே. கோவாவை அடுத்த வாஸ்கோ நகரம் மிகவும் அழகானது. மடகாம்வ, ம்ஹாபஸே என்னும் ஊர்கள் சிறந்த வியாபார ஸ்தலங்கள்.

ஜனத்தொகை சுமார் 5 லட்சம். அதில் நூற்றுக்கு 60 வீதம் கிறிஸ்தவ மதத்தினர் இருக்கிறார்கள். பாஷை கொங்கணி.

புயலை விரட்டிய புயல்

★

இதற்கு முன்னும் பின்னும் விஞ்ஞானிகள் இந்தமாதிரி ஆச்சரியத்தைக் கண்டதில்லை. ஒரு தீவுக்கு வந்த பேராபத்து யாரும் எதிர்பாராத முறையில் விலகிய விந்தையான இந்தக் கட்டுரைக்கு ஆதாரம் எர்னேஸ்ட் பெஹ்ரெண்ட் என்பவர் தந்துள்ள விவரம்.

சென்ற வருஷம் ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் இந்த மூன்று வல்லரசுத் தலைவர்களின் சந்திப்புச் சம்பந்தமாகத் தடபுடல்பட்டதே; அந்தப் பெர்முடா தீவைப்பற்றி நண்பர்களுக்கு ஞாபகம் இருக்கலாம். அங்கே 1951-ஆகஸ்டில் மற்றோர் ஆச்சரிய சம்பவம் நேரிட்டது. அதுமட்டும் வேறு விதமாக முடிந்திருந்தால், விபரீதமாகப் போயிருக்கும்; உலகமெல்லாம் பறக்கும் துயரச் செய்திகளில் ஒன்றாக இருந்திருக்கும். அந்தத் தீவின் மக்கள் கதி கலங்கிக்கொண்டிருந்த சமயத்தில், கடைசி நிமிஷத்தில், ஏதோ தெய்விக உதவி போல, இயற்கைச் சக்திகள் ஒன்றுடன் ஒன்று போராடி அவர்களைக் காப்பாற்றிவிட்டன.

இரண்டு பெரும் புயல்கள் ஒன்றையொன்று மோதிய அந்த அரிய நிகழ்ச்சியை விஞ்ஞான சாதனங்களைக் கொண்டு ஆராய்ந்து குறித்திருக்கிறார்கள். விஞ்ஞானிகள் அறிந்தமட்டில் இப்படி இரண்டு புயல்கள் மோதிய சம்பவம் உலகத்தில் இதுவே முதலாவதாம்.

அட்லாண்டிக் கடலில் பெர்முடா தீவுக்கு 4,000 மைலுக்கு அப்பால் ஆப்பிரிக்கக் கடற்கரையோரத்தில் கேப் வெர்டி என்ற தீவுக்கு அருகே இரண்டு சூறாவளிகள் பிறந்து சுழன்று சுழன்று வர வர வளர்ந்து பயங்கரப் புயல்களாக மாறின. இந்த மாதிரி புயல்களுக்கு அமெரிக்க வானிலை ஆராய்ச்சி இலாகாதார் தனித்தனியே பெயர் சூட்டிவிடுவது வழக்கம். அப்படியே அவர்கள் இந்தப் புயல்களில் ஒன்றுக்கு 'எளியோன்' (ஈஸி) என்றும் மற்றொன்றுக்குக் 'குள்ளநரி' (ஃபாக்ஸ்) என்றும் பெயர் வைத்தார்கள்.

நடுக்கடலில் சூறாவளிகள் எப்படிப் பிறக்கின்றன என்பதை இங்கே கொஞ்சம் கவனிக்க வேண்டும். ஒரே ஜலமயமாகப் பரந்து கிடக்கும் கடல்மீது சூரியனின் உக்கிரமான கதிர்கள் பாய்ந்துகொண்டே இருக்கின்றன. அப்போது தண்ணீர் வெதுவெதுப்பான நிலையை அடைகிறது. அதற்கு மேலே உள்ள காற்று நல்ல உஷ்ணம் அடைகிறது. அதோடு அந்தக் காற்றில் நீர்

அணுக்களும் பரவிக் கிடக்கின்றன. இந்த நிலையில் எங்கேயாவது ஓரிடத்தில், உஷ்ணக் காற்று ஒரு கம்பம் போல் மேல்நோக்கி எழுகிறது. பூமி சுழலும் சக்தியால் அந்தக் காற்றுக் கம்பம் திருகாணிபோல் மெல்ல மெல்லச் சுழல ஆரம்பிக்கிறது. இந்தச் சிறு சுழல் காற்றை, அங்கே வீசிக்கொண்டிருக்கும் மற்றொரு சாதாரணக் காற்று, அப்படியே அடித்து வீழ்த்திவிடக் கூடும்; அல்லது தானாகவே இது நிலை தவறித் தள்ளாடி விழுந்துவிடக் கூடும்.



ரேடார் கருவியில், 'புயலின் கண்' தோன்றும் தோற்றம் இதுதான்.

இந்த இரண்டும் இல்லாமல், இதன் வளர்ச்சி குன்றி, சிறிது தண்ணீரை மட்டும் ஒரு சிறு தூண் போல் எழும்பி விழச் செய்வதோடு இது மாய்ந்துவிடலாம். இப்படியெல்லாம் அழியாமல் ஒரு சூறாவளிக் காற்றாக இது விசுவரூபம் எடுத்துவிடுவதும் உண்டு.

'எளியோன்' இப்படித்தான் ஒரு நாள் பயங்கரப் பேய்க்கோலம் எடுக்கத் தொடங்கியது. கடல் நடுவே மேக படலங்களைச் சேர்த்துத் திருகி முறுக்கிக்கொண்டே ஒரு பெருந்தூண் எழுந்தது. அதன் உயரம் சுமார் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் அடி வரையில் இருக்கும். அதன் குறுக்களவு ஏதோ சில மைல்தான் இருக்கும். பெரும் புயலுக்கு அவசியம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்களே, அந்த அங்கங்களெல்லாம் 'எளியோனு'க்கு இல்லை. பலமாய் வீசும் காற்று, கொட்டும் மழை, பேரலை வீச்சு இந்த எதுவும் அதற்கு இல்லை. என்றாலும், எந்தப் புயலையும் மகாபயங்கரமானதாக உருவெடுக்கச் செய்யும் ஒரே ஓர் அம்சம் மட்டில் அதற்கு இருந்தது. ஒரேயடியாய்க் குவிந்து ஒரு முனைப்பட்டு, அது மேல் நோக்கி எழுந்தது. இந்த 'எளியோனோ'டு வேறு இரண்டொரு சூறாவளிகளும் ஒரு வேளை வந்து சேர்ந்துகொண்டிருக்கலாம். சூறாவளிகளுக்கு நடு மத்தியிலே, பலத்த தூண் ஒன்று உருவாகும். அதைப் 'புயலின் கண்' (ஐ அவ் தி ஹார்ரிகேன்) என்று சொல்லுவார்கள். அப்படிப்பட்ட இருதய ஸ்தானமான அங்கம் 'எளியோனு'க்கு ஏற்பட்டுவிட்டது.

புகைக் கூண்டு வழியாய்க் கிளம்பும் புகைபோல, நீரணுக்கள் நிறைந்த வாயு, இந்தப் 'புயலின்

கண்' என்ற தூண் வழியே அதி வேகமாக மேல்நோக்கிப் பாய்ந்தது. தூண் உயர உயர, இந்த வாயுப் பாய்ச்சல் மேலும் மேலும் பலமாயிற்று; தூண்வழியே இந்த நீராவி வாயுவைப் பாய்ச்சிய காற்றின் ஓலமும் அதிகரித்தது. வீசியடித்த பெருங்காற்றுக்கள் கடலைக் கடைந்தன. சாதாரண அலைகளெல்லாம் பேரலைகளாய் உருவெடுத்து, நூறடி உயரம் சுவர்கள் போல் விம்மி எழுந்து சொடேர் என்று விழுந்தன.

சூறாவளித் தூண் இப்படிப் பல மைல் உயரத்துக்குக் கடலின்மேல் எழுந்தது; அப்போது மேலே உள்ள கனமான குளிர் காற்றுப் படலம் சும்மா இருக்குமா? அது இந்தத் தூணைக் கீழே அழுத்தியது. தூணின் சிகரக் கூர்மை நீங்கித் தட்டையாயிற்று. உடனே சூறாவளித் தூண் ஒரு காளான் குடை உருவம் பெற்றது; மண்ணெண்ணெய் முதலியவைகளை ஊற்ற உபயோகிக்கிறோமே, அந்தப் 'புனல்' போல் குழிந்தது. மேலே ஆகாயத்திலிருந்து அப்போது 'எளியோனை'ப் பார்த்திருந்தால், ஏதோ ஒரு கிராமபோன் பிளேட்மாதிரி தட்டையாய் அது சுழன்றுகொண்டிருந்ததைக் கண்டிருப்போம். கிராமபோன் பிளேட் நடுவே உள்ள துவாரம்மாதிரி அதன் 'கண்' தென்பட்டிருக்கும். அங்கே வெப்பக் காற்றும் குளிர் காற்றும் நெருங்கி அமுக்கியதால், நீராவிக்கள் இறுகி மழையாகப் பொழியத் தொடங்கின. இதிலிருந்து சோ என்று தொடர்ச்சியாகப் பெரு மழை பல நாள் வரைக்கும் கொட்டிக்கொண்டே யிருந்தது.

தன் 'கண்'ணில் உள்ள நீரைப் பிழிந்து வெளியே வீசிய உடனே, சூறாவளி பின்னும் வேகமாகச் சுழன்றது. அதோடு பிரயாணம் செய்யவும் கிளம்பிவிட்டது. வழி நெடுகலும் முன்போலவே வெப்ப நீர்க்காற்றை உறிஞ்சுவதும், அதை மழையாகப் பிழிந்து தள்ளுவதுமாய், 'எளியோன்' மேலும் மேலும் வலுப்பட்டுக்கொண்டே வந்தது. முதலில் சாதாரண வேகத்தில் தான் பிரயாணத்தை ஆரம்பித்தது. மணி ஒன்றுக்குச் சுமார் 10 முதல் 12 மைல் விகிதம் இருக்கலாம். எந்தச் சூறாவளியுமே வேகமாய் ஓடுவதில்லை. ஆனால், அதன் மையத்தைச் சுற்றிலும் எழும் காற்றுக்கள்தான் சண்டமாருதமாய் மிக வேகத்துடன் வீசும். 'எளியோனி'ன் இந்த ஆரம்ப நிலையிலேயே, அதைச் சுற்றிலும் எழுந்து வீசிய காற்றுக்கள் மணிக்கு 150 மைல் வேகத்தில் பாய்ந்திருக்க வேண்டும்.

'எளியோன்' ஏறக் குறைய ஆயிரம் மைல் தூரம் போன பிறகு, இது எங்கே புறப்பட்டதோ அதே கேப் வெர்டி தீவுக்கருகே மற்றொரு சூறாவளி பிறந்தது. அது தான் 'குள்ளநரி'.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஃப்ளாரிடா மாகாணத்துக்கு அப்பால் சமுத்திரத்தில் 2,500 மைல் தூரத்தில் 'எளியோன்' இருக்கும்போததான், முதல் முதலாக அமெரிக்க வானிலை அதிகாரிகள் அதைக் கண்டார்கள். அப்போது அது 500 மைல் அகலம் இருந்தது. 'மகா மோசமான சூறாவளி; பெரு நாசம் விளைவிக்கக் கூடியது; மூன்று அல்லது நான்கு வருஷங்களுக்கு ஒரு முறை வீசக் கூடிய பயங்கரப் புயல்' - இப்படியெல்லாம் அதைப் பற்றிச் சொல்லிக்கொண்டார்

கள். பெர்முடா தீவில் நிரந்தரமாய் வசிப்பவர்களும் உல்லாசத்துக்காக வந்து தங்கியவர்களுமான 37 ஆயிரம் மக்கள் என்ன ஆபத்து நேரப்போகிறதோ என்று நடுநடுங்கிக்கொண் டிருந்தார்கள். "இந்தச் சூறவளியின் முன்னே அணுகுண்டை வெடித்து விடலாமே; அப்படி வெடித்தால், இது வழி மாறித் திரும்பிவிடும்" என்று யோசனை சொன்னுர்கள் சிலர். ஆனல் புயலுக்கு முன் ஓர் அணுகுண்டை வெடிப்பதால், பயன் ஒன்றும் ஏற்படாது. நூற்றுக்கணக்கான அணுகுண்டுகளின் சக்தியைக் கொண்ட அது ஒரே ஓர் அணுகுண்டு வெடியால் நிலைகுலையாது.

'எளியோனை'ப்பற்றிய சகல தகவல்களையும் அறிய வேண்டியது அவசியமாகிவிட்டது; அதன் போக்கைப்பற்றி ஜனங்களுக்கு அப்போதைக்கப்போது எச்சரிக்கை செய்தாகவேண்டும். இதற்காக அநுபவம் மிகுந்த வானிலை ஆராய்ச்சிக்காரர்கள் சிலர், ஒரு விமானத்தின் மீதேறி 'எளியோனை'ப் பின்தொடரச் சென்றுர்கள். இதுதான் இந்தமாதிரி நிலையில் எப்போதுமே அதிகாரிகள் கடைப்பிடிக்கும் வழக்கமான முறை. மணிக்கு மணி காற்றின் வேகம், அது செல்லும் திசை, மழை, ஆகாய அழுத்தம் (பாரொமெட்ரிக் ப்ரஷர்) இவைகளையெல்லாம் கவனித்து ரேடியோ மூலம் ஊருக்குச் செய்திகள் அனுப்புவது அந்த அதிகாரிகளின் வேலை.

'எளியோனை' ஆராயப் புறப்பட்டது நாலு எஞ்சின் கொண்ட ஒரு விமானம். ஆயிரம் அடி உயரத்தில் புயலைக் குடைந்து உள்ளே புகுந்தது. அலைகளின் மோஸ்தரையும், காற்றின் வேகத்தையும் திசையையும் அதிகாரிகள் கவனித்துக்கொண்டே போனுர்கள். புயலின் ஓரத்தை அடையும்போது அலைகளின்மீது 'வெள்ளைக் குல்லாய்' (வெண்மையான நுரை) தோன்றியது. அங்கே காற்றின் வேகம் மணி ஒன்றுக்குச் சுமார் 30 முதல் 35 மைலுக்குள் இருக்கும் என்றுதான் இதற்கு அர்த்தம். இன்னும் சற்று உள்ளே புகுந்தபோது, வெண்ணுரைமீது பச்சைப் புள்ளிகள் தோன்றின; வேகம் 40 மைல். அப்புறம் பச்சைப் புள்ளிகள் பெரிதாயின; வேகம் 60 அல்லது 65 மைல். பிறகு, அலைகளுக்குக் குறுக்கே வெள்ளைப் பட்டைகள்; வேகம் 80 அல்லது 90 அல்லது 100 மைல். கடைசியில் சமுத்திர நீரே பால் கடல் போல் ஒரே வெள்ளை யாகிவிட்டது; வேகம் 125 மைல்.

அம்புகள் வந்து பாய்வதுபோல் பெரு மழை, விமானத்தைத் தாக்கிக்கொண்டிருந்தது. நட்ட நடுப் பகலில் ஒரேயடியாய் இருள் திரண்டு மூடியது. காற்றின் வேகம் 130 மைல். இன்னும் அப்பால் 'கொறடு'கள் (ப்ராங்ஸ்) தோன்றின; அதாவது, திருகாணிபோல் முறுக்கிக்கொண்ட காற்றுக்கள் சுழன்று சுழன்று மையத்தை நோக்கிக் குவிந்தன; இதற்கு மேலே கண்ணுக்கே ஒன்றும் தெரியாது என்ற நிலை ஏற்பட்டது; வேகம் 140 மைல். வெகு சிரமப்பட்டு விமானம் தன்னைத் தானே சமாளித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அதிகாரிகளில் சிலர் நோயுற்றவர்போல் கறங்கிப் போனுர்கள்; வேகம் 150 மைல். குறும்புத்தனமான காற்றுக்கள் செங்குத்

தாய்க் கிளம்பி விமானத்தை அம்மானை ஆடுவதுபோல் மேல் நோக்கி உந்துவதும், பிறகு கீழே பயங்கரமாய்த் திரைத்து விழும் 100 அடி உயரப் பேரலைகளை நோக்கித் தள்ளுவதுமாயிருந்தன. 'எளியோன்'மெல்ல மெல்ல இப்படி விமானத்தைக் கடித்து விழுங்க முயன்றுகொண்டிருந்தபோது, 'ரேடார் ஆப்பரேட்டர்' ஐந்து நிமிஷத்துக்கு ஒரு தடவை புயலின் திசையையும் வேகத்தையும் பற்றிய தகவல்களைக் கணித்துத் தெரிவித்துக்கொண்டிருந்தார்.

"வேகம் 160 மைல்" என்று ரேடார் அதிகாரி தெரிவித்தவுடனே, விமானத்தில் உள்ளவர்களெல்லாம் கலங்கிவிட்டார்கள். "இனி விமானம் சாயாமல் சமாளித்துக்கொள்ளுவது எது!" என்று அத்தனை பேரும் நடுங்கினார்கள். ஆனால், புயலின் வேகம் இதோடு நின்றதா? அதுதான் இல்லை. யாரும் நம்பவே முடியாதபடி, "வேகம் 175 மைல்" என்றார் ரேடார் ஆப்பரேட்டர். இப்போது சூறாவளியின் நடுமையப்பகுதியான 'கண்'ணுக்கு 15-மைல் தூரத்தில் சென்றுவிட்டது விமானம். அங்கே அமைதியாய்த்தான் இருக்கும். ஆனால், அதை நெருங்காமலே, புயலிடம் விமானம் விடை பெற்று வெளியேற வேண்டியதாயிற்று. இப்படி வெளியேறியதால்தான், விமான அதிகாரிகள் உயிர் தப்பினார்கள். தவிர, 'புயலின் கண்'ணைச் சுற்றிலும் கோட்டை வளையம்போல் நீரும் காற்றும் சேர்ந்து அமைந்த கெட்டிச் சுவரை விமானம் தொளைத்துப் புகுந்திருக்கவே முடியாது.

ஃப்ளாரிடா கடற்கரையில் வசித்த மக்களெல்லாம் திகில் அடைந்துவிட்டார்கள். (இதற்கு முன்னே டெக்ஸாஸ் மாகாணத்தைச் சேர்ந்த கால்வெஸ்டன் என்ற இடத்தில் 1900-இல் ஒரு பெரும் புயல் அடித்தது. அதன் வேகம் மணிக்குத் தொண்ணூறு மைல்தான். அதுவே 6,000 பேரைக் கொன்றுவிட்டது. இந்த 175-மைல் வேகப் புயல் என்ன அட்டூழியங்கள் புரியுமோ, அதைக் கற்பனை செய்ய முடியவில்லை.)

ஃப்ளாரிடா கடற்கரை மக்கள் 'குள்ள நரி'யைப்பற்றியும் இப்போது கவலைப்படத் தொடங்கினார்கள். 'எளியோனு'க்குப் பின்னால் 1,000 மைல் தூரத்தில், குள்ள நரியும் பிரயாணம் செய்யக் கிளம்பிவிட்டது.

இந்தச் சமயத்தில் என்னவோ ஃப்ளாரிடா மக்களின் அதிருஷ்டவசமாக 'எளியோன்' திடீரென்று திசை திரும்பியது. போர்ட்டோ ரிகோ தீவுக்கு வடபக்கத்தை அடைந்ததும், மேற்கு முகமான பிரயாணத்தை விட்டு, வடக்கு முகமாகச் செல்லத் தொடங்கியது. இனி அது பெர்முடா தீவைத்தான் அடைந்து நிர்த்தூளி செய்யப் போகிறது என்று வானிலை நிபுணர்கள் நிச்சயமாய்க் கணக்கிட்டுவிட்டார்கள்.

பன்னிரண்டு மணி நேரத்துக்குப் பிறகு, இதே போர்ட்டோ ரிகோ தீவுக்கு வடக்கே 'குள்ள நரி'யும் அதிவேகமாய் வந்து சேர்ந்தது. என்ன காரணமோ, அதுவும் இதே இடத்திலிருந்து வடக்குமுகமாகப் பெர்முடா தீவை நோக்கித் திரும்பியது. வன விலங்கின் சுவட்டை மோப்பம் பிடித்துச் செல்லும் வேட்டை

நாய்போல, 'எளியோன்' சென்ற பாதையிலேயே 'குள்ள நரி'யும் சென்றது.

பெர்முடா தீவின் மக்கள் இந்தக் 'குள்ள நரி'யைப்பற்றிக் கவலைப்படவேயில்லை. அவர்கள் கவலையெல்லாம் எளியோனைப் பற்றியே சென்றது. கடலில் சென்ற கப்பல்கள் புயலின் பாதையை விட்டு விலகி ஓடின. ஐக்கிய அமெரிக்காவின் விமானப் படையைச் சேர்ந்த சில விமானங்கள் பெர்முடா தீவில் இருந்தன. அவைகளெல்லாம் முன்னெச்சரிக்கையாக அங்கிருந்து ஓட்டம் பிடித்துவிட்டன. மக்களெல்லாம் ஓட்டல்கள், வீடுகள், கடைகள் இவைகளை விட்டு வெளியே தலை காட்டாமல் பதுங்கிக்கொண்டார்கள். இப்போது 200 மைல் வேகத்தில் வரும் புயலுக்கு எதிராக இதெல்லாம் ஒரு பாதுகாப்பாகுமா!

செப்டம்பர் மீ 8-ஆம் தேதி பாரோமீட்டர் காட்டும் ஆகாய அழுத்தம் வெகு வேகமாகக் கீழே இறங்கியது. 'எளியோன்' என்ற பயங்கரப் புயல் இன்னும் 24-மணி நேரத்தில் கரையை எட்டிவிடக் கூடிய தூரத்தில் வந்துவிட்டது. ஆபத்து நிச்சயம் என்று தோன்றியது. இந்த வேளையில் புதிய செய்தி அறிக்கை ஒன்று வந்து சேர்ந்தது: "குழந்தைப் புயல் பெரிய புயலை மோதுவதற்காக வேகமாய் வந்து கொண்டிருக்கிறது."

குழந்தைப் புயல் என்றது 'குள்ள நரி'யைத்தான். 'எளியோன்' மாதிரி இல்லையென்றாலும், அதுவும் ஒரு பயங்கரப் பேய்தான். சில மணி நேரத்துக்குள் இரண்டும் மோதக்கூடிய தூரத்தில் 'குள்ள நரி' வந்துவிட்டது. பெர்முடா மக்களின் பரபரப்பு இன்னும் அதிகரித்தது. "இரண்டும் மோதுமா? அப்படியென்றால் என்ன? உண்மையிலேயே புயல்கள் ஒன்றை ஒன்று மோதுமா? மோதினால் என்ன ஆகும்? பெரிய புயலுக்குச் சின்னப் புயலின் பலமும் சேர்ந்துவிடுமா? 'எளியோனி'ன் 200 மைல் வேகத்தோடு 'குள்ள நரி'யின் 120 மைல் வேகமும் கூடிவிடுமோ?" - இப்படியெல்லாம் பல சந்தேகங்கள் எழுந்தன.

வானிலை ஆராய்ச்சி நிபுணர்கள் ஆச்சரியமான ஹேஷ்யம் ஒன்று சொன்னார்கள். இதற்கு முன் இரண்டு புயல்கள் மோதியதுபற்றிய ஆதாரம் எதுவும் அவர்களிடம் இல்லை. ஆனால், காரண காரிய ரீதியில் அவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். சூறாவளிகளும் பம்பரங்கள் மாதிரியே சுற்றுகின்றன. ஒரே திசையில் சுற்றும் இரண்டு பம்பரங்கள் ஒன்றை ஒன்று மோதினால் என்ன ஆகிறது? ஒன்றுக்கொன்று எதிரிடையான திசைகளில் அவைகள் திரும்பிவிடுகின்றன. இதேபோலத்தான் இந்தச் சூறாவளிகளும் மோதியவுடன் திசை திரும்பிவிடும் என்று வானிலை ஆராய்ச்சி நிபுணர்கள் கருதினார்கள்.

செப்டம்பர் 9-ஆம் தேதி அதிகாலையில் 'எளியோனி'ன் காற்றுக்கள் மூர்க்கமாகப் பெர்முடா தீவில் மோதத் தொடங்கின. காலையில் மணி 5 இருக்கும். கரையைத் தாக்கிய காற்றின் வேகம் மணிக்கு 45 முதல் 50 மைல் வரை இருக்கும். இது உண்மையான புயல் அல்ல. மணிக்கு 75 மைல் வேகத்தைத்

தான் 'புயலின் ஆரம்பம்' என்று சொல்லலாம். கூடிய சீக்கிரம் அவ்வளவு வேகமான காற்று வந்துவிடும் என்றே எல்லாரும் எதிர்பார்த்தார்கள். அவ்வளவு வேகமுள்ள காற்று இப்போது கரைக்குப் பத்து மைல் தூரத்திலேதான் இருக்கிறது. அதற்கப்புறம் கடைசியாக 200 மைல் வேகமுள்ள காற்றும் நிச்சயமாக வரத்தான் போகிறது என்று மக்கள் பயந்தார்கள். "அப்போது எத்தனை பேர் சாகப் போகிறார்களோ! என்ன அழிவு நேரப் போகிறதோ!" - இப்படியெல்லாம் பயம் எழுந்தது.

ஆனால், இதே ஐந்து மணி வேளையில் 'எளியோனை'க் 'குள்ள நரி' எட்டிப் பிடித்துவிட்டது. 4,000 மைல் தூரத்தில் தொடங்கிய வேட்டைப் பாய்ச்சல், பெர்முடா தீவின் நுழைவாயிலில் முற்றுப் பெற்றது. 'குள்ள நரி'யும் 'எளியோ'னும் ஒன்றையொன்று குடுமியைப் பிடித்துக்கொள்ள மோதின. மக்கள் பயந்ததுபோல அவை இரண்டும் ஒன்றாக ஐக்கியப்படவில்லை. இரண்டும் உறுமின; மோதின; சுழன்றன; பயங்கர நர்த்தனம் புரிந்தன. பிறகு 'குள்ள நரி' வட கிழக்குத் திசையில் திரும்பிவிட்டது; 'எளியோன்' வடமேற்கே அரை வட்டமாகத் திரும்பியது. இந்த இரண்டும் பிரிந்த கவைக்கு இடையிலே பெர்முடா தீவு அபாயம் நீங்கிப் பத்திரமாய்த் தப்பியது.

பெரிய புயலின் பேரபாயத்திலிருந்து பெர்முடா தீவைச் சிறிய புயல் தப்புவித்துக் காப்பாற்றியது! மனித சக்தியால் தடுக்க முடியாத பேராபத்திலிருந்து, ஏதோ தெய்வ சக்திதான் தங்களைக் காப்பாற்றியது என்று பல மக்கள் எண்ணினார்கள். "ஆண்டவனே, நீதான் காப்பாற்ற வேண்டும்" என்று எத்தனை எத்தனையோ மக்கள் பிரார்த்தனை புரிந்திருப்பார்கள். அவர்களெல்லாம் தங்கள் பிரார்த்தனை பலித்தது என்று நிச்சயமாய் நம்பியிருப்பார்கள்.

பெர்முடாவில் காற்றுப் பிசுபிசுத்தது; மழை சிறு தூற்றலாக நலிந்தது. தீவு பிழைத்தது. ஆனால் 'எளியோனு'ம் 'குள்ள நரி'யும் என்ன ஆயின? சில தினங்களுக்குள்ளே அவை அடியோடு மெலிந்து மறைந்து போயின.

சங்கீத வெறுப்பு

எனக்குச் சங்கீதம் என்றாலே பிடிக்கவில்லை. இந்த விஷயத்தில் என் சகோதரன் ஒரு டாக்ஸி டிரைவர். ஒரு நாள் இரண்டு பேர் சங்கீத வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு அவன் காருக்கு ஓடி வந்தார்கள்.

"சீக்கிரம். எங்களை ரேடியோ ஆபீஸுக்கு ஏற்றிச் செல்" என்றார்கள்.

இவர்களை டிரைவர் ஏற இறங்கப் பார்த்தான். "ரேடியோவில் தினம் வாத்திய இசை பொழிவது நீங்கள்தானா?" என்று அவன் கேட்டான்.

"ஆமாம்."

"அப்படியா? அப்படியானால், வண்டி என்ன உங்களுக்கு, வண்டி? நடவுங்கள்."

—ஃப்ரெட் ப்ளாக்பர்ன், எம். பி., லண்டன்.

கம்பர் கண்ட கனவு

ரா. ஸ்ரீ. தேசிகன்

மண்ணுலக வாழ்விலே அழகும் இன்பமும் வளமும் பெருக வேண்டும் என்பதற்காக, தத்துவதரிசிகளும் கவிகளும் பெரியோரும் கற்பனை செய்த சித்திரங்களைத் தொடர்ச்சியாக 'மஞ்சரி'யில் இந்த ஆசிரியர் எழுதிவருகிறார்.

நம் தமிழ் இலக்கிய உலகத்தில் கால அலைகளுக்கு மேல் நிமிர்ந்து நிற்கிற மூன்று சிகரங்கள் உண்டு. திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் இவர்கள்தான் அந்தச் சிகரங்களாவார்கள். இவர்களைப்பற்றி மிகவும் சிறப்பித்துக் கூறும் பாரதியாரின் அழியா அடிகள் நோக்கத் தகுந்தவை:

> கல்வி சிறந்த
> தமிழ் நாடு—புகழ்க்
> கம்பன் பிறந்த
> தமிழ் நாடு—நல்ல
> பல்வித மாயின
> சாத்திரத்தின்—மணம்
> பாரெங்கும் வீசும்
> தமிழ் நாடு.
> வள்ளுவன் தன்னை
> உலகினுக்கே—தந்து
> வான்புகழ் கொண்ட
> தமிழ் நாடு—நெஞ்சை
> அள்ளும் சிலப்பதி
> காரமென்றோர்—மணி
> யாரம் படைத்த
> தமிழ் நாடு.
> யாமறிந்த மொழிகளிலே
> தமிழ் மொழிபோல்
> இனிதாவ
> தெங்கும் காணோம்;
> யாமறிந்த புலவரிலே
> கம்பனைப் போல்
> வள்ளுவர் போல்
> இளங்கோ வைப்போல்
> பூமிதனில் யாங்கணுமே
> பிறந்த தில்லை;
> உண்மை, வெறும்
> புகழ்ச்சி யில்லை

என்று பாஷைப் பற்று நறவைப் பருகிப் பாரதியார் மெய்மறந்து மிகைபட மொழிந்தபோதிலும், நம் தமிழ் இலக்கிய சாம்ராஜ்யத்தில் வள்ளுவர், இளங்கோ, கம்பர் இவர்கள் அரசு செலுத்துகிறார்கள் என்ற பேருண்மையை மறுக்க முடியாது. கம்பரைப் பற்றித்தான் முதல்முதலில் பாரதியார் கூறுகிறார். இது கம்பர்பால் பாரதியாருக்கு இருந்த அபிமானத்தையும் கௌரவத்தையும் காட்டுகிறதில்லையா?

இந்தக் கம்பர் சோழவள நாட்டிலுள்ள தேரழுந்தூரில் உவச்சர் குலத்தில் பிறந்தவர் என்று தெரிகிறது. கம்பர் என்ற

திருநாமம் சிவபிரானுடைய பெயராகும். இந்தச் சொல் 'ஸ்தாணு' என்ற வடசொல்லின் மொழி பெயர்ப்பாக இருக்கலாம். பிறப்பிலே சைவரா யிருந்தபோதிலும் கொள்கையில் வைணவரா யிருக்க வேண்டும். திருவெண்ணெய்நல்லூரில் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் இவர். இந்த ஊர் திருக்கோவலூரின் பக்கத்திலுள்ள திருவெண்ணெய் நல்லூரா? அல்லது தஞ்சை ஜில்லாவில் உள்ள நல்லூரா? ஒன்றும் முடிவுறக் கூறுவதற்கு இயலாது.

இவர் இருந்த காலம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். படிப்பிலேயும் சரி, சொல்லின் காம்பீரியத்திலும் சரி, இவர் மேல்நாட்டு மில்டனுக்கு நிகராக இருக்கிறார் என்று ஐயமின்றிச் சாற்றலாம். இவர் சொல்லின் செல்வர்தான். வடமொழியிலும் தென் மொழியிலும் மிகத் தோய்ந்தவர். 'தென்சொற் கடந்தான்; வடசொற் கடற் கெல்லை தேர்ந்தான்' என்ற சொல்தொடர் இவருக்கே மிகவும் பொருந்தும்.

விழுந்த ஞாயிற
தெழுவதன் முன்மறை
வேதிய ருடனாராய்ந்து
எழுந்த ஞாயிறு
விழுவதன் முன்கவி
பாடின தெழுநூறே.

நாளைக்கு எழுநூறு வீதம் பாடி ராமாயணத்தைப் பதினைந்து நாட்களில் முடித்தார் என்று கூறும் பாட்டில் உண்மை இல்லை என்று சொல்லிவிடலாம். "வேதியருடன் ஆராய வேண்டியதில்லை. கம்பருக்கே பழுத்த வடமொழி ஞானம் இருந்திருக்க வேண்டும்" என்று என் நண்பர் 'மாசூரார்' 'கம்பர் கையாண்ட விருத்தங்கள்' என்ற கட்டுரையில் மிகவும் தெளிவாய்த் தக்க சான்றுகளுடன் கூறியுள்ளார். ராமாயணத்தை இவர் பாடப் பதினைந்து நாட்கள் அல்ல, பதினைந்து ஆண்டுகள் பிடித்திருக்கும். ஏன், வாழ்நாள் முழுவதையுமே அதில் இவர் போக்கியிருக்க வேண்டும். 'சடகோபரந்தாதி', 'ஏரெழுபது', 'சிலை யெழுபது', 'திருக்கை வழக்கம்', 'சரசுவதி யந்தாதி' முதலிய நூல்கள் இவர் பாடியுள்ளவை என்று மொழிகிறார்கள். 'சடகோபரந்தாதி' இவர் பாடியதல்ல என்று ஒரு சாரார் கூறுவர். மற்றொரு சாரார் இந்த அழகான அந்தாதியை வேறு எவரும் பாடியிருக்க முடியாது என்று அழுத்தமாய்ச் சாற்றுவர்.

'இரணியவதைப் படல'த்தை முதல் முதலில் இவர் பாடியிருக்க வேண்டும். அதைப் பாடுகிற பொழுது தம் உள்ளத்தில் கரந்து ஓடின கவிதா சக்தி வெள்ளத்தைக் கம்பர் முதலில் அறிந்திருக்க வேண்டும். இந்தப் படலத்தை விட்டுவிட இவருக்கு விருப்பமில்லை போலும்! ராமாயணத்தில் பொருத்தமில்லாமல், அது துண்டாய் நிற்கிற செய்தியை ரசிகர்கள் நன்குணர்வார்கள்.

கம்பரைப் படித்தோமானால், அவருக்கு முன்பு இருந்த நூல்களைப் படித்த பயனைப் பெறுவோம் என்பதில் ஐயமில்லை. சங்க காலத்து இலக்கியங்களின் நயங்களை இவர் பருகியவர். ஆழ்வார்கள், நாயன்மார்களுடைய பாசுரங்களில் இவர் ஆழ்ந்தவர் என்பது நன்கு விளங்குகிறது. திருமங்கை மன்னன், நம்மாழ்வார் இவர்களுடைய பாடல்களின் அடிகளைத் தம் நூலில்

இவர் நுழைத்துவிட்டார். திருவள்ளுவரின் குறளடிகள் இவருடைய நூலில் இழைந்திருக்கின்றன. பெருங்கதையிலுள்ள சந்தர்ப்பங்கள் இவருக்குப் பயன்பட்டிருக்கின்றன. விருத்தத்தில் காப்பியம் அமைக்க முடியும் என்பதைத் திருத்தக்கதேவர் 'சிந்தாமணி'யில் காட்டிவிட்டார். அவருடைய சுவட்டைத்தான் இவர் பின்பற்றுகிறார். ஆனால் கம்பர் சொல்லின் பேரொளி முன் 'சீவகசிந்தாமணி'யின் சோபை மங்கத்தான் மங்குகிறது. 'சீவக சிந்தாமணி'யின் சொற்றொடர்கள் கம்பரில் மிளிர்கின்றன. காளிதாசனையும் சில இடங்களில் இவர் பின்பற்றுகிறார். சாகுந்தலத்தில் காணப்படும் சில அடிகள் கம்பரில் மொழிபெயர்ப்புக்களாய்த் திகழ்கின்றன. 'காதம்பரி', 'மாகம்' இந்த நூல்களின் சாயை கம்பராமாயணத்தின் மீது படர்வதைக் காண்கிறோம். கம்பர் புதிதாகக் கற்பனை செய்தவை என்று சிலர் கருதுகிற பொருள்களுக்கெல்லாம் பண்டை நூல்களில் ஆதாரங்கள் இருக்கின்றன. ஆதாரம் இல்லாமல் இவர் ஒன்றும் செய்யவில்லை என்று கூறலாம்.

மிகுந்த படிப்பு ஒருவரின் கவிதை ஊற்றுக்களை அடைத்துவிடும் என்பார்கள். ஆனால் இந்த உண்மை கம்பரில் பொய்த்துவிட்டது என்று சொன்னால் அது மிகையாகாது.

தமிழ் இலக்கியத்தில் கம்பரைப் போல் முன்பும் இல்லை, பின்பும் இல்லை. இவர் வானளாவி நின்று கொண்டு ஒரு கரத்தைப் பண்டை இலக்கியத்தின்பால் நீட்டுகிறார்; மற்றொரு கரம் நவீனத்தை நோக்கி விரைகிறது. பண்டைய இலக்கியம், நவீன இலக்கியம் இந்த இரண்டு பள்ளத்தாக்குகளுக்கும் இடையே ஓர் உன்னத சிகரம் நிமிர்ந்து எழுந்து விண்ணைத் தொடுகிறது. அந்தச் சிகரந்தான் கம்பர்.

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வேண்டுமா அல்லது ஷேக்ஸ்பியர் வேண்டுமா என்ற கேள்வி எழுமானால், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை விரும்ப மாட்டேன்" என்றார் கார்லைல். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் அழிந்து போய்விடும். எங்கள் ஷேக்ஸ்பியரை விட மாட்டேன்" என்று அவர் கூறிய சுருதியில்தான் கம்பரை வியந்து நோக்கிய ஒரு புலவர் பாடுகிறார்:

இம்பர் நாட்டின் செல்வமெலாம்
எய்தி யரசாண் டிருந்தாலும்
உம்பர் நாட்டிற் கற்பகக்கா
வோங்குநீழ லிருந்தாலும்
செம்பொன் மேருவனைய புயத்
திறல்சே ரிராமன் றிருக்கதையில்
கம்பநாடன் கவிதை யிற்போற்
கற்றோர்க் கிதயங் களியாதே.

இப்படிப் புகழ்ந்து பாடப் பெற்ற கம்பரும் வால்மீகி படைத்த மாபெருங் காப்பியத்தைக் கண்டு வியந்து ஒரு பெரு வியப்பில் ஆழ்ந்துவிட்டார் என்பதை அவர் இசைத்த அவை அடக்கப் பாடல்களின் வாயிலாக நாம் அறிகிறோம்:

...கோதில் யாழ்
நறையடுத்த
அசுண நன்மாச்செவிப்
பறையடுத்தது
போலுமேன் பாவரோ."
பித்தர் சொன்னவும்
பேதையர் சொன்னவும்
பத்தர் சொன்னவும்
பன்னப் பெறுபவோ?

அறையும் ஆடரங்கும்
படப் பிள்ளைகள்
தறையிற் கீறிடில்
தச்சருங் காய்வரோ
இறையு ணானமி
லாதஎன் புன்கவி
முறையினூ லுணர்ந்
தாரு முனிவரோ?

என்ற அடிகள் வால்மீகி பால் கம்பர் வைத்த மதிப்பையும் அச்சத்தோடு அந்தப் பெருங் காவியத்தை அணுகுகிற இவர் மனத்தின் நிலையையும் உலகங் கேட்க முரசடிக்கின்றன. ஒரு மகா கவி தான் மற்றொரு கவியின் உள்ளத்தை உள்ளபடி அறிய முடியும். வால்மீகியைப்பற்றி மற்றவர்கள் பேசுகிற பேச்சு நமக்குத் தேவையில்லை. கம்பர் தரும் மதிப்புரையே போதும்.

இத்தகைய பழுத்த அநுபவத்தோடும், நுண்ணிய அறிவோடும், செறிந்த கற்பனையோடும், அலைமோதி எழும் செஞ் சொற்களை எளிதில் மிகக் கவின்பெற ஆன்ற திறனோடும் எப்படிக் கம்பர் கனவு காண்கிறார் என்பதைப் பார்ப்போம்.

'சிலப்பதிகார'த்தில் மூன்று நாடுகளின் சிறப்பைப் பார்க்கிறோம். சிற்றின்பப் பெருக்கால் சோழவள நாட்டிலுள்ள புகார் அழிந்தது. அறஞ் சிதைந்ததால், பாண்டிய நாட்டிலுள்ள மதுரை தீக்கிரையாயிற்று. ஒரு பத்தினியை வணங்கிய காரணத்தால் சேர நாட்டிலுள்ள வஞ்சி மாநகர் தழைத்தது.

வால்மீகி அறத்துக்கு இருப்பிடமாக அயோத்தியை வைத்தார். ஞானத்தில் எழுந்த அருளுக்குப் பிறப்பிடமாய் மிதிலையை வகுத்தார். அறத்தையும் அருளையும் சிதைக்க முயன்ற இலங்கையைப் பாவத்துக்கு உறைவிடமாகப் படைத்தார், கம்பரும். இலங்கை மாநகரைப் பாவ பண்டாரம் என்று கூறுகிறாரன்றோ?

எந்தச் சாதியிலும் சான்றோர்கள் தோன்றுவார்கள். அறத்துக்காகப் பாடுபடுகிற அனைவரும் உடன்பிறந்தோர்கள். ஆண்டவன் இவர்கள் மூலம் அறத்தை நிலை நாட்டுகிறான். ஆண்டவனுக்கும், உண்மையை நாடுகிற உத்தமர்களுக்கும் நெருங்கிய தொடர்பு, இயற்கை எழில் நடனமாடுகிற இடத்தில்தான் நிகழ்கிறது என்பதை வால்மீகி உணர்ந்துவிட்டார். இந்தச் சுருதியில்தான் கம்பரும் பேசுகிறார்.

ஒரு நாட்டின் சிறப்பு அதன் நீர்வளம், நில வளங்களில் இல்லை. அதன் கூடகோபுரங்களில் இல்லை. சுருங்கக் கூறுமிடத்து, அதன் புறச்செல்வத்தில் இல்லை. அது தந்த சான்றோர்கள்தான் அதன் உண்மையான செல்வம் என்பதை மனத்தில் வைத்தே அறத்தில் நின்ற ஆடவர்களைப்பற்றியும், வனிதையர்களைபற்றியும் ஆற்றணி வாயிலாகக் கம்பர் கூறுகிறார்:

ஆசலம்புரி ஐம்பொறி
வாளியும்
காசலம்பு முலையவர்
கண்ணெனும்
பூசலம்பு நெறியின்
புறஞ்செலாக்
கோசலம்புனை யாற்றணி
கூறுவாம்

என்ற பாட்டு இங்கே நோக்கத்தகுந்தது. இந்த அறத்தின் அழுத்தமான அஸ்திவாரத்தின் மீதுதான் ஓர் உயர் நாகரிகம் எழ

வேண்டும் என்பதைக் கம்பர் வற்புறுத்துகிறார்.

சரயுவைச் சித்திரிக்கிற கம்பர்,

தோல்லையி லொன்றே யாகித்
துறைதோறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போற் பரந்த தன்றே

என்றும்,

தாதுகு சோலை தோறுஞ்
சண்பகக் காடு தோறும்
போதவிழ் பொய்கை தோறும்
புதுமணல் தடங்கள் தோறும்
மாதவி வேலிப் பூக
வன்தோறும் வயல்கடோறும்
ஓதிய உடம்பு தோறும்
உயிரென உலாய தன்றே

என்றும் மொழிகிறார்.

எல்லாப் பொருள்களுக்கும் அடிப்படையாய் ஓர் உயிர் ஓடுகிறது. அந்த உயிரின் உருவங்கள்தான் இந்த உலகத்தில் தோன்றுகிற உருவங்கள் என்ற முடிவுக்கு வந்த காரணத்தால், அன்புதான் எல்லாவற்றுக்கும் ஆதாரம் என்ற உண்மை இவருக்கு உதயமாயிற்று. இந்தத் தத்துவத்தை அறிய உண்மையான கல்வி வேண்டும். அந்தக் கல்வியாம் வித்திலிருந்து எல்லாம் தோன்றுகின்றன என்பதை மிகக் கவின் பெறச் சித்திரிக்கிறார் கம்பரும்:

ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்
தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண் பணைபோக்கி
அருந்தவத்தின்
சாகந் தழைத்தன் பரும்பித்
தருமம் மலர்ந்து
போகங் கனியொன்று பழுத்தது
போலு மன்றே.

இந்தக் கல்வி பெண்களுக்கும் பூத்திருந்தது. வந்தவர்க்கு ஈதலில் இந்தக் கல்வியின் பயன் அரும்பிற்று என்று கம்பர் இசைக்கிறார்.

இல்லறம் நடத்துவது மற்றவர்களின் நலத்தைக் கருதியே என்று வள்ளுவர் கூறிய பொன் மொழி இவர் மனத்தை விட்டு அகலவில்லை:

பெருந்த டங்கட்
பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும்
கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்
கீதலும் வைகலும்
விருந்து மன்றி
விளைவன யாவையே?

கம்பர் கல்வியோடு நிற்கவில்லை. உடல் நலத்தையும் பேண வேண்டும் என்று இவர் தரும் கருத்து இங்கே நோக்கத் தகுந்தது. இளைய மங்கையரும் தேகப் பயிற்சி செய்கிறார்கள்:

பந்தினை யிளையவர்
பயிலிட மயிலூர்
கந்தனை யனையவர்
கலைதெரி கழகம்
சந்தன வனமல
சண்பக வனமாம்
நந்தன வனமல
நறைவிரி புறவம்.

பெண்களைத் தூற்றின காலம் உண்டு. கம்பரோ பெண்களை மிகவும் பாராட்டிப் பேசுகிறார். பாரதிக்கு முன்பே, ஆடவர்களும் பெண்களும் சரிசமான நிலையில் இருக்க வேண்டும் என்ற தூய கனவைக் கம்பர் கண்டுவிட்டார்.

மேலும், வேந்தனின் குணங்களைப்பற்றிக் கூறும் பாடல்கள் இங்கே நோக்கத் தகுந்தவை. அறிவும் அருளும் அறமும் அமைவும் திரண்டு தயரதனிடம் தோன்றின. ‘அறத்திலும் அருளிலும்

தான் உலகத்தின் நாகரிகம் நிலை பெற்று நிற்கும்' என்று ரஸ்ஸல் சாற்றிய பொன்மொழி நம் மனத்தில் ஒலிக்காமல் போகாது. இத்தகைய உயர் குணங்கள்தான் உண்மையான சமுதாயத் தூண்கள் என்று சொன்னாலும் மிகப் பொருந்தும்.

அன்பிலே அரசன் தாய்க்கு நிகராகிறான்; நலம் அருளுவதால் தவத்துக்கு ஒப்பாகிறான். நற்கதியைத் தருவதால் சேய்க்கு ஒப்பாகி, தண்டனையை விதிப்பதால் நோய் போலும், தண்ணளி செய்வதால் மருந்துபோலும் திகழ்கிறான். நுணங்கு கேள்வியை ஆராயுமிடத்து அறிவின் வடிவாய் நிற்கிறான்.

வேந்தனின் அமைச்சர்களுடைய குணங்களும் ஆராயத் தகுந்தவை. 'அமைச்சர்க்கழகு அறிவில்லாமை' என்று இராமல், தயரதனின் மந்திரிகள் மிகவும் அறிவு வாய்ந்தவர்கள்; குலமுதல் தொன்மையையும், கலைகளின் மிகுதியையும், பல கேள்விகளின் பயனையும் அடைந்தவர்கள் தமக்கு வரும் நன்மைகள் அடியோடு அழிவதாயிருந்தாலும் நடுநிலைமையோடு நோக்குபவர்கள். மேல் விளைவை நன்கு ஆராயும் தன்மை உள்ளவர்கள்; கற்றவர்கள் மானத்தை நோக்குமிடத்துக் கவரிமா அனைய நீரார். வினையின் வந்ததாயினும் மாற்றல் ஆற்றும் தன்மை உடையவர்கள். காலம், இடம், அவைகளுக்கேற்ற கருவிகள் இவை யாவையும் நன்குணர்ந்து அரசனுக்கு வெற்றியைத் தரும் துறையில் இறங்குவபவர்கள்;

தம்முயிர்க் குறுதி எண்ணார்
தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி
விடாதுநின் றுரைக்கும் வீரர்.

அரசனுக்கு மருத்துவரைப் போலக் காட்சி அளிக்கிறார்கள். அத்தகைய அமைச்சர்களோடு அரசு செலுத்துகிற வேந்தனுக்கு 'எய் யென எழுபகை எங்குமில்லை.' ஒரு காணி நிலத்தை எப்படி ஒரு வறிஞன் கண்ணும் கருத்துமாய்க் காப்பாற்றுவானோ அப்படியே தன் ராஜ்யத்தைக் காப்பாற்றுகிறான் தயரதன்.

எய்யென எழுபகை
எங்கும் இன்மையான்
மொய்பெறத் தினவுறு
முழவுத் தோளினன்
வையக முழுவதும்
வறிஞ னோம்புமோர்
செய்யெனக் காத்தினி
தரசு செய்கின்றான்.

இப்படி அரசு புரிகிற நாட்டிலே, எல்லாவிதத் துறைகளிலும் மக்கள் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தார்கள். ஆர்னல்டு, "எல்லாம் ஒழுங்காய் முரண்பாடில்லாமல் வளர (Harmonius Development) வேண்டும்" என்று மனிதப் பண்பாட்டுக்கு இலக்கணம் கூறுகிறார். இத்தகைய வளர்ச்சி கோசல நாட்டில் இருந்தது. புற அழகோடு நிற்கவில்லை; அகவனப்பும் ஆங்கே அலர்ந்தது. 'காதைகள் சொரிவன செவிநுகர் கனிகள்' என்ற ஒரு தொடர் போதும், அந்நாட்டுக் கலைச் செல்வத்தைக் குறிப்பதற்கே. வால்மீகி 'அயோத்தியில் இந்த அணிகலன் அணியாதவர்களில்லை' என்று சித்திரிக்கிறார். அதைத் தழுவியே, கம்பர் வால்மீகியில் காணப்படும் கருத்துக்களைத் தொகுத்து மொழிகிறார். 'திருட்டுப் பயம் அயோத்தியில் இல்லை' என்கிறார் வால்மீகி.

இந்தக் கருத்தை விளக்கக் கம்பர் பின் வருமாறு இயம்புகிறார்:

கள்வா ரிலாமைப்
  பொருள்காவலு மில்லை யாதும்
கொள்வா ரிலாமைக்
  கொடுப்பார்களுமில்லை மாதோ.

கல்லாது நிற்பார்
  பிறரின்மையிற் கல்வி முற்ற
வல்லாரு மில்லை
  அவைவல்ல ரல்லாரு மில்லை
எல்லாரும் எல்லாப்
  பெருஞ்செல்வமு மெய்த லாலே
இல்லாரு மில்லை
  யுடையார் களுமில்லை மாதோ.

வண்மை யில்லையோர்
  வறுமை யின்மையால்
திண்மை யில்லை
  செறுந ரின்மையால்நேர்
உண்மை யில்லைபொய்
  யுரையிலா மையால்
ஒண்மை யில்லைபல்
  கேள்வி யோங்கலால்

கூற்ற மில்லையோர்
  குற்ற மிலாமையால்
சீற்ற மில்லைதஞ்
  சிந்தையிற் செம்மையால்
ஆற்ற நல்லறம்
  அல்ல திலாமையால்
ஏற்ற மன்றி
  யிழிதக வில்லையே.

இத்தகைய பாடல்களில் கம்பரின் கற்பனை உலகம் விரியக் காண்கிறோம். வள்ளல் தன்மை, நீசமான வறுமை என்ற அஸ்திவாரத்தின் மீதுதானே எழும்? மற்றொருவரை நாம் ஏழையாகச் செய்யாமல் இருந்தால், இரக்கம் என்பதே தோன்றாது. 'எல்லோரும் இன்புற்றிருந்தால் தயைக்கு வழி உண்டோ?' என்று பிளேக் கூறுகின்றார். இந்தக் கருத்தைக் கம்பர் எப்போதோ அறிந்துவிட்டார்!

கம்பர் அரசியலில் ஒரு புதிய பாதையை வகுத்துவிட்டார். முன்பு அரசனை உயிராகக் கருதினார்கள்.

நெல்லும் உயிரன்றே
  நீரும் உயிரன்றே
மன்ன னுயிர்த்தே
  மலர்தலை யுலகம்
அதனால்
யானுயி ரென்ப தறிகை
வேன்மிகு தானை
  வேந்தற்குக் கடனே

என்ற பாடல் நோக்கத் தகுந்தது. கம்பர் இதை முற்றும் மாற்றி விட்டார். அரசன் உயிரல்லன்; உயிரைத் தாங்கும் உடல். ஜீவநாடி ஜன சமுதாயத்தில்தான் பேசுகிறது. அதற்கு இடையூறு நிகழுமானால், மன்னனும் உடலைச் சேதித்து விடலாம். பால காண்டத்தில் அரசனைக் கூறுமிடத்து 'உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்' என்று கம்பர் கூறுகிறார்.

'வைய மன்னுயி ராகவும் மன்னுயி ருய்யத் தாங்கு முடலன்ன மன்னன்' என்ற கருத்தும் ஆராய்தற்குரியது. திருமாலின் அவதாரமான வேந்தன் விஷ்ணுவைப் போலத் தன் உதரத்தே அகில ஜீவராசிகளையும் காப்பாற்றுகிறான் என்று பொருள் கூறுவாருமுளர். ஆனால் உண்மையில் கம்பர் அரசியல் துறையில் ஒரு புரட்சிக்காரர் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

ராகவனுக்கு முடி சூட்டுவதற்கு முதல் நாள் வசிஷ்டர் கூறும் நீதி இங்கே நோக்கத் தகுந்தது. நல்

லறமும், மனச் செம்மையும் அருளும் நீங்குமேயாகில், திரிமூர்த்திகளாலும் ஒன்றும் நடைபெறுது.

உருளு நேமியும்
ஒண்கவ ரேஃகமும்
மருளில் வாணியும்
வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற
மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபின்
ஆவதுண் டாதுமே?

'அன்பிலல்லதோர் ஆக்க முண்டாகுமே' என்ற அடியை நாம் உற்றுக் கவனிக்க வேண்டும். அன்பு நெறியைப் பற்றித்தான் அனைவரும் ஒழுக வேண்டும். அன்பையும் அரசியலில் நுழைக்க வேண்டும் என்றார் கம்பரும்.

யாரொடும் பகைகோள்
இலதென்றபின்
போரொ டுங்கும்
புகழொடுங் காது

என்ற அடிகள் நம் மனத்தில் முரலாமற் போகா.

தனித்த மனிதனின் அறமும் சமுதாய அறமும் ஒன்றாய்ப் போனுல்தான் உலகத்தின் போர்கள் மாய்ந்து மறையும். தனித்த மனிதனின் அறத்தைக் கூறுகிற வள்ளுவரின் லட்சியம் வாளளாவி நிற்கிறது; அது ஏசுநாதரின் மலே உபதேசத்துக்குக் குறைந்ததில்லே என்று கூறலாம். ஆனல் பொருட்பாலில் சாணக்கிய தந்திர மணம் வீசுகிறது; ஒரு லட்சியக் குறைவைக் காண்கிறோம்.

தனித்த மனிதனின் நீதியையும் அரசியல் நீதியையும் வள்ளுவர் பிரித்துவிட்டார். இந்த இரண்டுக்கும் ஒரு பாலத்தை அமைத்து விட்டார் கம்பர். இவர் வள்ளுவரின் ஞான புத்திரர் என்பதில் சந்தேகமில்லே. ஆனல் மகன் தந்தையை வென்றபொழுது தகப்பன் பெருமிதங் கொள்ளாமற் போகான்.

'பொய்ம்மையும் வாய்மையிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்' என்ற குறளைச் சிந்தித்துப் பாருங்கள். 'இப்படி நன்மை பயக்குமா?' என்ற கேள்வி நம்முன் எழுகிறது. அப்படியே நன்மை ஏற்பட்டாலும், பொய் பொய்தானே?

மேலும், எவரெவர் அன்புப் பாதையில் நிற்கிறர்களோ அவர்களனைவரும் உடன் பிறந்தோர் என்ற கருத்தைக் கம்பர் விளக்கிக் காட்டிவிட்டார். 'குகனேடு ஐவரானேம்; சுக்கிரீவனேடு அறுவரானேம்; விபீஷணனேடு எழுவரானேம்' என்று சகோதரத் தன்மையைக் கம்பர் பெருக்கிக் கொண்டே போகிறர். 'அறத்துக்கு முன்பு மனைவியர் இல்லே; மக்களில்லே; உடன் பிறந்தோர் இல்லே' என்ற உயர்ந்த நெறியைக் கைப்பிடித்தே விபீஷணன் தன் உடன்பிறந்தானேடு அறப்போர் தொடுத்தான். இதுதான் உண்மை. இப்படிப் பாத்திரங்களைப் படைக்கும் ஆற்றலும், அரசியல் துறையில் அன்பை நுழைக்கும் மனப் பண்பும் இவருக்கு இயற்கையாகவே அமைந்தனவா? அல்லது காலம் தந்த வளங்களா? யாதோ தெரிந்திலம்.

தனித்த மனிதனின் அறத்துக்கும் சமுதாய அறத்துக்கும் இடையே உள்ள பள்ளத்துக்கு அன்புப் பாலம் அமைத்த உத்தம புருஷர் கம்பர்தான் என்று நாம் உலகங் கேட்க முரசடிப் போமாக.

இவைகளின் மூக்கும் வாலும் சிறகும் காலும் வகை வகையாயிருக்கும் காரணம் என்ன?

பறவைகள் பல விதம்

யு. ஸி. சோப்ரா

பறவைகளைப்பற்றி ஆராயும்போது, "கோழி முதலில் வந்ததா, முட்டை முதலில் வந்ததா?" என்ற ரசமான கேள்வி எழுகிறது. பதில் இதுதான்: இவை ஊர்ந்து செல்லும் இனத்தைச் சேர்ந்த பிராணிகளிலிருந்து வந்தவை. இப்போது இவை வேறு விதமாகத் தோன்றினாலும் இன்னும் சில அடையாளங்கள் இருப்பதால், இவைகளின் பூர்விகத்தைத் தெரிந்துகொள்ளலாம். மஞ்சள் பழுப்பாக இருக்கும் ஒரு வகை ஆந்தை, டார்மிகன் என்ற பறவை இவைகளுக்கு மட்டும் காலில் சிறகுகள் இருக்குமேயொழிய மற்றவைகளின் கால்களில் எல்லாம் ஊர்ந்து செல்லும் பிராணிகளைப் போலவே செதில்கள் அல்லது மடிப்புக்கள் உண்டு.



மீன் கொத்தி

பவேரியா நாட்டில் கல்லோடு கல்லாகப் பதிந்துபோன பழங் காலப் பறவையின் 'ஃபாஸில்' என்ற சின்னங்கள் கிடைத்தன. அதுதான் நமக்குத் தெரிந்த பறவைகளுக்குள் மிகப் பழமையானது. அதை 'ஆர்க்கியோப்டெரிக்ஸ்' (பழம் பறவை) என்பார்கள். அதற்கு ஊரும் பிராணிகளைப் போலவே எலும்போடு கூடிய வால் பாகம் இருந்தது. இந்த எலும்புக் கணுக்களிலிருந்து சிறகுகள் முளைத்தன. இரண்டு தாடைகளிலும் நீள வரிசையில் பதித்தாற்போல் அதற்குப் பல் உண்டு. இப்படித்தான் ஊரும் பிராணிகளுக்கும் இருக்கும். விலங்குகளுக்கு இப்படி இராது. தனித் தனியாகப் பல் பதித்திருக்கும்.

சில பறவைகளுக்கு மட்டும் உடம்பின் அளவை மீறி நீளமாகவும், சில பறவைகளுக்கு ஒரே குட்டையாகவும் வால் இருப்பானேன்? இது விநோதமாகப் படவில்லையா? ஒழுங்காகப் பறப்பதற்கே இந்த வால் உதவுகிறது; அதற்கேற்ற விதத்தில் இது அமைந்திருக்கிறது. ஆகவே, பொதுவாக மரத்தில் மெல்லிய கிளைகளில் கூடு கட்டி வாழும்

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகை (ஆங்கிலம்: 1-8-'54), கல்கத்தா.

பறவைகளுக்கும், வெகு தூரம் பறக்கும் பறவைகளுக்கும் வால் நீளமாகவும், நிலத்திலேயே பெரும்பாலும் வாழும் பறவைகளுக்கு வால் குட்டையாகவும் இருக்கும். கறுப்பும் வெளுப்பும் கலந்த நீர்ப் பறவை ஒன்றுக்கு வாலாட்டிக் குருவி என்றே கூடப் பெயர் வழங்குகிறது. இந்த வகையைச் சேர்ந்த வெள்ளை வாலாட்டிக் குருவிக்கு வால் பின்னும் நீளமாக இருக்கும். எப்போது பார்த்தாலும் இவை இரண்டுமே வாலை மேலும் கீழும் ஆட்டிக்கொண்டுதான் இருக்கும். அதிக வேகம் இல்லாமல் செல்லும் நீரோடைகளின் அருகில் இவை வசிப்பது வழக்கம். காஷ்மீரில் உள்ள ஏரிப் பக்கங்களில் இவைகளைச் சர்வ சகஜமாகக் காணலாம். அங்கே தாமரை இலைமேல் தத்தித் தாவிக்கொண்டு இவை இரை தேடுவது வழக்கம்.

ஸ்வாலோ என்ற கரிச்சான் குருவி வகையைச் சேர்ந்த பறவைகளுக்கு வால் பிளந்தாற்போல் நீண்டிருக்கும். இந்த வகையில் ‘ஸாண்ட்-மார்ட்டின்’ என்ற குருவி பெரும்பாலும் நிலத்திலேயே வசிப்பதால் வால் குட்டையாக அமைந்திருக்கிறது. ஆனாலும் அந்த இனத்தைச் சேர்ந்த மற்றப் பறவைகளைப்போல் நூற்றுக்கணக்கான மைல் வேறு இடங்களுக்குப் பறந்து செல்லும். இப்படி வால் பிளந்து இருப்பதால் வெகு சுலபமாகப் பறக்க முடிகிறது. இதைத் தவிரச் சில கரிச்சான் குருவி வகைகளுக்கு வெளிச் சிறகிலிருந்து நீண்ட தோகை தொங்குவதுண்டு.

வல்லூறு வகையைச் சேர்ந்த கெஸ்ட்ரல், ஸ்பாரோ-ஹாக் என்ற பறவைகள், சின்னஞ் சிறு பறவைகளுக்கு யமன். இந்த இரண்டுக்கும் வால் நீளமாக இருக்கும். கெஸ்ட்ரல் என்பது இரையின்மேல் பாய்வதற்குமுன் சட்டென்று வாலை விரித்து அப்படியே அந்தரத்தில் சற்று நேரம் இருக்கும்.

ரென் என்னும் குட்டை வால் குருவி வகைக்கும் இதற்கும் எவ்வளவு வித்தியாசம்! இந்த ரென், தோட்டங்களிலுள்ள புதர்களில் வசிக்கும். இது பறப்பதோ சொற்பம்; அதுவும் கொஞ்ச தூரந்தான். இதனால்தான் இப்படி வால் மிகவும் குட்டையாக இருக்கிறது.

‘டிப்பர்’ அதாவது ‘மூழ்கி’ (குப்பென்று மூழ்கி மீன் முதலியவற்றைப் பிடிப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டிருக்கவேண்டும்) என்ற பறவைக்கும் இப்படி வால் குட்டையாகத்தான் இருக்கும். இது ஆற்றங்கரையோரத்திலும் நீரோடைகளுக்கு அருகிலும் வசிக்கும். கரையோரம் சந்துபொந்துகளிலும், மற்ற இடங்களில் மரத்தின் வேர்ப்பாகத்திலும் கூடு கட்டி வாழும். நீரோடையின் நடுவில் ஏதாவது கல் கரடு இருந்தால் அதன்மேல் இருந்தபடி அழகாக ஊசலாடும். அதிகமாகப் பறக்காது; மரங்களிலும் போய்த் தங்காது. இருக்கிற நுனி வாலை வைத்துக்கொண்டு இது நன்றாகச் சமாளித்து வருகிறது. மீன்கொத்திப் பறவைக்கு மற்ற இடங்களில் அழகாகச் சிறகு இருந்தாலும், இதே காரணத்தால் தான் அதற்கு வால் குட்டையாக இருக்கிறது. கோழி இனத்தைச் சேர்ந்த க்ரவுஸ் (grouse), பார்ட்ரிட்ஜ் (partridge) என்ற

ஆந்தை

பறவைகள் தரையில் கூடு கட்டி வாழ்கின்றன; இவைகள் அதிக உயரம் பறப்பதில்லை; வாலும் குட்டையாகத்தான் இருக்கும். 'ஃபீஸண்ட்' (pheasant) என்ற பறவை பல வர்ணச் சிறகுடையது; அது தரையில் வாழும்; ஆனல் வால் மெல்லிதாகவும் நீளமாகவும் இருக்கும்; அது நடக்கும்போது பார்க்க வேண்டும்! மயில் தோகையை விரித்து ஆடும்போது எவ்வளவு பெருமையாக இருக்குமோ அதே மாதிரி இதுவும் இருக்கும். மயில் ஜோராக நடந்தாலும் நன்ருகப் பறக்காது. 'ஃபீஸண்ட்' என்ற பறவையும் மயிலும் அதிகமாக மரத்தில் தங்கியிருப்பதில்லை.

பறவைகள் எப்படிப் பறக்கின்றன என்று பார்க்கலாம். சுவாசப் பையைத் தவிர இவைகளின் உடலில் ஏழு காற்றுப் பைகளும் உண்டு. இவை மூச்சு இழுக்கும்போது அந்தப் பைகளில் காற்றுப் புகும். இவைகளின் எலும்பும் உட்புறத்தில் போலாகத்தான் இருக்கும்; மஜ்ஜையே (Marrow) இராது. இறகுகளின் அடிப்பாகமும் பெரும்பாலும் அப்படியேதான் இருக்கும். காற்றடைத்து வைத்த சிறகுக் கூடு என்றே பறவைகளைச் சொல்லலாம்; இருந்தாலும், காற்றைவிட இவை கனமானவை; எப்படியோ பூமியின் ஆகர்ஷண சக்தியை எதிர்த்து அந்தரத்தில் நிற்கின்றன! கப்பலின் அடி மரத்தோடு மற்றப் பாகங்கள் இணைந்திருப்பதுபோல் அதிகமாகப் பறக்கும் பறவைகளுக்கும் உள்ளே ஒரு வித அமைப்பு உண்டு; பறக்க உதவும் தசைநார்கள் இதோடு இணைந்திருக்கும். இந்தத் தசைநார்கள் இறக்கையைக் கீழ் நோக்கி இழுக்கும். இறக்கையின் அடிப்பாகம் சற்றுக் குழிவாக இருக்கும். இதனல் காற்று உள்ளே அதிக அளவில் புகுகிறது. மேல்பாகத்தில் சதைக்குமேல் இறகுகள் கெட்டியாகக் கவிந்திருப்பதால் காற்று உடனே வெளியே போக முடிவதில்லை. இப்படிக் கீழ் நோக்கி இறக்கை அழுந்துவதனல்தான் பறவை தொடர்ந்து முன்னேற முடிகிறது. மறுபடியும் இறக்கை மேல்பக்கம் போவது அது சமாளித்துக் கொள்வதற்காகத்தான். இறக்கையின் மேல்பாகம் உப்பலாக இருப்பதால் காற்றை அப்படி அதிகமாக எதிர்த்து நிற்கும் என்று சொல்வதற்கில்லை. மேல் இறகுகள் சற்றே பிரிந்து காற்று உள்ளே செல்ல முடிகிறது.

பறவைகள் வசிக்கும் இடத்தைக்

கும் அவைகளின் பழக்க வழக்கங்களுக்கும் ஏற்றபடி இறக்கையும் அமைந்திருக்கிறது. இவைகளில் நாலு வகை உண்டு:

(1) பரந்த வெளிகளிலோ, வீடுகளிலோ வசித்துக்கொண்டு பெரும்பாலும் ஆகாயத்திலேயே சஞ்சரிக்கும் பறவைகள்: இந்த வகையைச் சேர்ந்தவை பருந்து, வல்லூறு, ஸ்வாலோ என்ற கரிச்சான் குருவி, அதே இனத்தைச் சேர்ந்த மார்ட்டின், சேற்றிலே வசிக்கும் ஸ்னைப் என்ற நீர்ப் பறவை, கல் என்ற கடல் பறவை முதலியவை. இவைகளுக்கெல்லாம் இறக்கை நீண்டு அதன் நுனி கூர்மையாக இருக்கும்.

(2) சற்றுக் கனமான உடல் கொண்ட பறவைகளாக இருந்தாலும் வேகமாகச் செல்லக் கூடியவை: இந்த வகையைச் சேர்ந்தவை வாத்து, காட்டுப் புறா, மீன்கொத்தி, டைவர் என்னும் நீர் மூழ்கி முதலியவை. இவைகளுக்கு இறக்கை குட்டையாகவும் அதன் நுனி கூர்மையாகவும் இருக்கும்.

(3) இறக்கை நீளமாகவும் அதன் நுனி வளைவாகவும் இருக்கும் பறவைகள்: இந்த வகையைச் சேர்ந்தவை நாரை, காக்கை முதலியவை. இவை நிதானமாகச் செல்லுபவை.

(4) இறக்கை குட்டையாகவும் அதன் நுனி வளைவாகவும் இருக்கும் பறவைகள்: இந்த வகையைச் சேர்ந்தவை சின்னஞ் சிறு பறவைகள் - மரங்களிலும் புதர்களிலும், நீண்ட புல், தானியத் தாள் இவற்றின் அருகிலும் வசிக்கும் மாக்பை, ஜே, காட்டுக் கோழி, பார்ட்ரிட்ஜ், க்ரவுஸ், குயில், ஆந்தை முதலியவை.

இதிலிருந்து நீள இறக்கை இருக்கும் பறவை சட்டென்று எழும்பிப் பறக்க முடியாது என்று எளிதில் கண்டுகொள்ளலாம்.

இனி, பறவைகளின் காலைக் கவனிக்கலாம். இதிலிருந்து அவை எங்கே வசிக்கின்றன என்று அறிந்துகொள்ளலாம். பருந்து முதலியவற்றின் கால் நகம் நீண்டிருக்கும். இதனால் அவை உயிரோடுள்ள இரையைக் கெட்டியாகப் பிடித்தபடி கிழித்துத் தின்னும். கோழி இனத்தைச் சேர்ந்த பறவைகள் தரையைக் காலால் கிளறிக் கிளறித் தின்னும். ஆண் கோழிக் காலின் பின்புறம் நீண்டு மொண்டுபோல் ஒன்று முளைத்திருப்பதைக் காணலாம். பிற கோழிகளை எதிர்த்துச் சண்டையிடும்போது இதை ஆண் கோழி உபயோகிப்பது வழக்கம். ஆண் கோழிகளுக்குப் பெட்டைகள் ஏராளமாக இருக்கும். சிட்டுக் குருவி வகையைச் சேர்ந்த பறவைகள் மரக் கிளைகளில் உட்காருபவை. கிளையைப் பிடித்துக்கொள்வதற்கு ஏற்றபடி அவைகளின் கால் பாகம் அமைந்திருக்கும். மரம் ஏறும் வகையைச் சேர்ந்த மரங்கொத்தி, பச்சைக் கிளி இவைகளுக்கு, காலின் முன் பக்கம் இரண்டு விரலும், பின் பக்கம் இரண்டு விரலும் இருக்கும். ஆந்தை தன் இஷ்டம்போல் தன் பெரு விரலை முன்னும் பின்னும் திருப்ப முடியும்.

நீரில் துழாவும் பறவைகளுக்குக் காலின் அடிப்பாகம் பரந்து அகலமாக இருக்கும். கால்கள் நீண்டு வெறுந் தண்டுபோல் இருக்கும். நாரை, கொக்கு இவைகள் இந்த வகையைச் சேர்ந்தவை. நீர்த் துறை, ஆற்றங்கரையோரங்களில்



மயில்

கவனிக்கலாம்; இதைக் கொண்டு அவை என்ன இரை கொள்ளும் என்று கண்டுகொள்ளலாம்.

பருந்து, வல்லூறு, ஆந்தை, கழுகு போன்ற மாமிச பட்சிணிகளின் அலகு கொக்கிபோல் வளைந் திருக்கும். ஆனாலும் கழுகின் அலகுமட்டும் சற்று வேறு விதமாக இருக்கும். அதன் கால், உயிரோடுள்ள இரையைப் பிடிப்பதற்கேற்றபடி அமைந்திராததுதான் இதற்குக் காரணம். அதனால் செத்த பிணத்தையே அது தின்ன வேண்டியிருக்கிறது. ஆனால் கிளிக்கு மூக்கு வளைந்து இருந்தாலும் அது வேறு வகையில் அமைந் திருக்கிறது. மரத்தில் தொத்தி ஏற அது பயன் படுகிறது.

அடிப்புறம் குட்டையாகவும் உறுதியாகவும் நுனி கூர்மையாகவும் உள்ள அலகுகள் விதை, பருப்புத் தினுசுகளை உடைப்பதற்கு ஏற்றபடி அமைந்திருக்கின்றன. சிட்டுக் குருவி முதலியவை இந்த வகை அலகுள்ளவை.

வாழும் பறவைகளுக்குப் பின் விரல் இராது. நீரிலும் சரி, நிலத்திலும் சரி சகஜமாகப் புழங்கி வரும் பறவைகளின் கால்விரலில் ஒருவிதச் சவ்வு (Membrane) உண்டு. நீரில் மூழ்கும் க்ரீன் என்ற பறவைக்கு இந்தச் சவ்வு கால் விரலின் ஓரம்வரை நீண்டிருக்கும். வாத்துப்போல் நீந்தும் பறவைகளுக்குத் தொடர்ந்து சிலந்திக் கூடுபோல் விரலோடு ஒட்டிப் பரவலாக இந்தச் சவ்வு அமைந் திருக்கும். கடைசியாக, பறக்காமல் ஓடக்கூடிய நெருப்புக் கோழி முதலிய பறவைகளுக்குப் பின்பக்கம் விரல் இராது.

பறவைகளின் அலகைக்

உணவோடு மண்ணையும் நீரையும் கலந்து உட்கொண்டு, பிறகு உணவை மட்டும் வைத்துக் கொண்டு மண்ணையும் நீரையும் வெளிவிடும் வாத்தைப் போன்ற பறவைகளின் அலகு தட்டையாக இருக்கும்; அவை வெளியேறுவதற்கேற்றபடி அலகின் ஓரம் அமைந்திருப்பதே இதற்குக் காரணம். மீன் உண்ணும் வாத்தின் அலகு மெல்லிதாகவும் நீண்டும் நுனியில் ரம்பம் போலவும்

அமைந்திருக்கும். இதனால் அது பிடித்த இரை வழுக்கி விழாமல் அப்படியே உள்ளே தங்கி விடுகிறது. ஏறக்குறைய இதே மாதிரிதான் இருக்கும் நாரை, மீன்கொத்தி முதலிய பறவைகளுக்கும். பட்டாக் கத்திபோல் இவைகளுடைய அலகின் வெளிப்புறம் கூர்மையாக இருக்கும்.

மண்ணில் துழாவும் பறவைகளுக்கு அதற்கேற்றபடி அலகு அமைந்திருக்கும். அதன் நுனி இரையைத் தூக்குவதற்கு ஏற்றபடி இருக்கும்; நுனியில் மொத்தமாகச் சில நுண்ணிய நரம்புகள் குவிந்திருக்கும். புழுவோ பூச்சியோ அலகில் பட்டதும் இந்த நரம்புகள் மூலம் அவை அங்கே இருக்கும் என்ற உணர்வு பறவைகளுக்கு ஏற்படுகிறது. ஸ்நைப் என்ற பறவை இந்த வகையைச் சேர்ந்ததுதான்.

மென்மையாகவும் மிருதுவாகவும் இருக்கும் அதன் அலகுகளைப் பார்த்ததும் அந்தப் பறவை பூச்சியையோ புழுவையோ தின்று வாழும் என்று தெரிந்துகொள்ளலாம். ராபின் என்ற தேன் சிட்டு, த்ரஷ் முதலியவை இந்த இனத்தைச் சேர்ந்தவை.

பறக்கும்போதே பூச்சிகளையும் ஈ முதலியவைகளையும் பிடித்துத் தின்னும் கரிச்சான் குருவி முதலியவைகளுக்குக் குட்டை அலகும் அகன்ற வாயும் இருக்கும். வாயருகில் குத்திட்டுக்கொண்டு மயிர் அடர்த்தியாக இருக்கும்.

ஆய்ஸ்டர்-காச்சர் என்ற பறவையின் அலகு ஆப்புப்போல் இருக்கும். கடற்கரைகளில் பாறையோரம் ஒட்டிக்கொண்டிருக்கும் 'ஷெல் ஃபிஷ்' என்ற மீனைக் கொத்தித் தின்பதற்கு ஏற்றபடி இது அமைந்திருக்கிறது.

அலகு எப்படி இருந்தாலும் சரி, எந்த விதமாகவோ பறவைகள் அவைகளைக் கொண்டு கூடு கட்டிவிடும். வீவர் என்ற பறவை கூடுகளைப் பின்னியிருப்பதைப் பார்க்க வேண்டும்; பிரமாதமாக இருக்கும். இத்தனைக்கும் சாதாரணச் சிட்டுக் குருவியின் அலகைப் போலத்தான் இருக்கிறது வீவர் பறவையின் அலகு! மீன் கொத்திக்கு நீண்ட உறுதியான அலகு உண்டு; ஸாண்ட் மார்ட்டின் என்ற குருவியின் அலகு சின்னது; மிக மெல்லியது. ஆனால் இரண்டுமே பூமிக்கடியில் தோண்டிக் கூடு கட்டி வாழும்.

அதே மாதிரி ஒன்றோடொன்று சண்டையிடுவதற்காக இப்படி அலகுகள் அமைந்திருப்பதாகவும் கொள்வதற்கில்லை; ஆனாலும் சண்டை என்று ஏற்பட்டால் அலகுகளைச் சரியானபடிதான் உபயோகிக்கின்றன. ஹம்மிங் பர்டு என்ற பறவைகள் எப்போதுமே சண்டை போடும்; அதனால்தான் அவைகளில் ஆண்களுக்கு அலகு ரம்பம்போல் அமைந்திருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இருந்தாலும், பல பறவைகளுக்கு அவற்றின் அழகை உத்தேசித்தே அலகு வெவ்வேறு விதமாக அமைந்திருப்பதாகத் தோன்றுகிறது. பறவைகளில் ஆண் - பெண் இரண்டும் பரஸ்பர உருவத்தையும் வர்ணத்தையும் கண்டு மயல் கொள்கின்றன என்பது உண்மை என்று நிரூபணமானால் இந்தக் கருத்துக்கு வேறு ஆதாரம் வேண்டியதில்லை.

பிரெஞ்சுக் கதை

கோழிக் கள்ளன்

மூலம்: மொப்பஸாங்
தமிழ்: ஏ. எம். அலி

போர் நடந்து ஓய்ந்திருக்கும் இந்தோ - சீனாவில் உத்தியோகம் பார்க்கும் இந்த 'மஞ்சரி' அபிமானி, நேரே பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழ்ப் படுத்தி இந்தக் கதையை அனுப்பியிருக்கிறார்.

இன்று அவன் முடமாக, தரித்திரனாகத்தான் இருக்கிறான். ஆயினும், வாழ்க்கையின் இன்பங்களை ஒரு காலத்தில் அவனும் அநுபவித்தே இருக்கிறான்.

அவனுக்கு வயது பதினைந்தாக இருந்த காலத்தில், வார்வில் கிராம ரஸ்தாவில், ஒரு வண்டிச் சக்கரத்தின்கீழ் அவன் கால்கள் மாட்டிக்கொண்டு நெறிந்து துண்டாயின. இரண்டு தோள்களையும் தாங்கும் ஒரு ஜதை கவைக் கம்புகளை ஊன்றி ஊன்றித் தெருவில் அவன் அலைந்தான்; வீடு வீடாக ஏறி இறங்கினான். தோள் பட்டைகளின் விம்மல், அவனுடைய தலையை இரண்டு மலைகளுக்கு நடுவில் அழுத்தி வைத்திருப்பதுபோல் தோன்றச் செய்தது.

ஒரு திருநாளின்போது, சாலைப் புறமாக வந்துகொண்டிருந்தார் பீல்லத் கிராமப் பாதிரியார். புதர் அடர்ந்த ஒரு பள்ளத்தில் அவனைப் பச்சிளம் பாலகனாக அன்று அவர் கண்டெடுத்தார். இதன் காரணமாகவே 'நிகோலஸ் தஸ்ஸேன்' என்று அவனுக்குப் பெயர் இட்டார்; அநாதையாக, பிறருடைய தர்ம கைங்கர்யங்களின் ஆதரவில், கல்வியறிவு வாடையே இல்லாமல் அவன் வளர்ந்தான். கால்களை இழந்து முடவனானதும், நடைப்பிணம் ஆகிவிட்டான். கை நீட்டிப் பிச்சை வாங்குவதைத் தவிர, வேறு எதுவும் செய்ய அவனுக்குத் தெரியவில்லை.

முன்பெல்லாம், அவாரி என்ற ஒரு சீமான், தம் கோட்டையுடன் இணைந்திருந்த பண்ணையின் தோட்டத்தில் உள்ள கோழிக் கூட்டுக்கு அருகே, வைக்கோலும் உடைந்த சாமான்களும் போட்டு வைத்திருந்த ஒரு வகை இருட்டறையில் அவன் தங்கியிருக்க இடங் கொடுத்திருந்தார். உணவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்ட பஞ்ச காலத்திலுங் கூட, அங்கே அவனுக்கு ஒரு துண்டு ரொட்டியும் ஒரு டம்ளர் மதுவும் எப்படியும் கிடைத்துவிடும். அந்த வீட்டுப் பெரிய அம்மாளும், இவன் பொறுக்கி எடுப்பதற்கு வசதியாகப் பண்டம் எதையேனும் விட்டெறிவதுண்டு. ஆனால் அவளும் இப்போது இறந்துவிட்டாள்.

நாட்டுப்புறத்திலோ யாரும் எதுவும் அவனுக்குத் தருவதில்லை. அவன் என்ன புதியவனா? அவனைப்பற்றி அதிகமாக அறிந்திருந்தார்கள். நாற்பது வருஷமாக இப்படி லொடலொடக்கும் உட

லோடு தள்ளாடித் தள்ளாடி வீடு வீடாக ஏறி இறங்கும் அவனைப் பார்த்துப் பார்த்துச் சலித்துவிட்டார்கள். அவனோ, அந்த வட்டாரத்தை விட்டே அகல விரும்பவில்லை. காரணம், இந்தப் பரந்த உலகத்தில் அவன் அறிந்து வைத்திருந்த நிலப்பரப்பே அவ்வளவு தான்.

தான் பிச்சையெடுப்பதற்கும் அவன் எல்லை வகுத்திருந்தான். எந்தக் காரணம் குறித்தும் அதை அவன் கடந்ததுமில்லை; கடக்கப் பழகியதுமில்லை.

அவன் கண்ணுக்கெட்டிய தூரத்தில் பசுஞ் சுவர் போல் அணியணியாய் நிற்கும் மரங்களுக்கப்பால் உலகம் விரிந்து கிடக்கிறது என்பதே அவனுக்குத் தெரியாது. அதைப்பற்றி அவன் எண்ணியும் பார்த்ததில்லை. வயல்கரையிலும், பள்ளங்களிலும் பொழுது பட்டுப் பொழுது விடிந்தால் அவனைப் பார்த்து பார்த்துப் பண்ணைப் யாட்களெல்லாம் அலுத்துப் போனார்கள். "ஏண்டா, நாசமாய்ப் போக! இங்கே இப்படி இழுத்துக்கினு கெடக்கிறதைவிட, ஹேங்- அந்தா வேறே வேறே கிராமத்துக்குப் போனா என்னவாம்?" என்றார்கள்.

இதற்கெல்லாம் அவன் பதில் கூறுவதில்லை. வேறு இடம் செல்லுவதைப்பற்றி நினைத்தாலே அவனுக்குப் பீதி உண்டாயிற்று. ஆயிரமாயிரம் தொல்லைகளைப் பற்றி எண்ணிக் கலங்கும் ஏழைகளின் அச்சம் இப்படித்தானே! புது முகங்கள், விகாரச் சொல் லம்புகள், சந்தேகப் பார்வைகள், கல்குவியல்களிலோ, முட்புதர்களிலோ பிடித்துப் போட்டு அமுக்கும் முரட்டுச் சிப்பாய்கள்-இன்னும் எத்தனையோ பயங்கள் அவன் உள்ளத்தைக் கலக்கின.

சிப்பாய்கள் வெகு தொலைவில் வருவதைக் கண்டாலே, கொளுத்தும் வெயிலில் வேர்வை ஆறாய்ப் பெருக, எங்கேயாவது ஓடி ஒளிந்து விடுவான். அதற்கு, எங்கிருந்தோ பேய்ப்பலம் ஒன்று அவனுக்கு வந்து விடும். போலிக் கால்களை மடக்கி 'லொட்' என்று தரையில் விழுந்து, பந்துபோல் உருண்டு சிற்றுருவாகி, பொந்தில் முயல் பதுங்குவதுபோல் தரையோடு தரையாக ஒளிந்து கொள்வான். போலீஸ்காரர்களுடன் அவனுக்கு எந்தப் பிணக்கும் ஏற்பட்டதில்லை. ஆனாலும் இந்த அசசம் அவன் ரத்தத்திலே தோய்ந்திருந்தது.

ஒதுங்கும் இடமோ ஒண்டும் குடிசையோ எதுவும் அவனுக்குக் கிடையாது. கோடையிலும் குளிரிலும் அவன் எந்த இடத்திலும் கிடந்து உறங்கினான். கோதுமைக் குதிர்களின் கீழ்த்தட்டோ, மாட்டுக் கொட்டகையோ எதுவும் அவனுக்குப் பழக்கமானதுதான். சொந்தக்காரர் அறியாதபடி அதிகாலையில் விழித்தெழுந்து ஓட்டமெடுப்பான். கவைக்கோல்களை உபயோகித்துப் பழகிய கைகள் பிரமிக்கத் தக்கபடி சுறுசுறுப்பாயிருந்தன. தன் கைப்பிடியின் பலத்தைக் கொண்டே எவ்வளவு உயரமான களஞ்சியத்தின்மீதும் ஏறிவிடுவான். போதிய அளவு திண்பண்டங்கள் சேர்ந்துவிட்டால் நாலைந்து நாள் அங்கிருந்து அசையாமல் தூங்கிவிடுவான்.

காட்டு விலங்கைப் போலவே அவன் காலந் தள்ளினான். மக்களின் மத்தியில் எவரோடும் பழகாமல், எவரிடமும் அன்பு செலுத்தாமல், அவன் இருந்தான். அவ

னுக்குக் கண்டாமணி என்று பட்டப் பெயர் வைத்து அழைத்தார்கள். காரணம், இரண்டு ஊன்று கோல்களுக்கு நடுவே ஆடும் ஒரு மணி போலவே அவன் தள்ளாடினன்.

சென்ற இரண்டு தினங்களாக அவன் எதுவுமே உண்ணவில்லை. யாரும் எதையும் அவனுக்கு ஈயவில்லை. முடிவாக, அவன் அங்கே இருப்பதே எவருக்கும் பிடிக்கவில்லை. அவனைத் தூரத்தில் வரக் கண்டதுமே, "இங்கேயிருந்து போவியா, இல்லியா? நாசமாய்ப் போக! மூணு நாளைக்கு முந்தி ரொட்டி குடுத்தேனே, இன்னும் என்னவாம்?" என்று கத்தினள் நாட்டுப்புறப் பெண் ஒருத்தி, ஒரு வீட்டுவாசலில் எடுப்பாக நின்றபடி.

அந்த வீட்டைக் கடந்து அடுத்த வீட்டுக்குச் சென்ருன். அங்கேயும் இதே வரவேற்புத்தான். "என்னு அநியாயங்கிறேன்! இப்படியே வருஷம் முச்சூடுமோ இந்தச் சோம்பேறிப் பய கும்பியை நாம் ரொப்பணும்?" என்று நியாயம் சொன்னுள் அந்த வீட்டுக்காரி.

என்ன செய்வது, சோம்பேறியும் தினந்தோறுந்தான் சாப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

சேன்ட்ஹலெர், வார்வில், பில்லத் ஆகிய மூன்று குப்பங்களையும் சுற்றி அலைந்துவிட்டான். ஒற்றைக் காசும் ஒரே ஒரு ரொட்டித் துண்டும் கிடைக்க வழியில்லை. தர்னெல் கிராமம் ஒன்றே பாக்கி. ஆனல் அதை அடையப் பெரிய சாலையில் இரண்டு மைல் தூரம் நடக்கவேண்டும். இரைக்க இரைக்க மிகுந்த சிரமத்துடன் ஊன்றுகோல்களை ஒன்றன்பின் ஒன்ருக எடுத்து வைத்து மெல்ல மெல்ல நடந்தான்.

இடையிடையே சாலையோரத்திலே சில நிமிஷம் உட்கார்ந்து களைப்பாறினன். துன்பத்தால் விம்மிக் கலங்கி விங்கிப் பளுவுற்று ஏங்கித் தவித்த அவன் உள்ளத்தில், பசிக்கொடுமை பெருங் கலக்கம் உண்டாக்கியது. அவன் சிந்தனையெல்லாம் சாப்பாடு ஒன்றிலேயே குவிந்திருந்தது. ஆனல், அதை எப்படி அடைவதென்றே அவனுக்குப் புரியவில்லை.

நீண்ட அந்தச் சாலையிலே மூன்று மணி நேரம் இப்படிப் புழுவாய்த் துடித்தான். கிராமத்தின் தலைவாசலில் உள்ள மரங்களைக் கண்டதும், நடையைச் சற்று எட்டிப் போட்டான்.

எதிர்ப்பட்ட ஒரு குடியானவனிடம் பிச்சை கேட்டான். "வந்துட்டியா, கிழப்பயலே! உன்னைத் தொலேச்சுத் தலை முழுக முடியாதா?" என்று அவன் 'உபசரி'த்தான்.

கண்டாமணி அவனைவிட்டு அப்பால் நகர்ந்தான். வீட்டுக்கு வீடு அவனைத் தம் சொற்களால் தாக்கினர்கள்; எதுவும் தராமல் விரட்டினர்கள். பொறுமையோடு, நம்பிக்கை தளராமலே சுற்றி வந்தான். ஒரு காசும் கிடைக்கவில்லை.

வீடுகளை விட்டுப் பண்ணைகளைச் சுற்றிவந்தான். மழைநீரில் குழைந்து சேருன களிமண் பாதையிலே ஊன்றுகோல்களை எடுத்து வைக்கவும் இயலாமல் தவித்தான்; மெய் சோர்ந்தான். எங்கும் அவனை விரட்டினர்கள்.

ஒரு காரணமும் இல்லாமல் எல்லார் இதயத்திலும் கவலையையும் குழப்பத்தையும் எழுப்பும் சில தீய நாட்கள் உண்டு. அப்படிப்பட்ட ஒன்றே அந்த நாள். கடுங் குளிரால்

உள்ளம் இறுகி, கவலை படர்ந்து, சிந்தனை சிற்றம் எய்தி, ஆத்மா அஸ்தமித்து, பிறருக்கு உதவவோ ஈயவோ கைகளும் விரிந்துகொடுக்காத ஒருநாள் அது.

தனக்குத் தெரிந்த வீடுகளையெல்லாம் சுற்றிவந்து முடித்த பிறகு, லாயர் ஷிக்கேயின் தோட்டத்து மூலை ஒன்றில் அவன் ஓய்ந்து விழுந்தான். வெகுநேரம் அசைவற்றுக் கிடந்தான். பசி காதை அடைத்தது.

ஒன்றும் புரியாமல் எதையோ எதிர்பார்ப்பது போல் அவன் கிடந்தான். வீசும் பனிக் காற்றில் வானத்திலிருந்தோ, தெய்வம் போல் ஆதரிக்கும் ஒரு வழிப் போக்கனிடமிருந்தோ கிடைக்கக் கூடிய சகாயத்தையே அவன் எதிர்பார்த்திருந்தானே ஒரு வேளை! ஒரு சிறு கூட்டமாகக் கருங்கோழிகள், ஜீவன்களை ரட்சிக்கும் பூமாதேவியின்மீது கிண்டி இரை தேடியபடி சஞ்சரித்தன; மண்ணில் கலந்திருந்த ஒரு மணிப் பயற்றை, கண்ணுக்குத் தெரியாத ஒரு நுண்புழுவை, அடிக்கடி கொத்தித் தின்றன. பிறகு, சிறகை அடித்துக்கொண்டு, அவசியம் உணவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், மேலும் மேலும் குப்பையைக் கிளறின.

உள்ளத்தில் எந்தவிதமான தீர்மானமும் இல்லாமலே, கண்டாமணி அந்தக் கோழிகளை உற்று நோக்கினான். சிந்தையின் சொற்படியல்ல; அடிவயிற்றின் அறைகூவலால் ஓர் உணர்ச்சி பளிச்சிட்டது, அவனுக்கு. காய்ந்த சுள்ளிகளில் கனல் மூட்டி, அதிலே சுட்டு வேகவைத்த ஒரு கோழி தின்பதற்கு இனிமையாகவும் ஏற்றதாகவும் இருக்குமே!

தான் செய்வது ஒரு திருட்டு என்ற எண்ணமே அவனுக்கு ஏற்படவில்லை. கையிலே ஒரு கூழாங்கல்லை எடுத்தான். சமீபத்தில் இருந்த ஒரு கோழியைக் குறி வைத்துப் பலமாக அடித்தான். அது இறக்கைகளை அடித்துக் கொண்டு அங்கேயே விழுந்தது. மற்றக் கோழிகள், தங்கள் மெல்லிய கால்களின்மேல் ஊசலாடிய படி வெருண்டு ஓடின. கண்டாமணி 'சட்'டென்று தன் ஊன்றுகோல்களின் உதவியால் எழுந்து ஓடித் தன் வேட்டைப் பொருளை எடுக்க முனைந்தான்.

தலையில் ரத்தம் கசிய விழுந்து கிடந்த கறுப்புக் கோழியை அவன் நெருங்கினான். அவ்வளவுதான் — 'பளார்' என்று முதுகில் ஓர் உதை விழுந்தது. அந்த அதிர்ச்சியில் அவனுடைய ஊன்றுகோல்கள் நழுவின. உந்திய பந்து போலப் பத்து அடிகளுக்கு அப்பால் அவன் உருண்டுபோய் விழுந்தான். லாயர் ஷிக்கே அவன்மீது பாய்ந்தார். தற்காத்துக்கொள்ள முடியாத அந்த முடவனை அடித்தும் உதைத்தும் குத்தியும் பல விதமாக வெளுத்து வாங்கி விட்டார்.

பண்ணையாட்கள் ஓடிவந்தார்கள். அவர்களும் தங்கள் எஜமானருடன் சேர்ந்துகொண்டு நொண்டியை நையப் புடைத்தார்கள். அடித்துக் கை 'அசந்'ததும் அவனைக் குண்டுக் கட்டாகக் கட்டித் தூக்கிக்கொண்டுபோய் விறகுக் கிடங்கில் போட்டு அடைத்து விட்டுப் போலீஸ்காரரை அழைக்கச் சென்றார்கள்.

கண்டாமணியின் பாதி உயிர் பறந்துவிட்டது. மேலெல்லாம் ரண வடுக்கள். பசியின் கொடு

மையையோ சொல்லி முடியாது. அசைவற்றுக் கிடந்தான் ஈரத் தரைமீது. மாலை ஆயிற்று; இரவு சூழ்ந்தது. பொழுது விடிந்தது; அவன் எதுவும் சாப்பிடவில்லை.

நடுப்பகலில் போலீஸ் வீரர்கள் வந்தார்கள்.

''எழுந்திருடா'' என்றான் அதிகாரி.

கண்டாமணியால் அசையவும் முடியவில்லை. மரக்கால்களை ஊன்றி எழுந்து நிற்க முனைந்தும் முடியவில்லை. அவன் பாசாங்கு செய்வதாக அதிகாரிகள் நினைத்தார்கள். ஆயுதம் தாங்கிய இரண்டு போலீஸ் வீரர்கள் அவனைப் பலவந்தமாகத் தூக்கி நிறுத்தினார்கள்.

''சரி, நட ஸ்டேஷனுக்கு'' என்றான் அதிகாரி.

அவன் நடந்தான். பண்ணையாட்களெல்லாம் கண்ணைத் துடைத்துக்கொண்டு பார்த்தார்கள். பெண்கள் முஷ்டியை உயர்த்தி முண்டா தட்டினார்கள். ஆண்கள் கைகொட்டி ஆரவாரம் புரிந்தார்கள். முடிவாக, நொண்டி மாட்டிக்கொண்டான். அவர்களுடைய ஆசைப்படி, தொலைந்தது சனியன்!

இரண்டு சிப்பாய்களுக்கும் நடுவே நடந்த அவனும் வெகு தூரம் சென்றுவிட்டான். அன்று மாலை சூழுமட்டும் இப்படி வழி நடந்து தவியாய்த் தவித்து, பலம் திரட்டிப் போராடினான்.

வழியில் வந்தவரெல்லாம் வாய்க்கு வந்ததைப் பேசினார்கள். அவன் செல்லும் காட்சியைக் கண்டு சிந்தை குளிர்ந்தார்கள். ''எவனோ கள்ளப் பயல்'' என்று பள்ளுப் பாடினார்கள்.

நடுச் சாமத்தில் கிராமத்தின் பிரதம ஸ்டேஷனுக்கு அவனை அழைத்து வந்தார்கள். அந்தப் பக்கத்துக்கு இதுவரையில் தன் ஆயுளில் அவன் வந்ததில்லை. நடப்பதும், நடக்கப் போவதும் அவனுக்குப் புரியவில்லை. எதிர்பாராத பயங்கரமான சம்பவங்கள், பழக்கமற்ற புது முகங்கள், புது வீடுகள் யாவும் அவனை மிரட்டின.

அவன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. எதுவும் சொல்ல அவனிடம் விஷயமும் இல்லை. எதுவும் அவனுக்குப் புரியவும் இல்லை. எத்தனையோ வருஷங்களாக எவரோடும் உரையாடிப் பழகாமல் இருந்துவிட்ட அவன், பேசும் சக்தியையே இழந்திருந்தான். தத்தித் தடுமாறி இரண்டு வார்த்தைகள் சொல்லுவதற்குக் கூட ஏற்றதாக இருக்கவில்லை, குழம்பிச் சேறான அவன் மனம்.

அவனை ஓர் இருட்டறையில் தள்ளிப் பூட்டினார்கள். அவனுக்கும் பசிக்குமே என்பதைச் சற்றும் எண்ணிப் பார்க்கவில்லை. காருண்யம் மிக்க அரசாங்கத்தின் ஊழியர்களான போலீஸ்காரர்கள், மறுநாள் விடியுமட்டும் அவனை அங்கேயே போட்டு வைத்தார்கள்.

பொழுது புலர்ந்ததும், அவனிடம் விசாரணை புரியத் தடபுடலாக அங்கே அவர்கள் வந்தபோது, கட்டாந்தரையில் கண்டாமணி செத்துக் கிடக்கக் கண்டார்கள். அவர்கள் பேராச்சரியம் அடைந்தார்கள். அவனோ? அவன்தான் இவர்களுக்காகக் காத்திராமல் எந்த விதக் கவலையும் இல்லாமல் செத்துப் போய்விட்டானே, தடிப்பயல்!

காந்தார நாட்டிலே

பரூர் சுந்தரம் ஐயர்

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் முதல் முதலாக வயலின் வாத்தியத்தைப் பரப்பிய பெருமை பரூர் சுந்தரம் ஐயரைச் சார்ந்தது. பம்பாயில் வட இந்தியர் பலருக்கு வயலின் வாசிக்க இவர் கற்றுக் கொடுத்தார். பல சமஸ்தானங்களில் பரிசும் பாராட்டும் பெற்றவர். சமீபத்தில் தாம் கண்ட புதிய நாட்டைப்பற்றி இவர் இங்கே எழுதுகிறார்.

பரூர் சுந்தரம் ஐயர்

சர்வதேசியப் பண்பாட்டை வளர்க்கும் நோக்கத்துடன், இந்திய அரசாங்கம் பிரசித்தமான சங்கீத வித்துவான்களின் கோஷ்டியொன்றைக் காபூலுக்கு அனுப்பியது. எனக்கும் என் மகன் கோபாலகிருஷ்ணனுக்கும் அதில் கலந்துகொள்ள அழைப்பு வந்தது. அந்தக் கோஷ்டியின் தலைவர் பண்டித ஓங்கார நாத் என் பழைய நண்பர்; நாங்கள் இருவரும் ஒரே வித்தியாலயத்தில் வேலை செய்தவர்கள். ஆகையால், நான் உடனே டில்லிக்குப் புறப்பட்டேன்.

எங்கள் விமானம் கராச்சியை விட்டதும், மலைத் தொடர்களும் மணற்குன்றுகளும் நிரம்பிய பிரதேசத்தில் பறந்தது. விமானத்திலிருந்து பார்த்தபோது இந்த மலைத் தொடர்கள் பூமியில் கூடார மடித்தாற்போலத் தோன்றின. ஈரானில் ஜாஹிதான் விமான நிலையத்தில் நாங்கள் போய்ச் சேர்ந்தபோது நடுப்பகல். விமான நிலையம் முழுவதும் ஈரானியப் படைகள் நிரம்பிக் கிடந்தன. நகரவாசி யாரையுமே காணவில்லை.

பிறகு இரண்டு மணி நேரம்

காப்பிரைட்: ஸண்டே கிரானிக்கிள் (ஆங்கிலம்: 3-8-'54), பம்பாய்.

பறந்து நாங்கள் ஆப்கானியப் பிரதேசத்துக்குள் புகுந்தோம். ஆப்கனிஸ்தானத்தில் இரண்டாவது பெரிய பட்டணமாகிய காந்தஹாரில் விமானம் அரை மணி நேரம் தங்கியது.

ஸ்ரீ சுந்தரம் ஐயருடைய குமாரர்கள்:
(1) ஸ்ரீ கோபாலகிருஷ்ணன்;
(2) ஸ்ரீ அனந்தராமன்

காந்தஹார் மிகப் பழங்காலத்து நகரம். அதன் முதற் பெயர் காந்தாரம் என்பது. மகாபாரதத்தில் குறிக்கப்பெற்ற புகழ் வாய்ந்த நாடு இதுதான். இந்த நாட்டு ராஜகுமாரியான காந்தாரியைத்தான் திருதராஷ்டிரன் மணந்து கொண்டான். சம்ஸ்கிருத இலக்கண கர்த்தாவான பாணினி இந்த நாட்டிலிருந்துதான் பாரத தேசத்துக்கு வந்தார் என்பது வரலாறு.

உள்ளூர்க்காரர்களும் அங்கிருந்த இந்தியர்களும் விமான நிலையத்திலேயே எங்களை வரவேற்க வந்தது எங்களுக்கு மகிழ்ச்சியையும் வியப்பையும் தந்தது. அவர்கள் எங்களுக்கு நிறைய மாதுளம் பழங்கள் கொடுத்தார்கள். காந்தஹாரில் ஹிந்துக்களின் ஜனத்தொகை போதுமான அளவுக்கு இருக்கிறது. அங்கே இரண்டு பெரிய விஷ்ணு ஆலயங்கள் இருப்பதாகவும் தெரிந்தது.

சிறிது நேரம் கழித்து நாங்கள் ஆப்கனிஸ்தானத்தின் தலைநகரமான காபூலுக்குப் பறந்து சென்றோம். பன்னீராயிரம் அடி உயரத்தில் மலைகளினூடே எங்கள் விமானம் பறந்தபோது எங்களுக்கு மிகவும் பரபரப்பாக இருந்தது. நாங்கள் காபூல் போய்ச் சேர்ந்த போது அஸ்தமிக்கும் சமயம். விமான நிலையத்தில் இந்தியத் தூதரும் அவருடைய காரியதரிசியும், கல்சரல் ரிலேஷன்ஸ் ஆபீசரும் எங்களை வரவேற்றார்கள். நாங்கள் காரில் தூதுவரின் இருப்பிடத்துக்குச் சென்று அவருடைய விருந்தாளிகளாகத் தங்கினோம்.

விமான நிலையத்திலிருந்து நகரம் வரைக்கும், பத்து மைல் தூரம், வழி நெடுக இருபுறமும் அறுபதடி உயரமுள்ள சினார் மரங்கள் இருந்தன. இந்த மரங்களை வீடு கட்டவும், எலெக்டிரிக் கம்பங்களாக நடவும் பயன்படுத்துகிறார்கள்.

நாங்கள் காபூலில் தங்கியிருந்த பொழுது அடிக்கடி நகரத்தைச் சுற்றி வந்து அங்குள்ள ஜனங்களையும் அவர்களின் வாழ்க்கையையும் கவனித்தோம். கடைத்தெரு வெங்கும் ஜனங்கள் சுறுசுறுப்பாக இருந்தார்கள். ஆப்பிள், மாதுளை, பச்சைத் திராட்சை முதலிய பழங்கள் கடைகளில் குவியல் குவியலாகக் கொட்டிக் கிடந்தன. ஆப்

கனிஸ்தானத்தில் பிரசித்தமான தூய வெள்ளைப் பெருங்காயம் பல இடங்களில் விற்றது. கடைத் தெருவில் மூட்டை மூட்டையாகச் சீரகமும் பாதாமும் அடுக்கியிருந்தன. இவை இங்கே ஏராளமாக விளையாகின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் அழகிய ஜமுக்காளங்கள் நெய்கிறார்கள். இது இங்கே முக்கியமான வீட்டுத் தொழில். இந்த ஜமுக்காளங்கள் இவற்றின் தராதரத்துக்கு ஏற்ற படி ரூ. 100 முதல் ரூ. 5,000 வரைக்கும் விலை போகின்றன.

போலீஸ்காரர்கள் கச்சிதமான உடையோடு கம்பீரமாக நடை போடுகிறார்கள். நகர எல்லைக்குள் மணிக்குப் பதினைந்து மைல் வேகத்துக்குமேல் கார்களை விட அநுமதிப்பதில்லை. ஏதாவது கார் விபத்து நேர்ந்தால், பழி முழுவதையும் டிரைவர்மேல்தான் போடுகிறார்கள்; அவன் தப்புச் செய்திருந்தாலும் சரி, செய்யாமல் இருந்தாலும் சரி. விதிகள் மிகவும் கண்டிப்பாக அநுசரிக்கப்படுகின்றன. சட்டத்தை மீறுகிறவர்களுக்குக் கடுமையான தண்டனைகள் விதிக்கிறார்கள். ஒருவன் ஒரு ரூபாயைத் திருடினால், அவனைத் தண்ணீரும் சாப்பாடும் இல்லாமல் இருபத்துநான்கு மணி நேரம் இருண்ட குகையில் அடைத்து வைப்பார்களாம்.

அரசருடைய அரண்மனை மிகவும் அழகாக இருக்கிறது; முழுவதும் சலவைக் கல்லில் கட்டியிருக்கிறது. அரண்மனைக்குள் பிரமாண்டமான கூடங்கள் இருக்கின்றன. தரையெங்கும் விலையுயர்ந்த ரத்தினக்கம்பளங்கள் விரித்திருக்கிறார்கள். அங்குள்ள பெரிய கம்பங்களைப் பார்த்தபோது, மதுரை திருமலை நாயக்கன் மஹாலிலுள்ள கம்பங்களின் ஞாபகம் எனக்கு வந்தது. இந்தக் கம்பங்கள் தோற்றத்தில் அவற்றைப் போலவே இருக்கின்றன.

சக்கரவர்த்தி ஜஹீர் ஷாவுக்கு நாடெங்கும் உயர்ந்த மதிப்பு இருக்கிறது. அவருக்கு அடுத்த படி எட்டுச் சிற்றரசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வஜீர்கள் என்று பெயர்.

நான் பார்த்தவரைக்கும் சாதியைக் கொண்டோ வேறு காரணங்களைக் கொண்டோ எங்கும் வித்தியாசம் பாராட்டப்படுவதில்லை. இந்தியாவிலிருந்து சிறையச் சீக்கியரும் பஞ்சாபியரும் இங்கே வந்து, உள்ளூர்க் காபூலியரை வேலைக்கு வைத்துக்கொண்டு வியாபாரம் செய்கிறார்கள். பளுவான மூட்டைகளைக் கோவேறு கழுதைகளும் குதிரைகளும் சுமக்கின்றன. போக்கு வரத்துக்கு எப்போதும் ஒட்டகங்களைப் பயன்படுத்துகிறார்கள்.

இங்கே ஜனத்தொகைக் கணக்கு எடுக்கும்போது பெண்களை அதில் சேர்த்துக்கொள்வதில்லையாம். பெண்களைக் கணக்கிடக்கூடாது என்று இந்த நாட்டில் விலக்கியிருப்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. இந்த நாட்டின் ஜனத்தொகை ஒரு கோடியே இருபது லட்சம் என்று சொன்னார்கள். இதில் பெண்களைச் சேர்த்திருக்கிறார்களா இல்லையா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது.

அரண்மனைக்குப் பக்கத்தில் சிவன் கோயிலும், லட்சுமி கோயிலும் இருக்கின்றன. தீபாவளியன்று நான் இரண்டு கோயில்களை

யும் தரிசித்தேன். கோயிலில் இருந்த குருக்கள் பச்சைத் திராட்சைக் கனிகளைப் பிரசாதமாகக் கொடுத்தார். காபூலுக்கு வடக்கே முந்நூறு மைல் தொலைவில் ஆப்கானிய - ருஷிய எல்லையில் சிவன் கோயில் ஒன்று இருப்பதாகவும் கேள்வியுற்றேன். காபூலுக்கு 250 மைலில் பாமிஸ்தான் என்ற இடத்தில் பௌத்த பிட்சுக்களின் விக்கிரகங்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனவாம். அங்கே சுமார் 156 அடி உயரமுள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலையும் இருக்கிறதாம்.

காபூல் மியூசியத்தில் நான் பழைய கிரேக்கக் கையெழுத்துப் பிரதிகளையும், அரசன் கனிஷ்கனுடைய நாணயங்களையும் பார்த்தேன்.

இந்தியாவில் சூரியோதயமாகி ஐம்பது நிமிஷங்கள் கழித்து இங்கே சூரியன் உதிக்கிறான். இந்த நாட்டில் குளிரும் அதிகம்; வெயிலும் அதிகம். பனிக்காலத்தில் நான்கு அடி பருமனுக்குக் கடுமையான பனி பெய்கிறது. சாலைகளில் நடக்கவே முடியாது. கார்கள் போவதற்கு முன்னால் ஒரு லாரியில் வெந்நீரைத் தெளித்துக்கொண்டு போவார்கள். இந்த வெந்நீரில் பனி உருகிய பிறகு வண்டிகள் ஓடும்.

பக்கத்திலுள்ள மலைகளிலிருந்து நகரத்துக்குக் குழாய்களில் தண்ணீர் கொண்டுவருகிறார்கள். இங்கே பேசும் முக்கியமான மொழிகள் புஷ்து, பெர்சியன், உர்து. ஏராளமான பேர் ஹிந்தி புரிந்துகொள்கிறார்கள். சிலருக்கு ஆங்கிலமும் தெரியும். ஜெர்மானிய மொழி கற்றுக்கொடுக்க ஒரு பள்ளிக்கூடமும், பிரெஞ்சு கற்பிக்க ஒரு பள்ளிக்கூடமும் இருக்கின்றன.

இந்த நாட்டில் இன்னமும் பர்தா முறை இருக்கிறது. காலேஜுக்குப் போகும் பெண்கள் தலை முதல் கால்வரைக்கும் உடம்பைக் கனமாகப் போர்த்துக்கொண்டு தான் தெருக்களில் செல்கிறார்கள்.

நாங்கள் தங்கியிருந்த பதினைந்து நாட்களில் காபூலில் எட்டுக் கச்சேரிகள் நடந்தன. நான்கு இடங்களில் நானும் என் மகன் கோபாலகிருஷ்ணனும் வயலின் கச்சேரி செய்தோம். பண்டித ஓங்காரநாத் வாய்ப்பாட்டுப் பாடினார்; அவருக்கு என் மகன் வயலின் வாசித்தான்.

இந்தியத் தூதரின் இருப்பிடத்தில் எங்களை வரவேற்றபோது முதல் கச்சேரி நிகழ்ந்தது. வெளிநாட்டு அரசியல் தந்திரிகள் நிறையப் பேர் வந்திருந்தார்கள். சக்கரவர்த்தி ஜாஹிர் ஷா தம் ஆலோசனையாளர்களோடு பிரசன்னமாகியிருந்தார். நானும் என் மகனும் வயலின் வாசித்தபோது, இந்திய சங்கீதத்துக்கும் ஆப்கானிய சங்கீதத்துக்கும் மிகுந்த ஒற்றுமை இருப்பதைக் கண்டு, சக்கரவர்த்தி வியந்தார். நம் புராணங்களில் காந்தஹாரைக் காந்தாரம் என்று குறிப்பிட்டிருப்பதையும், அது முக்கியமான ஹிந்து ராஜ்யமாக இருந்ததையும் அவருக்குத் தெரிவித்தேன். அந்த நாட்டிலிருந்து இந்தியாவுக்குக் குடியேறியவர்கள் அந்தச் சங்கீத முறையையும் கொண்டு வந்திருக்கக்கூடும் என்று சொன்னேன். அரசர் எங்கள் கச்சேரியைக் கேட்டு மகிழ்ந்து, அழகிய சால்வைகளையும் ஆட்டுத்

தோல்களையும் எங்களுக்குப் பரிசாக அளித்தார். இந்த ஆட்டுத் தோல்களைத் தொப்பியாக அணிந்து கொள்ளும்படி விநோதமாக வெட்டியிருந்தார்கள். காபூலில் இருந்த ஏராளமான உள்ளூர் வித்துவான்களும் எங்கள் கச்சேரியைக் கேட்டு ரசித்தார்கள்.

செம்பிறைச் சங்கத்துக்கு (ரெட் கிரெஸெண்ட்) உதவியாகப் பாமீர் பாலஸ்ட் தியேட்டரில் ஒரு கச்சேரியும், ஆப்கனிஸ்தானத்து ராணியும் ராஜ குடும்பத்தினரும் கேட்பதற்காக ஒரு ஸ்பெஷல் கச்சேரியும் நடந்தன. முஸ்லிம் அரசர்கள் பல பெண்களை மணந்துகொள்ளலாம் என்றாலும், இப்போதைய சக்கரவர்த்திக்கு ஒரே மனைவிதான் இருக்கிறாள். காபூலில் வாழும் இந்தியர்களும் எங்களுக்கு வரவேற்பு அளித்தார்கள்.

எங்கள் அலுவல்கள் முடிந்ததும் கைபர் கணவாய் வழியாகத் தரை மார்க்கமாக இந்தியாவுக்குத் திரும்பினோம். காபூலிலிருந்து பெஷாவர் வரைக்கும் இருநூறு மைல்கள் காரில் பிரயாணம் செய்தோம். இருபுறமும் சுமார் இரண்டாயிரம் அடி உயரமுள்ள மலைகளுக்கு நடுவே ஒரு பள்ளத்தாக்கின் வழியாக வந்தோம். காபூலிலிருந்து ஜலாலாபாத் வரைக்கும் இருபுறமும் இந்த மலைகள் இருக்கின்றன. சிந்து நதியின் கிளையான காபூல் நதிக்கரை ஓரமாகவே சாலை போகிறது. இந்த மலைகளில் நிறையக் குகைகள் இருப்பதாகவும் அவற்றில் பௌத்த பிட்சுக்கள் வாழ்ந்ததாகவும் சொன்னார்கள்.

ஆப்கனிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் எல்லையில், பெஷாவரிலிருந்து அறுபது மைல் தொலைவிலுள்ள தூர்கம் என்ற இடத்தில், ஆயுதம் தாங்கிய பாகிஸ்தான் காவலாளிகள் எங்களை வழி நடத்திச் சென்றார்கள். ஒவ்வொரு பத்தாவது மைலிலும் கடுமையான பாதுகாப்பும் பந்தோபஸ்தும் இருந்தன. பெருங்கற்கள் கொண்டு கட்டி, இரும்புச் சங்கிலிகள் பிணைத்த வாயில்கள் காவலாக நின்றன.

பெஷாவரிலிருந்து லாகூருக்கு நாங்கள் ரெயிலில் வந்தோம். ஆயுதம் தாங்கிய காவலாளிகள் மறுபடியும் எங்கள் கார்களில் லாகூரிலிருந்து பிரோஸ்புர் வரைக்கும் வந்தார்கள். பின்பு ஸத்லஜ் நதியைக் கடந்து, ரெயிலில் டில்லி வந்து சேர்ந்தோம்.

நல்ல ஜாதி

"இந்த நாய் நல்ல ஜாதிதானா?" என்று கேட்டாள், அதை வாங்க வந்த பெண்மணி.

"நல்ல ஜாதியா என்று கேட்கிறீர்களே, அம்மா! இதற்கு மட்டும் பேசத் தெரிந்திருந்தால், இது உங்களோடும் பேசாது; என்னோடும் பேசாது. தெரிந்ததா?" என்றான் நாய் வியாபாரி.

—'தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்'

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

டாக்டரும் நோயாளியும்

ஒரு கழுதை படுத்த படுக்கையாக மரணவேதனையை அநுபவித்துக்கொண்டிருந்தது. அது டாக்டரைப் பார்த்து முனகிக்கொண்டே, "இது என்ன வியாதி, சொல்லுங்கள்! என் ரத்தம் உடல் முழுவதும் சரியாக ஓடவேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அது கொஞ்சங் கொஞ்சமாக நின்று வருகிறது. நான் கைகால்களை ஆட்ட என்ன என்னவோ முயன்று பார்க்கிறேன்; ஆனால் அவை ஆடவே இல்லை. எனக்கு உயிரோடு இருக்க ஆசையாக இருக்கிறது. ஆயினும் சாவு என்னை நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஐயோ டாக்டர், என்னைப் பிழைக்கவைக்க முடியாதா?" என்று ஓலமிட்டது.

டாக்டர் யார், தெரியுமா? பெரும் புகழ் பெற்ற ஒரு குரங்கு. அது தலையை ஆட்டிக்கொண்டே, "வாஸ்தவந்தான். உடல் முழுவதும் ரத்தம் ஓடவேண்டுமென்று நீ விரும்புகிறாய்; ஆனால் அது நின்றுவருகிறது. கைகால்களை நீ அசைக்கப் பார்க்கிறாய். அவை அசைய மறுக்கின்றன. நீ வாழ விரும்புகிறாய்; ஆயினும்—" என்று இழுத்தது.

"அப்படியானால் என்ன ஆவது? ஐயோ டாக்டரே, எனக்கு உயிர் போகிறதே!"

"சரி" என்று சொல்லிக்கொண்டு நின்றது குரங்கு. அது எந்த மருந்தும் எழுதிக் கொடுக்கவில்லை; கழுதை அமைதியாகக் கண்ணை மூடுவதைப் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றது.

இனிமேல் காப்பாற்ற முடியாது என்ற நிலையில் கிடக்கிற நோயாளிகளுக்கு மருந்து எழுதிக் கொடுக்காத டாக்டர்களே உலகில் மிகவும் சிறந்தவர்கள்; பெரிய நீதிமான்கள்.

—ஃபெங் ஹ்ஸுஊபெங் ஃபெங், 'உவமைக் கதைகள்.'

October '54 Regd. No. M. 4975

மஞ்சரி

ஜய - ஐப்பசி

ஊரும் உலகமும்		1
சர்க்கார் டாக்டர்	ஸரிதா	3
கிராமத்தில் கொலை	ஸ்வதந்த்ரா	6
கிருஷ்ணவதாரம்		10
திருடர்கள்! ஜாக்கிரதை!	ஸ்த்ரீ	14
என்னைக் கேளுங்கள்	காப்டன் என். சேஷாத்திரிநாதன்	18
காமகோடி பீடம்	குமரி மலர்	22
கண்ணுக்குள்ளே கண்ணாடி		26
மறைந்த கணித மேதை		28
காந்த சக்தி	விஞ்ஞானி	33
கொழும்பு ராணி மாளிகை	ஸ்ரீலங்கா	35
விநோதமான சட்டங்கள்		38
ரெயில் வண்டியில் தொல்லை	ஸெண்ட்ரல் ரெயில்வே மகஸீன்	41
சீன நிழலாட்டம்		44
அநுபவம் கலந்த கல்வி	ஸர்வோதயம்	51
கோவா இந்துக் கோயில்கள்	கர்மவீர்	55
புயலை விரட்டிய புயல்		58
கம்பர் கண்ட கனவு	ரா. ஸ்ரீ. தேசிகன்	65
பறவைகள் பல விதம்	அமிர்தபஜார் பத்திரிகை	73
கோழிக் கள்ளன் (சிறு கதை)	மொப்பஸாங்	79
காந்தார நாட்டிலே	ஸண்டே கிரானிக்கிள்	84
டாக்டரும நோயாளியும்		(3-ஆம் அட்டை)